105

கலைமகள்

1105
13 JUN 1936
MADRAS

மாதப் பத்திரிகை

தாது ௵

வைகாசி ௴

௫௫

579

தமிழில் அரிய நூல்

த்வாதசோபநிஷத்

(12-உபநிஷத்துகள்)

1. ஐதரேய உபநிஷத்
2. தைத்திரீயோபநிஷத்
3. கடோபநிஷத்
4. சுவேதாசுவரோபநிஷத்
5. ஈசோபநிஷத்
6. ப்ருஹதாரண்யகோபநிஷத்
7. கேநோபநிஷத்
8. சாந்தோக்யோபநிஷத்
9. நிருஸிம்மதாபநீ உபநிஷத்
10. ப்ரச்நோபநிஷத்
11. முண்டகோபநிஷத்
12. மாண்டூக்யோபநிஷத்

456-பக்கங்கள் :: உயரிய கலிகோ பயிண்ட் :: ரூ. 3

சந்தாவில் பாக்கி வைத்துக்கொண்டிராத
கலைமகள் சந்தாதாரர்க்கு ரூ. 2-9-0

தபால் செலவு, வி. பி. செலவு பிரத்தியேகம்

மானேஜர், கலைமகள், மயிலாப்பூர், சென்னை.

SRIMAD

:: VALMIKI RAMAYANA ::

IN FINE DEVANAGARI CHARACTERS
IN ONE HANDY VOLUME
PRINTED ON SPECIAL PAPER
HAS 17-TRI-COLOUR ILLUSTRATIONS

Thick Paper Edition .. Rs. 4-0-0
Special Thin Paper Edition .. Rs. 5-0-0

(Postage or Railway charges extra)

The Madras Law Journal Office, Mylapore, Madras.

574

"கலைமகள்" சந்தாதாரர்களுக்கு

மாத்திரம குறைந்த விலை

1.	முருகன்- ஓர் உழவன், ரூ.	1	8	0
2.	ஸ்ரீ ஆசார்யாள்- 50 - அரிய உபந்யாஸங்கள்	1	8	0
3.	ஸ்ரீ சங்கர விஜயம்	0	10	0
4.	த்வாதச உபநிஷத்	3	0	0
5.	திருப்புகழ் விருத்தியுரை	6	0	0

மேற்கண்ட விலைகளில், 100-க்கு 20-வீதம் கமிஷன்

கலைமகள் சித்திரப் படங்கள்

ஆரம்பப் பாடசாலைகளுக்கு இன்றியமையாதவை

பத்துப் படங்கள் தயாராக இருக்கின்றன.

ஒவ்வொன்றும் அளவு 30×24 அங்குலம்.

1. காக்கா காக்கா எங்கே போனாய்? (கதை, சம்பாஷணை.)
2. பானையின் கதை.
3. ஈயின் கதை.
4. வாகனங்கள் (தரைமார்க்கம்.)
5. வாகனங்கள் (ஜலமார்க்கம் ஆகாய மார்க்கம்.)
6. அரிசியின் கதை.
7. கதை கதையாம்.
8. தபால் கார்டின் கதை.
9. என்ன காக்கா?
10. வாலறுந்த குரங்கு.

இவை கதை சொல்லுதல், படங்களை ஒட்டின சம்பாஷணை செய்தல் பொது அறிவு, வாசிப்பு இவைகளுக்கு மிகவும் ப்ரயோஜனமாக உள்ளன.

படம் ஒன்றின் விலை 9பை. 20 பிரதிகள் 0—12—0. தபாற் செலவு வேறு.

மானேஜர், கலைமகள் ஆபீஸ், மயிலாப்பூர், சென்னை.

115

இந்தியாவினதையே ஆதரியுங்கள்

இண்டஸ்டிரியல் & புருடென்ஷியல்
அஷ்ஷியூரென்ஸ்
கம்பெனியை ஆதரியுங்கள்.

தலைமை ஆபீஸ் — பம்பாய்

முழுமையும் இந்திய மயம்

பொறுப்புத் தொகைகளைத் துரிதத்துடன் பட்டுவாடா செய்வதில் பெயர்பெற்றது.

திறமையான இந்தியர்கள் மானேஜ்மெண்டிற் குட்பட்டது.
நிரந்தர அசக்தம், விஸ்தரிக்கப்பட்ட இன்ஷ்யூரென்ஸ்
முதலிய நவீன சௌகர்யங்கள்.

லைப் இன்ஷ்யூரென்ஸ் முதல் ரூ. 5 லக்ஷம்.

சென்னை இராஜதானி லோகல் மானேஜர்கள்:

சதுர்புஜதாஸ் நாராயணதாஸ் கம்பெனி லிமிடெட்,
தபால் பெட்டி 73, மதராஸ்.

ஜுபிடர் ஜெனரல்
இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி (லிமிடெட்)

யில் இன்ஷ்யூர் செய்துகொள்ளுங்கள்.

ஆயுள், மோட்டார், நெருப்பு, மோட்டார்-சைக்கிள், கப்பல், பஸ்ஸுகள், டாக்ஸிகள் இந்த இன்ஷ்யூரன்ஸ்களை நடத்துகிறது.

ஸமுத்திரம் ரயில்வே

டிரான்ஸிட் தபால் டிரான்ஸிட்

செலுத்தப்பட்ட மூலதனம்:

ஒன்றரைக் கோடி ரூபாய்

லோகல் மானேஜர்கள்:

நாராயண்தாஸ் கிர்தர்தாஸ், மதராஸ்.

எல்லா இடங்களிலும் ஏஜெண்டுகள் தேவை.

தயாராகிறது ! எதிர்பாருங்கள் !!

இல்லற வாழ்க்கையின் இன்ப துன்பங்களும் பல நீதிகளுமடங்கிய கன்னட பேசும்

சம்சார நௌகா

நாடக மேடையில் 125 நாள் தொடர்ந்து நடத்தி லக்ஷக் சணக்கான ஜனங்கள கண்டு களித்து, சகல பத்திரிகைகளாலும் நிபுணர்களாலும் புகழப்பட்டது.

இப்போது இன்னும் பலமடங்கு விமரிசையாய் திரையில் வரப்போகிறது.



நவரசங்களும் நிறைந்தது. இதில் இணைக்கப்பட்ட இன்பம் சோகம் ஹாஸ்யம் முதலிய ரசங்கள் பசலிருளாக மாறி மாறித் தங்களைப் பிரமிக்கச்செய்யும்.

படம் வேண்டுபவர் எழுதவும் :—

தேவி பிலிம்ஸ் லிமிடெட்,
501 தங்கசாலை
மதராஸ்.

Phone 8255. 3744.

Gram: Tiyenkey

கலைமகள்

தொகுதி ௯] தாது ௵ வைகாசி ௴ [பகுதி ௫௩
மே, 1936.

பொருளடக்கம்

—:o:—

1. பூண்டி அரங்கநாத முதலியார்—மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் .. 369
2. இலக்கிய நோக்கம்—சில குறிப்புக்கள்—'மணி' .. 379
3. எல்ல பூபதி—எஸ். சோமசுந்தர தேசிகர் .. 385
4. குருகூர்ச் சடகோபர்—ஆதிநாதப் பிள்ளை .. 390
5. பட்டாபிஷேக விமரிசை—பெ. நா. அப்புஸ்வாமி ஐயர், பி.ஏ., பி.எல். .. 396
6. வானமும் கடலும்—(படங்களுடன்)—ஷி .. 401
7. ஆட்டின் இயல்பு—வித்துவான் ச. கு. கணபதி ஐயர் .. 413
8. விஷ விருக்ஷம்—பங்கிம் சந்த்ர சட்டோபாத்யாய 420
9. காதலின் ஸ்வரூபம்—ஸ்ரீராம நரேஷ் த்ரிபாடீ .. 429
10. ஸுதாமயீ-II—'கிருஷ்ணதாஸன்' .. 437
11. மின்னி எலி, சின்னி எலி—பி. ஆர். இராஜ சூடாமணி .. 450
12. குறிப்பும் திரட்டும் .. 455

ஸ்ரீமத் சங்கர பகவத்பாதாசார்யாரவர்கள்
அருளிச் செய்த
ஸௌந்தர்ய லஹரீ

ஸம்ஸ்க்ருத மூலமும், தமிழில் பதவுரை, பொழிப்புரை, குறிப்புக்கள் முதலியவும் அடங்கியது.

வீரைக் கவிராஜ பண்டிதர் இயற்றிய தமிழ்ச் செய்யுள் ஸௌந்தர்ய லஹரியும் கூடியது. விலை ரூ. 2—0—0.

கிடைக்குமிடம்:

மானேஜர், ஆர்யதர்மம் ஆபீஸ், கும்பகோணம்.

21841

பூண்டி அரங்கநாத முதலியார்

மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர்

௭

பகலும் இரவும்

பத்துப்பாட்டை அச்சிடுவதற்காக நான் சிலகாலம் சென்னையில் தங்கியிருந்தேன். திருமானூர் ஸ்ரீ கிருஷ்ணையரென்பவர் எனக்கு உதவியாக உடனிருந்தார். இருவரும் ஒருநாள் காலை 8-மணிக்கு அரங்கநாத முதலியார் வீட்டுக்குச் சென்றோம். முதலியாரோடு நெடுநேரம் பேசிக்கொண்டிருந்தேன். பேச்சுமுழுவதும் தமிழின் நயத்தைப் பற்றியும் பத்துப்பாட்டின் பெருமையைப் பற்றியுமே. தமிழ்ச் செய்யுட்கள் பலவற்றைச் சொல்லிச் சில நயங்களை எடுத்துக் காட்டினேன். அவரும் சில நயங்களை உரைத்ததோடு இங்கிலீஷிலும் அப்படியே உள்ளனவென்று எடுத்துக் காட்டினார். அப்பொழுது பலர் உடனிருந்தார்கள். இப்படி நிகழ்ந்த பேச்சின் சுவையில் நான் பசியையும் மறந்தேன். முதலியாரும் உடன் இருந்தவர்களும் உண்ணச் செல்லவில்லை. பிற்பகல் 3-மணி வரையிற் பேசிக்கொண்டிருந்தோம்; பொழுது போனதே தெரியவில்லை. அப்பால் விடை பெற்றுக்கொண்டு நானும் கிருஷ்ணையரும் சென்றோம்.

அன்று இரவு கிருஷ்ணையரையும் உடன் அழைத்துக்கொண்டு எனக்குத் தெரிந்தவராகிய ஒரு கனவானிடம் சென்றேன். அக்கனவானைக் கண்டு க்ஷேமம் விசாரித்த பிறகு பத்துப்பாட்டைப்பற்றி, "இது மிகவும் பழைய காலத்து நூல். பல அரிய விஷயங்களையுடையது; இப்போது இதனை அச்சிடுவதற்

காக இங்கே வந்திருக்கிறேன்" என்று சொன்னேன். அவற்றை அவர் காதில் வாங்கிக்கொள்ளாமல், "இதெல்லாம் யாருக்குப் பிரயோசனம்? ஒருவருக்கும் புரியாத இந்தப் பாட்டு எதற்கு? பாட்டென்ருல் எளியதாக இருக்கவேண்டும். ஒரு பாட்டே இவ்வளவு நீளமாக இருக்கிறதே; யார் படிக்கப்போகிருர்கள்! நீங்கள் இந்தப் புஸ்தகத்தைப் 'புரோஸ்ஆர்டராக' (*Prose order*) எழுதிவிடுங்கள். பத்திரிகைகளிற் போட்டு விடலாம். வசன நடையில் இருப்பதுதான் புஸ்தகம். இதை அச்சிட்டு வீணே கஷ்டப்பட வேண்டாம்" என்ருர். மிகவும் சந்தோஷிப்பாரென்று எவ்வளவோ ஆவலாக இருந்த நான் அதன் அருமையை எள்ளளவும் அறியாமல் இங்ஙனம் அவர் கூறவே, விரைவிற் பேச்சை முடித்துக்கொண்டு உடனே திரும்பிவிட்டேன்.

தெருப்பக்கம் வந்ததும் கிருஷ்ணையரிடம், "பகலில் மூன்று மணி வரையில் முதலியார் வீட்டில் பட்டினியோடு பேசினபோது என்ன சந்தோஷமாக இருந்தது! இங்கே எப்படி இருக்கிறது! பகலுக்கும் இரவுக்கும் எத்தனை வித்தியாஸமோ அத்தனை வித்தியாஸம் இருக்கிறதல்லவா? ஒரே நாளில் இந்த இருவகை அனுபவத்தையும் பெற்ருேம்" என்றேன். 'நிழலருமை வெயிலில் தெரியும்' என்பதுபோல, முதலியாருடைய அருமையானது ரஸிகத்தன்மை யில்லாதவர்களுடன் பழகும்போதெல்லாம் மிகவும் நன்ருகப் புலப்பட்டு வந்தது.

10

கச்சிக் கலம்பகம்

முதலியார் செய்யுள் இயற்றும் பழக்கத்தை மேன்மேலும் விருத்தி செய்துகொண்டு வந்தார். பிரபந்தங்களைப் படிக்கும் போது அவற்றின் சொற்பொருளமைதிகளையும் நயங்களையும் கவனிப்பார். அதனல் தாமும் ஏதேனும் ஒரு பிரபந்தம் இயற்ற வேண்டுமென்னும் ஆவல் அவருக்கு உண்டாயிற்று. அக்காலத்தில் பிரஸிடென்ஸி காலேஜில் தமிழ்ப்பண்டிதராக இருந்த தொழுவூர் வேலாயுத முதலியாருடைய பழக்கத்தால் அவருக்குச் செய்யுள் செய்யும் ஆற்றல் நன்ருக உண்டாகி விருத்தியாயிற்று. இருவரும் ஒரு விஷயத்தைக் குறித்துப் போட்டிபோட்டுக் கொண்டு பாடுவார்கள். வேலாயுத முதலியாரை அவர் ஒரு கலம்பகம் பாடவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். அப்படியே அவர் திருவொற்றியூர்ப் படம்பக்கநாதரையும், கச்சி ஏகாம்பரநாதரையும் பாட்டுடைத் தலைவர்களாக வைத்து 'மகிழ்மாக் கலம்பகம்' என்ற ஒரு நூலை இயற்றினர். காயாறு ஞானசுந்தரைய

றென்ற வீரசைவக் கவிஞர் அந்நூலுக்கு அளித்த சிறப்புப் பாயிரத்தால் இதனையறியலாம். அச்செய்யுள் வருமாறு:

"பேசுமறைப் பொருளன்பர்க் கின்பூட்ட மாமகிழ்க்கீழ்ப்
பிரியா வாக்கம்
ஆசுகவி பொருந்தவருந் தமிழ்மாலை யணிகென்ன
வறிவாற் சான்ற
வீசுபுகழ்ப் பூண்டிமகி ழரங்கநா தன்சொல்ல
விளம்பி னனல்
மாசிலருட் குரவன்வழி யொழுகுவே லாயுதனும்
வாய்மை யோனே."

அந்நூல் 1887-ஆம் வருஷம் அச்சிடப்பட்டது. அது முதல் அரங்கநாத முதலியாருக்குத் தாமும் ஒரு கலம்பகம் பாட வேண்டுமென்ற எண்ணம் உண்டாயிற்று. அது முதிர முதிர ஸ்ரீ காஞ்சீபுரம் ஏகாம்பரநாதரைத் தலைவராக வைத்துக் கச்சிக்கலம் பகம் என்னும் நூலைப் பாடி முடித்தார்.

நான் விடுமுறைக் காலங்களில் கும்பகோணத்திலிருந்து சென்னைக்கு வருவேன். அந்தக் காலத்தில் பத்துப்பாட்டு அச் சிடப்பட்டு வந்தது. சென்னைக்கு வந்திருந்த காலங்களில் முதலியாரவர்களைக் காணாத நாள் இராது.

பல துறைகளிற் செல்வாக்கு மிக்க முதலியாரைப் பார்க்க வருபவர்கள் பலர். எவ்வளவோ உயர்ந்த பல பிரபுக்களும் வித்துவான்களும் வருவார்கள். அவரவர்கள் தங்கள் தங்கள் விலா ஸம் அச்சடித்த சீட்டை அனுப்பித் தெரிவித்துச் சென்று பார்த்து வருவார்கள். சில சமயங்களில் பார்க்க முடியாமல் அவர் கள் திரும்பிவிடுவதும் உண்டு. முதலியாரவர்களுடைய பலவேலை களுக்கிடையே பிறர் சென்று அவர் காலத்தை வீணாக்குதற்கு அஞ்சுவார்கள். இந்த நிலையில், நான் போகும்போது மாத்திரம் சீட்டனுப்பாமலே எந்தச் சமயமும் வரலாமென்று அவர் சொல்லி விட்டார். சிந்தாமணிப் புத்தகத்தைக் கொடுக்கவெண்ணி நான் சென்றகாலத்தில் பாராத குறைக்குப் பரிகாரம் செய்வார்போல இங்ஙனம் அவர் செய்தது எனக்கு வியப்பைத் தந்தது. நான் சென்ற காலங்களில் ஒரு தடையும் இராது. தமிழில் அவருக் கிருந்த பேரபிமானமே இதற்குக் காரணமாகும்.

முதலியார் கச்சிக் கலம்பகத்தை இயற்றிவந்த காலத்தில் நான் சில சில பாடல்களைக் கேட்டதுண்டு. எனக்குத் தெரிந்த சில கருத்துக்களையும் தெரிவிப்பேன். அவர் மிக மகிழ்ந்து

ஏற்றச் சேர்த்துக் கொள்வார். பத்துப்பாட்டு அச்சிட்டு முடிந்தவுடன் நான் கும்பகோணம் சென்றேன்.

கச்சிக்கலம்பகம் முடிவுபெற்று 1889-ஆம் வருஷம் அச்சிடப் பட்டது. அதனை அரங்கேற்றவேண்டுமென்று பல அன்பர்கள் விரும்பியபடி, தொண்டைமண்டலம் துளுவ வேளாளர் உயர்தரக் கலாசாலையில் ஒரு பெரிய சபையில் அரங்கேற்றம் தொடங்கப் பட்டது. கிறிஸ்டியன் காலேஜில் தமிழ்ப்பண்டிதராக இருந்த சின்னசாமி பிள்ளை முதன்முதலில் கலம்பகத்துக்கு உரை கூறிப் பிரசங்கம் செய்தார்; தண்டலம் பாலசுந்தர முதலியாரும், பச்சையப்பன் காலேஜ் தமிழ்ப்பண்டிதர் முருகேச முதலியாரும் பின்பு அரங்கேற்றத்தை நடத்தி வந்தார்கள். அங்ஙனம் கலம்பகம் அரங்கேறிவருவதைக் கும்பகோணத்திலிருந்த எனக்கு அரங்கநாத முதலியார் ஒரு கடித மூலமாக அறிவித்து, "நீங்கள் வந்து இதனை அரங்கேற்ற வேண்டுமென்பது இங்குள்ள பலருடைய விருப்பம்; நானும் அப்படியே விரும்புகின்றேன்" என்று அன்புடன் எழுதியிருந்தார். மெய்யன்பராகிய அவர் விரும்பும் போது மறுத்தலும் கூடுமோ? அவர் விருப்பத்தின்படியே சென்னை வந்து சேர்ந்தேன்.

சென்னையிலுள்ள பிரபுக்களும் தக்க கனவான்களும் பண்டிதர்களும் பிற அறிஞர்களும் நாள்தோறும் அரங்கேற்றத்திற்கு வந்து கூடுவார்கள். நகரத்திலுள்ள முக்கியமானவர்களை ஒருங்கே பார்க்க வேண்டுமென்றால் அந்தக் கூட்டத்திலே பார்க்கலாம். நூற்றுக்கணக்கான பேர்கள் கூடியிருப்பார்கள்.

ஒவ்வொரு நாளும் பிற்பகலில் 4 அல்லது 5 மணிக்கு அப் பாடசாலையின் வாயிலில் முதலியாருடைய வரவை எதிர்பார்த்துப் பலர் நின்றுகொண்டிருப்பார்கள். முதலியார் என்னை அழைத்துக் கொண்டு வருவார்; அங்குள்ள முக்கியமான கனவான்களை எனக்குப் பழக்கம் செய்து வைப்பார். எனக்கும் அவர்களுக்கும் பழக்கம் உண்டாவதற்கு வேறு வாய்ப்பு ஒன்றும் இல்லை; கலம்பகப் பிரசங்கத்தினாலே அவர்களுடைய பழக்கங்கள் எனக்கு உண்டாயின. முதலியாரவர்களிடம் அவர்களுக்கிருந்த பெருமதிப்பினால் அவருடைய சார்பு பெற்ற என்னிடமும் அவர்களுக்கு ஒருவகையான அன்பு உண்டாயிற்று. நாள்தோறும் சேலம் இராமசாமி முதலியாரும் வந்து கேட்டுவந்தார்.

பிரசங்கம் நடைபெறுகையில் ஒவ்வொருவரும் கலம்பகத்தின் பிரதி ஒன்றை வைத்துப் பார்த்துக்கொண்டு வருவார்கள். ஒரு பக்கம் முடிந்து மறுபக்கம் தொடங்கும்போது அந்தப் பக்கத்தை

அவ்வளவு பேரும் திருப்புவார்கள்; காகிதம் மெல்லிதானாலும் சலசலவென்று ஓர் ஓசை கேட்கும்; கூட்டத்தின் மிகுதியை அந்த ஓசையே புலப்படுத்தும்.

ஒரு நாளுக்கு ஒரு பாடலோ அல்லது ஒரு பாடலின் ஒரு பகுதியோதான் நடைபெறும். எனக்குத் தெரிந்த பல கலம்பகச் செய்யுட்களையும் பிறநூற் பாடல்களையும் நான் நினைத்தற்கு அப்பிரசங்கம் எனக்குப் பேருதவியாயிற்று. கச்சிக்கலம்பகத்திலுள்ள கருத்துக்களோடு ஒத்த பகுதிகளைப் பிறநூல்களிலிருந்து எடுத்துக் காட்டும்பொழுது அரங்கநாத முதலியார் மிக்க இன்பத்தை அடைவார்; கூட்டத்திலுள்ளவர்களும் மகிழ்வார்கள்; அவ்விரண்டும் சேர்ந்து எனக்குப் பின்னும் ஊக்கத்தை உண்டாக்கும். ஒரு நாளைக்கு மூன்றுமணிநேரம் பிரசங்கம் நடைபெறும்.

அக்காலத்தில் நான் எங்கேயாவது தெருவில் போய்க்கொண்டிருந்தால் திடீரென்று யாரேனும் ஒருவர் வந்து அஞ்சலி செய்வார்; அவரை நான் அறியாவிடினும் அவர் அன்புடனும் முகமலர்ச்சியுடனும், "கச்சிக்கலம்பகம் பிரசங்கம் செய்யும் ஐயாவல்லவா!" என்று சொல்லிப் பாராட்டுவார். இப்படிப் பலபேருடைய பாராட்டுக்களை நான் அடைந்தேன். இவ்வளவுக்கும் காரணம் அரங்கநாதமுதலியார் என்பால் வைத்துள்ள அன்பேயென்பதை நினைக்கும் போது முதலியாருடைய கம்பீரமான குணத்தில் என் உள்ளம் மூழ்கி உருகும்.

கலம்பகத்தின் 3-ஆம் செய்யுளிலிருந்து நான் அரங்கேற்றத்தைத் தொடங்கினேன். அதுகாறும் சென்னையில் கூட்டத்திற் பேசியவனல்லேனாதலின் என்னுடைய பிரசங்கம் வந்தவர்களுக்கு உவப்பாக இருக்குமோ இராதோவென்ற சந்தேகம் எனக்கு இருந்தது. மூன்றும் செய்யுளுக்கு உரை சொல்லி வருகையில்,

"அவம் புரிவார் செயலை அழித்து உவக்கும் தாண்டவர்"

என்ற பகுதிக்குத் 'தீங்கு செய்வார்களது செயல்களைப் போக்கி மகிழும் நடராசப் பெருமானெ'ன்று ஒருபொருள் கூறிவிட்டு, "அவம்புரிவார் - சைவசமயத்துக்குத் தீங்கு புரிவாராகிய ஜைனர்களுக்கு உரியதாகிய, செயலை - அருகக்கடவுள் வீற்றிருக்கும் அசோகமரத்தை, அழித்து - அச்சைனர் தோல்வியுற்றமையால் அழியச் செய்து, உவக்கும் தாண்டவரென்றும் பொருள் சொல்லலாம். ஞானசம்பந்த மூர்த்தியின் மூலமாகப் பாண்டிநாட்டுச் சமணர்களுடைய பலம் கெடும்படி செய்தது பரமேசுவாருடைய திருவருளாதலால் இங்ஙனம் கூறப்பட்டது" என்றேன். கூட்டத்தி

லுள்ள யாவரும் சந்தோஷ ஆரவாரம் செய்தார்கள். அந்த ஆரவாரம் எனக்கிருந்த ஐயத்தைப் போக்கித் துணிவை உண்டாக்கிற்று. அதன் பிறகு ஊக்கம் பெற்றுப் பிரசங்கம் செய்து வரலானேன்.

கச்சிக் கலம்பகத்தின் 8-ஆம் பாடலாகிய

(கட்டளைக் கலித்துறை)

"சுகந்தரு கச்சிப் பதிவந் தடியார் துயர்களைவோர்
நகந்தரு மெல்லியற் காம விழியிரு நாழிநெல்லால்
உகந்தரு முப்பத் திரண்டற மோம்பச்செ யுத்தமர்பா
தகந்தரு துன்பொழிப் பார்பணி வீரவர் தாண்மலரே"

என்பதற்கு உரை கூறுகையில், "உலகத்திலுள்ளாரை நோக்கி அறிவுறுத்தும் இந்தச் செய்யுள், செய்யுட்களில் ஒருவகையாகிய கட்டளைக் கலித்துறையாக அமைந்தது. யாப்பால் கட்டளைக் கலித்துறையாக அமைந்ததோடு, இன்ன வண்ணம் செய்கவென்று கட்டளையிடுவதனால் பொருளாலும் கட்டளைக் கலித்துறையாயிற்று" என்றேன். அதனைக் கேட்ட முதலியாரும் பிறரும் மகிழ்ந்தனர். வீட்டிற்கு வந்த காலத்தில், "என்னுடைய கலம்பகத்துக்கு உங்கள் பிரசங்கம் பெருமதிப்பு உண்டாக்குகிறது" என்றார் முதலியார். நான், "உங்களுடைய நூலுக்கு உரை கூற வாய்த்ததே எனக்குப் பெரும்பேறல்லவா? அதிலுள்ள நயங்களை ஏதோ எனக்குத் தெரிந்தவளவிற் சொல்லுகின்றேன். உங்களுடைய அன்பு எனக்கு ஊக்கத்தை உண்டாக்குகின்றது. இவ்வளவு தக்க மனிதர்கள் கூடும் கூட்டத்தை நான் வலிய அழைத்தாலும் கூட்ட முடியுமா? என் பேச்சைப் பொறுமையாக இருந்து கேட்பார்களா? எல்லாம் உங்களுடைய சார்பின் பலம்" என்றேன்.

மற்றொருநாள், "என் கல்லனைய மனத்தூடென் குடும்பத்தோடு மருவ வொரு தடையுமில்லை" என்ற பகுதியைப் பிரசங்கம் செய்கையில், "என் என்பதற்குச் சிறிதேனும் அறிவும் பற்றுக்கோடும் இல்லாது வருந்தும் என்னுடையவென்றும், உன் என்பதற்குப் பரம கருணாநிதியாகிய நினதென்றும் பொருள் கொள்ளலாம். 'அந் தாமரையன்னமே நின்னையானகன்றாற்றுவனே' என்ற திருக்கோவையாரின் உரையில் பேராசிரியர் நின்னை என்பதற்கு உயிரினும் சிறந்த நின்னை யென்றும், யானென்பதற்கு இருதலைப் புள்ளினோருயிரேனாகிய யானென்றும் அச்சொற்களால் விளங்கின வென்று பொருளெழுதி யிருப்பதைப் பின்பற்றி இங்ஙனம் கொள்ள நேர்ந்தது. இப்படியே கம்பர் தசரதன் கூற்றாக,

'எற்றே பகர்வே னினியா னென்னை யுன்னிற் பிரிய
வற்றே யுலக மெனினும் வானே வருந்தா தெனினும்
பொற்றே ரரசே தமியேன் புகழே யுயிரே யுன்னைப்
பெற்றே னருமை யறிவேன் பிழையேன் பிழையே னென்றான்'

என்னும் பாட்டில் உன்னை என்பதை என் உயிரினும் சிறந்த உன்னையென்றும், பெற்றேன் என்பதைப் பல ஆண்டுகள் தவஞ் செய்து பெற்றேனாகிய யானென்றும் பொருள்பட அமைத் திருக்கின்றார்'' என்றேன். முதலியார் அந்தக் கம்பராமாயணப் பாட்டில் மிக ஈடுபட்டார்.

பின்பு பி. ஏ. பரீக்ஷைக்கு அந்தப்பாட்டுள்ள பகுதி பாடமாக வந்தது. அப்போது அதனைப் பதிப்பித்தவரும் பிரஸிடென்ஸி காலேஜில் தமிழ்ப்பண்டிதராக இருந்தவரும் ஆகிய ஸ்ரீநிவாஸாசாரியாரென்பவர் முதலியாரிடம் அப்புஸ்தகத்தைக் கொடுத்தார். முதலியார் அதைப் பார்த்துவிட்டு இந்தப் பாட்டைப் பார்த்தார்; உடனே அவரைப் பார்த்து, "நீங்கள் ஒரு தப்புச் செய்துவிட்டீர்கள்!" என்றார். அவர் திடுக்கிட்டார்; "தெரிந்த வரையில் சிரமப்பட்டுக் கவனித்துத்தானே பதிப்பித்தேன். என்ன பிழை இருக்கிறது?" என்று பயந்துகொண்டு அவர் கேட்டார். "உங்களுக்கு இதைப் பதிப்பிக்கத் தெரியவில்லை, இந்தப் பாட்டை இப்படியா பதிப்பிப்பது?" என்றார் முதலியார்.

"ஏன்? சரியாகத்தானே சீர்பிரித்துப் பதிப்பித்திருக்கிறேன்."

"இதன்பாலுள்ள 'உன்னை', 'பெற்றேன்' என்ற சொற்களைத் தங்க எழுத்திலல்லவா பதிப்பித்திருக்க வேண்டும்?" என்றார் முதலியார்.

அப்பொழுதுதான் அவர் முதலியாருடைய கருத்தை யறிந்து விம்மிதமுற்றார்.

கலம்பகத்தின் 10-ஆம் செய்யுள் 'வலைச்சியார்' என்னும் தலைப்பையுடையது. மீன் விற்கும் ஒரு வலைச்சியைப் பார்த்து ஓரிளைஞன் கூறுவதாக அமைந்தது அது. அந்தப் பாட்டில் பலவகையான மீன்களின் பெயர்களும் அவற்றோடு சம்பந்த முடைய சொற்களும் தொனியில் அமைந்துள்ளன. அந்தப் பாட்டுக்கு உரை கூறுகையில், "இப்படி ஏதேனும் ஒருவகைப் பெயர்கள் தோற்றும்படி செய்யுள் செய்வது புலவர்கள் வழக்கம். தமிழ்ப் பிரபந்தங்களிலும் பிற நூல்களிலும் இத்தகைய செய்யுட்கள் பல உண்டு'' என்று சொல்லிவிட்டுக் கந்தபுராணம், சேதுபுராணம் முதலியவற்றிலிருந்து சில செய்யுட்களை எடுத்துக் காட்டினேன். அவற்றுள் பின்வரும் அழகர்கலம்பகச் செய்யுளும் ஒன்று:

"அத்தியின் மத்திய லேவிளங் காலினம் மாமகிழ
நித்திரை கொள்ளுந் தமாலத் தருவ னிவனென்பதே
சத்திய மென்னப் புளிக்கீழ் மகிழந் தமிழ்க்கரசே
நித்திய மாலழ கன்றமிழ் கூறமுன் னின்றருளே."

இதைச் சொல்லிவிட்டு, "இது நம்மாழ்வார் விஷயமானது. இந்தப் பாட்டில் நம்மாழ்வார் புளியமரத்தின் கீழ் எழுந்தருளியிருப்பதை நினைந்து வேறு மரங்களின் பெயர்களும் சொல்லளவில் தோற்றும்படி ஆசிரியர் அமைத்திருக்கின்றார். இப்பாட்டில் அத்தி, ஆல், மா, மகிழ், தமாலம், புளி, அரசு என்னும் மரப் பெயர்கள் உள்ளன. இவற்றில் ஆல், தமாலம், புளி என்பன அம்மரப்பெயர்களையே சுட்டுகின்றன. மற்றவை மரமல்லாத வேறு பொருள்களைக் குறிப்பன. இவை யாவும் சேர்ந்து இந்தப்பாட்டில் பல மரங்களின் பெயர்கள் அமைந்ததுபோலத் தோற்றச் செய்கின்றன. பொருளால் வேறுபட்டாலும் சொல்லமைதியால் ஓரினப் பெயர்களைப் போலத் தோற்றும்படி அமைக்கும் இந்த அரிய திறமை முதலியாரவர்களிடத்திலும் இருக்கின்றது" என்று பிரசங்கம் செய்து வந்தேன்.

அந்தக் கூட்டத்தில் வந்திருந்த யாவரும் தமிழ்மொழியின் அணியமைதியைப் பற்றி யறிந்து மகிழ்ந்துகொண்டிருந்தார்கள். ஸம்ஸ்கிருத வித்துவானும், பெரிய உத்தியோகஸ்தரும், ஆங்கிலப் பட்டம் பெற்றவரும், உயர்ந்த சம்பளம் வாங்கிவந்தவருமாகிய ஒருவர் அரங்கநாத முதலியார்க்கு அருகில் இருந்தார். எல்லோரும் நான் கூறிய அழகர் கலம்பகச் செய்யுள் நயத்தைக் கேட்டு மகிழ்ந்துகொண்டிருக்கையில் அவர்மட்டும் வேறு யோசனை செய்துகொண்டிருந்தார் போலும்! சிலர் ஏதேனும் ஒரு செய்யுளின் நயத்தைக் கூறுகையில் கேட்பவர்களிற் சிலர் அந்நயத்தை அறிந்து பின்பு ஆராய்ச்சி செய்வதை விட்டுவிட்டு, அவர் கூறுவதையே கவனியாமல், 'இதில் இன்னும் அதிகமாக என்ன நயம் கூறலாம்? இவர் சொல்வதில் என்ன குற்றம் இருக்கிறது?' என்று அப்போதே யோசிப்பது வழக்கம். இந்த வகையைச்சேர்ந்த அந்தக் கனவான், நான் அழகர் கலம்பகச் செய்யுளுக்கு உரை முதலியன கூறி முடித்தவுடன், "ஐயா, நீங்கள் ஒன்றைச் சொல்லத் தவறிவிட்டீர்கள்" என்றார். "அப்படியா! தயைசெய்து அதைத் தெரிவிக்கவேண்டும்" என்றேன். "அந்தப் பாட்டில் மரப்பெயர்கள் தோற்றுகின்றனவென்று அவற்றைச் சொன்னீர்களே! அத்தியின் மத்தியிலே என்பதில் உள்ள மத்தியென்னும் மரப்பெயரை ஏன் எடுத்துச் சொல்லவில்லை?" என்றார். "மத்தியென்பது ஒரு மரப்

பெயரென்று நான் கேட்டதில்லை; வடமொழியில் ஆதாரம் இருக்கிறது போலிருக்கிறது. இருந்தால் சொல்லவேண்டும்!'' என்றேன்.

அவர், "ஏன்! மத்தியார்ஜுனமென்னும் பெயர் இருக்கிறதல்லவா? மத்தி அந்த ஸ்தல விருக்ஷமல்லவா?'' என்றார். அவர் கேட்ட தொனியின் இயல்பு, 'உங்களுக்கு இந்த ஸாமான்ய விஷயங் கூடத் தெரியவில்லையே!' என்று இரங்குவதுபோல இருந்தது.

"மத்தியார்ஜுனமென்பதன் மொழிபெயர்ப்பு இடைமருதென்பது. அர்ஜுனமென்பது மருதமரத்தின் பெயர். வடக்கே மல்லிகார்ஜுனமும் தெற்கே புடார்ஜுனபுரமும் இருப்பதால், மத்தியிலுள்ள திருவிடைமருதூர் மத்தியார்ஜுனம் என்று வழங்கப்படுகின்றது. ஆகையால் மத்தியென்பது மரப்பெயரன்று'' என்றேன்.

இவற்றையெல்லாம் கவனித்துக்கொண்டிருந்த முதலியார் தடைகூறியவர்பால் சிறிது சினம் கொண்டார்; அரங்கேற்றம் முடிந்தபின்பு யாவரும் விடைபெற்றுச் சென்றார்கள்; அவ் வுத்தியோகஸ்தரை மாத்திரம் முதலியார் இருக்கச் சொல்லி அவரை நோக்கி, "இவ்வளவு பெரிய கூட்டத்தில் உங்களுடைய கௌரவத்தை நிலைநாட்டவேண்டுமென்று கருதி இப்படி ஆக்ஷேபம் செய்தீர்களோ! தெரியாத விஷயத்தைத் தெரிந்தது போலப் பாவித்துக் கொண்டு அந்த அஸ்திவாரத்தின்மேல் அநாவசியமானவற்றைச் செய்வதைக் காட்டிலும் அறியாமை வேறில்லை. நீங்கள் பெரிய உத்தியோகம் வகிப்பதனாலேயே அதிகமான அறிவு வந்துவிட்டதாக நினைத்துக் கொள்ளலாமா? அவ்வளவு பெரிய கூட்டத்தில் நீங்களாக வலிய அவமானத்தை அடைந்தீர்களே. ஒரு விஷயத்தைப் பற்றி நன்றாகத் தெரிந்துகொண்டு பேசவேண்டுமேயொழியச் சிறிதளவு தெரிந்த மாத்திரத்தில் முற்றும் தெரிந்ததாக நாமே நினைத்துக்கொண்டு பேச முன்வரக் கூடாது'' என்று கண்டித்தார். கேட்டவர், 'ஏன் இந்த ஸங்கடத்தில் அகப்பட்டுக் கொண்டோம்?' என்று எண்ணி வருந்தினார்.

இதனால் முதலியாரவர்கள் குற்றம் கண்டால் தைரியமாகக் கண்டிக்கும் இயல்பினரென்னும் எண்ணம் எனக்குப் பின்னும் உறுதிப்பட்டது.

இவ்வாறு கச்சிக்கலம்பகத்திற் பல பாடல்கள் நான் பிரசங்கம் செய்தபின்பு கும்பகோணம் செல்லவேண்டியிருந்தமையின்

முதலியாரிடம் விடைபெற்றுக்கொண்டேன். ஒருவரை யொருவர் பிரிவதில் இருவருக்கும் வருத்தம் இருந்தது; முதலியார், "மேல் நாட்டார் தம்முடைய நண்பர்களுக்குத் தம் ஞாபக அறிகுறியாக ஏதாவது ஒன்றைக் கொடுப்பது வழக்கம். அதை அனுசரித்து, உங்களுக்கு நான் ஒன்று தர எண்ணி யிருக்கின்றேன்" என்று சொல்லிப் பேனா முள் (*Nib*) வைக்கின்ற சிறிய தகர டப்பி ஒன்றைத் தந்தார். அதனை மகிழ்ச்சியுடன் பெற்றுக்கொண்டேன். இன்னும் அதனைப் பாதுகாத்து வருகின்றேன்.

நான் கும்பகோணம் சென்றபின் சோடசாவதானம் சுப்பராய செட்டியாரும், சிதம்பரம் ஈசானிய மடம் இராமலிங்கத் தம்பிரானும் கலம்பக அரங்கேற்றத்தை நிறைவேற்றினார்கள். அக்காலத்தில் இவ்வரங்கேற்றத்தைப் பற்றிச் சிறப்பித்து, தொண்டை மண்டலம் பாடசாலையில் தமிழ்ப் பண்டிதராக இருந்த திருமயிலை சண்முகம் பிள்ளை சில செய்யுட்களைப் பாடியிருக்கிறார். அக்கலம்பகத்திற்குச் சிறப்புப் பாயிரமாக நான் பாடிய சில செய்யுட்கள் உண்டு.

கலம்பகத்தின் அரங்கேற்றம் நடந்துவந்த பொழுதும் அதன் பின்பும் சென்னை நகர் முழுவதும் அதன் பேச்சாகவே இருந்தது. அந்நூல் பிறகு காலேஜ் வகுப்புக்களுக்குப் பாடமாக வைக்கப்பட்டதுண்டு.

———

இலக்கியம்

இலக்கிய நோக்கம்—சில குறிப்புகள்

'மணி'

"தெளிவுறவே யறிந்திடுதல், தெளிவுதர மொழிந்திடுதல்
சிந்திப் பார்க்கே
களிவளர வுள்ளத்தி லானந்தக் கனவுபல
காட்டல் கண்ணீர்த்
துளிவரவுள் ளுருக்குதல் ...."

என்று நமது பாரதியார் கலைத் தெய்வம் அருளும் தொழில்களை விவரிக்கையில் இலக்கியத்தின் அமைதிகளை ஒருவாறு கூறியிருக்கிறார்.

* * *

இலக்கியத்திற்கு முதல் சாதனம் வார்த்தைகள். வார்த்தைகளிடம் அன்புள்ளவனே நூலெழுதத் தகுதியுள்ளவன். வார்த்தைகளிடம் அன்பென்றால் அகராதி உருவல்ல. ஓர் எண்ணத்தை வெளியிட, அதற்குத் தகுதியாகக் கூடிய அநேகம் வார்த்தைகளில் மிகச் சிறந்த, ஆணித்தரமான, ஒரு வார்த்தையைத் தேர்ந்தெடுக்கும் திறமை மிகச் சிலருக்கே உண்டு. அந்த வார்த்தை மூலம் வெளிவந்தால் அச்சிந்தனை சோபிக்கும்; அவ் வார்த்தையை யெடுத்து விட்டு வேறு வார்த்தை போட்டுவிட்டால் அது ரஸிக்காது. தகுதியான வார்த்தைகளில் மேலான எண்ணங்களைக் கோயில் கொள்ளச் செய்வதே இலக்கியக் கலையின் முதல் நோக்கம்.

* * *

தமிழில் வார்த்தைகளில் இம்மாதிரி அன்பு கொண்டு, வார்த்தைகளினால் தம் இலக்கியத்திற்கு அழியா உயிரும் புகழும் கொடுத்தவர்களில் ஒருவர் ஔவையார். ஔவையாரின் கலைச் சிறப்புப் பெரும்பாலும் வார்த்தை யழகினால் விளைவதுதான். திருக்குறள் எழுதிய தெய்வ வள்ளுவரையும், கம்பரையும் மாத்திரமே இவ்விஷயத்தில் அவருக்கு ஒப்பாகச் சொல்லலாம். ஆங்கிலத்தில்

ஷேக்ஸ்பியரும் (*Shakespeare*), பிரஞ்சில் (*French*) அநாதோல் பிரான்சும் (*Anatole France*), இத்தாலியனில் டான்டேயும் (*Dante*) இம்மாதிரி யாசிரியர்கள்.

*　　　*　　　*

“எளிய பதங்கள், எளிய நடை, எளிதில் அறிந்து கொள்ளக் கூடிய சந்தம், இவற்றையுடைய காவிய மொன்று தற்காலத்திலே செய்துதருவோன் நமது தாய்மொழிக்குப் புதிய உயிர் தருவோனாகின்றான்” என்று பாரதியார் தம் ‘பாஞ்சாலி சபத’த்தின் முகவுரையில் கூறுகிறார். “எளிய பதங்கள், எளிய நடை”—இவைகளே இலக்கியத்திற்கு உயிர். நம் பேச்சுக்கும் எழுத்துக்கும் ஏன் வித்யாசமிருக்கவேண்டும்? பேசுவதைப் போல் எழுதினால் அது கலையாகாதா? புத்தகங்களிலிருந்து உலகை யறிந்தவனுக்கும், தன்னைச் சூழ்ந்திருக்கும் உயிர்வாழ்க்கையினின்றும் உலகை யறிந்தவனுக்கும் வித்யாச முண்டு; தான் நேரில் கண்ட அல்லது சம்பந்தப்பட்ட ஒரு விஷயத்தைப்பற்றிச் சொல்பவனுக்கும், புத்தகத்தில் படித்த ஒரு சம்பவத்தைப்பற்றிச் சொல்பவனுக்கும் வித்யாசமுண்டு. அதே வித்யாசம் தமிழில் பேசும் பாஷைக்கும் புத்தகங்களின் பாஷைக்கும் இப்போது இருக்கிறது. இவ் வித்யாசம் மறைந்து பேசுந்தமிழும் புத்தகத்தமிழும் ஒன்றாகப் போகும்போதுதான் தமிழ்த்தாய் புது வாலிப மடைவாள்.

எளிதாகவும் தெளிவாகவும் உள்ளதே நல்ல எழுத்து. ஆசிரியன் என்ன சொல்ல விரும்புகிறானோ அதை ஒரு வார்த்தைகூட குறைவு அதிகமில்லாமல் பளிங்குபோல் பளிச்சென்று காட்டுவது தான் உயர் கலை.

*　　　*　　　*

நன்றாய் எழுதக் கற்றுக்கொள்வதற்கு மொழி பெயர்ப்பு மிகச் சிறந்த கருவி. சொந்தக் கற்பனைகள்—விஷயம் எவ்வளவு நல்லதானாலும்—எழுத்துப் பழக்க மில்லாதவன் கையில் வீணாகி விடும். எனவே, ஒருவர் சொந்த மனோபாவங்களை முதலில் மனத்திலேயே வளர விட்டுவிட்டு, மொழி பெயர்ப்பில் எழுத்துப் பயிற்சி ஆரம்பிப்பது நலம். பிற பாஷையில் நல்ல ஆசிரியர்களையும், நூல்களையுந் தேர்ந்தெடுத்து அனுபவிப்பதே ஒரு நல்ல பயிற்சி. அத்தகைய புத்தகங்களைக் கசடறக் கற்பதே ஒரு கலை. அப்படிக் கற்றபின், மனத்தில் அவைகளால் எழுப்பப்படும் உணர்ச்சிகளை ஒன்றுவிடாது ஆராயவேண்டும். அவ்வுணர்ச்சிகளை, அதே வரிசையில், ஒன்றன்பின் ஒன்றாய், அதே கதை மூலம், தாம் எழுதி வெளியிடுவது நல்ல அப்பியாசமாகும்.

இம்மாதிரி பல விஷயங்களைத் திறம்பட மொழிபெயர்த்துள்ளவர்களில் பாரதியார் ஒருவர். தாகூரின் சில சிறு கதைகள் பாரதியாரின் மொழிபெயர்ப்பில் அழகு குன்றாது விளங்குகின்றன என்று சொல்லலாம். ஏன் என்று ஆராய்ந்து அறிவது கஷ்டமில்லை. எது பொருந்தும், அழகுகொடுக்கும் என்று தாகூருக்கு அவருடைய பாஷையில் உள்ள ஞானம் நம் பாரதியாருக்குத் தமிழில் உண்டு.

* * *

தற்காலத்தில் தமிழ்ப் பத்திரிகைகளில் வெளிப்படையாகவும் மறைவாகவும் எழுதப்படும் மொழிபெயர்ப்புக்களைப் பற்றி ஒன்றும் சொல்லாது விடுவதுதான் நல்லதென்றாலும், ஒரு வார்த்தை சொல்வது அவசியம். பிற பாஷைகளில் நல்ல ஆசிரியர்களைப் படிப்பதும், அவர்களுடைய கருத்துக்களில் சிலவற்றை நம் சொந்தக் கற்பனையுடன் சேர்த்துக்கொள்வதும் பாஷாபிவிருத்திக்கு அவசியமே. ஆனால் அப்படிச் செய்வதில், ஒன்று, எங்கிருந்து அக்கருத்து எடுக்கப்பட்டது என்று மறைவில்லாமல் தெரிவிக்கவேண்டும்: இது சாதாரண நாணயம்; அல்லது, அக் கருத்தின் சுயரூபத்தைத் தன் கற்பனை சக்தியிலீடுபடச்செய்து மறைக்கவேண்டும்: இது கலாசாமர்த்தியம். முதல் வழி சுலபமான வழி: யாரும் பின்பற்றக்கூடியது. இரண்டாவது வழியைக் கைப்பற்றுவது சாதாரணமாய் எல்லோருக்கும் இயலாத காரியம். இரண்டையும் பின்பற்றாது, "தெரிந்தவர்கள் தெரிந்துகொள்ளட்டும், தெரியாதவர்கள் நம் சொந்தச் சரக்குதான் என்று எண்ணிக்கொள்ளட்டும்" என்று இருப்பது..................

* * *

படித்து முடித்த பின்னும், படித்த வார்த்தைகள் மனக்காதில் இன்பமாய் ஒலிக்கவேண்டும். இலக்கியத்தால் வாசகன் மனத்திலெழும் உன்னதநிலை வார்த்தைகளின் இவ்வின்ப ஒலியைப் பின்பற்றுகிறது. இலக்கியக் கலையைப் பொறுத்தவரையில், உணர்ச்சிகள் வார்த்தைகளின் அடிமை. படித்த பின் ஏற்படும் அழகின் உணர்ச்சி பெரும்பாலும் வார்த்தைகளால் கிளறிவிடப்பட்டதே!

உயர்கலையை அனுபவிக்கும்போது நாம் ஏதோ ஒரு திடுக்கிடும் படியான சம்பவத்தின் நடுவில் எவ்வாறோ வந்து அகப்பட்டுக் கொண்டதுபோல் ஓர் உணர்ச்சியுண்டாகிறது. நமக்கு ஒருவித அறிக்கையுமில்லாது, நமக்குத் தெரியாத வேறோர் உலகத்தில் போய்ச் சேர்ந்துவிட்டாற்போல் பாவனை எழுகிறது. அப்புது உலகம், நம்முடைய தினசரி உலகத்தைப் போலில்லாது, அழகு நிறைந்து, அழகு ஒன்றே நிறைந்து, விளங்குகிறது. அவ்வுலகம்

இன்பதுன்ப மில்லாதது; என்றும் நிலையாயுள்ளது; காலத்தின் எல்லைக்கு வெளிப்பட்டது. இவைகள் எல்லாவற்றிற்கும் பதிலாக, சொல்லொணாத ஓர் உன்னத நிலையை, ஆனந்தம் பயக்கும் அழகை, பெற்றுள்ளது. காலத்தைக் கடந்து, எல்லை தொல்லை யில்லாததோர் வெளியை, ஒளியை, சென்று அடைந்துவிட்டது போல் நம்மை எண்ணச்செய்வது தான் உயர்கலைஞனின் சமர்த்து; அவன் கலை.

* * *

ஆசிரியனின் மனம், உயிர், ஆத்மா, எல்லாம் ஸ்வதந்திர மாய், சுயேச்சையாய், அவன் கலைவழியாகப் பிரகாசிக்க வேண்டும். அவனுடைய ஒவ்வோர் எழுத்திலும் கலாசக்தி, கற்பனா (*Creative*) சக்தி விளங்கவேண்டும். ஒவ்வொரு வார்த்தையின் மூலமாகவும் வாசகனுக்கு ஆசிரியனின் ஆத்ம ஸமர்ப்பணம் தெரிய வேண்டும்.

* * *

எழுதுபவன் யார் என்று வாசகனுக்குக் கவலையில்லை. நன்றாய் எழுதப்பட்டிருக்க வேண்டுமென்பது ஒன்றுதான் உயர் வாசகனின் கவலை. இலக்கியம் வேண்டியது அவசியம்—உடலுக்கு உயிர்போல. அதை யார் எழுதினால் என்ன? பாரதியார் சொல்லுவது போல,

" மனத்திலே நின்றிதனை யெழுதுகின்றாள்
மனோன்மணியென் மாசக்தி வையத்தேவி",

கலை தெய்வாம்சமாக அமைந்தால், அதற்கப்புறம் யார்பெயரால் அக்கலை வெளியானால் என்ன?

* * *

"ஆங்கொரு கல்லை வாயிலிற் படியென்
றமைத்தனன் சிற்பிமற் றொன்றை
ஓங்கிய பெருமைக் கடவுளின் வடிவென்
றுயர்த்தினன்."

ஒரே கல்லினின்றும் செதுக்கக்கூடிய இவ்விரண்டிற்கும் உள்ள வித்யாசத்தையும், ஒற்றுமையையும் ஒன்றுக்கொன்று முரண் படாது ஒரே சமயத்தில் தெளிவாகக் காட்டுவதுதான் உயர் கலை.

இது போலவே, ஆசிரியன் எழுதிய புத்தகம் எங்கிருந்தது? ஆசிரியனின் மனத்திலா? வான வெளியிலா? இல்லை! இல்லை! இக் கல்லாகிய உலகத்தில்தான்.

"யாங்கணே, எவரை, எங்ஙனம் சமைத்தற்
கெண்ணமோ, அங்ஙனம் சமைப்பான்"

கலைஞன். அவ்வகைச் சமைப்புத்தான் அவன் கலை. உலகில் எங்கும், மூலைக்கு ஒன்றாகச் சிதறிக்கிடக்கும் மனிதர்களையும், தத்துவங்களையும், எண்ணங்களையும், சந்தர்ப்பங்களையும், உண்மை யழகு பெற ஒன்றோடொன்று பொருத்தி, தனித்தனியாக எடுக்கப்பட்டவை என்று வாசகன் உணரமுடியாதபடி, வெளியிடுதல் உயர் இலக்கியம். உயிருக்கும் இலக்கியத்துக்கும் உண்மையில் ஆசிரியனின் கலையைத் தவிர வேறு வித்யாசமில்லை. இலக்கியத்திற் புகுந்துகொண்டு, அதற்கு உயிரளிக்கும் கலையை எவ்விதமாவது அப்புறப்படுத்திவிட்டால், உடனே 'சீச்சீ! இது தினம் நம் கண் முன் நடக்கும் வாழ்க்கைதானே' என்று தோன்றும். இம்மாதிரி சாதாரண சம்பவங்களை எடுத்து, அவைகளைப் பிணைத்து, அச் சேர்க்கையில் அவைகளுக்கு அழகும் மேன்மையும் அருளிச் சோபிக்கச் செய்தல் இலக்கியத்தின் முக்கிய நோக்கம்.

* * *

இலக்கியத்தின் பிறப்பும் வளர்ச்சியும் சுலபமாக அறிந்து கொள்ளக் கூடியவைகளே. முதலில் வார்த்தைகள் ஓர் உணர்ச்சிக்கு உயிரளிக்க முயன்றன. சாதாரணமாய் உணர்ச்சி ஒரு க்ஷணத்தில் பிறந்து அடுத்த க்ஷணம் மறைந்து விடும். இவ்வுணர்ச்சிக்குக் கோயிலாக விளங்கும் வார்த்தைகளும் சிறிது நேரந்தான் நீடிக்கும். இவ்வுணர்ச்சியிலீடுபட்டுத் தான் என்றும் பிறர் என்றும் அறியாது, உணர்ச்சி மேலீட்டால் பரவசமாகி, அப்பரவசத்தை உணர்த்துவது இலக்கியம். இவ்வகை இலக்கியத்துக்கு ஆங்கிலத்தில் லிரிக் (*Lyric*) என்று பெயர்.

ஒருவன் அவ்வுணர்ச்சியையே வளர்த்து நீடிக்கும்படி செய்து, சுய ஞாபகத்தையும் விட்டுவிடாது, உணர்ச்சியையும், பரவசத்தையும் தானுமறிந்து அவற்றைப் பிறரும் உணரும்படி வெளியிடல் இரண்டாவது வகைக் கலை.

அதே உணர்ச்சியை ஒருவன் தானறிவதாகவும் காட்டாமல், பிறர் சார்பாகவும் சொல்லாமல், நடு நிலையில் மனித சம்பந்தமில்லாது வைத்து விவரித்தல் மூன்றாவது வகைக் கலை.

நான்காவது, அவ்வுணர்ச்சியைத் தானறிந்து பிறருக்கும் அறிவுணர்த்தல்—இது கதா ரூபமாகி விடுகிறது. இக்கதா ரூபமான கலையில், ஆசிரியனின் உருவம் தனிப்பட நிற்பதில்லை. ஆனால் கதாபாத்திரங்களின் ரூபங்களில் ஈடுபட்டு அவைகளைச் சூழ்ந்து நிற்கும்.

கடைசியாக, தான் என்னும் தன்மையே மறைந்து போய்ப் பாத்திரங்கள் தனி மனிதர்களாக விளங்குமாறு எழுதுவது—நாடக இலக்கியம்.

உண்மையில் இவ்வைந்துவகைக் கலைகளும் தனித்தனியில்லை. ஒன்றோடொன்று கலந்து தழுவியே இலக்கியத்தில் வரும். அவைகளின் தாரதம்யம் மனோதத்வத்தில், மனோதத்வ சாஸ்திரத்தில்தான் உண்டு.

* * *

தான் என்ற தனிமை நிலை மறந்து, உலகத்தில் எல்லோருடனும் எல்லாவற்றினுடனும் எப்போது ஐக்ய மாகிறானோ, அப்போதுதான் ஓர் ஆசிரியன் உயர் கலையை விளக்கத் தகுதி யுள்ளவனாகிறான். தனி மனிதனாகத் தன்னை எண்ணியிருக்கும் வரையில், உலகத்தில் ஒரு பகுதிதான் அவனுக்குப் பிடிபடும்.

* * *

ஒரு கலையின் பூரண சக்தியையடைவது ஒரு நாளிலில்லை; ஒரு வருஷத்திலில்லை. இருபது வருஷம் ஆகலாம்; அறுபது வருஷங்களும் ஆகலாம். ஓர் ஆயுள் முழுவதும் போதாமல், (கலைப்) பயிற்சியிலேயே முடிந்துவிடலாம். அதனால் அவ்வாயுள் வீணென்றும், அப்பயிற்சி பயனற்றதென்றும் சொல்லமுடியாது. வேறு ஓர் ஆசிரியன் அப்பயிற்சிகளின் முடிவிலிருந்து ஆரம்பித்துக் கலையின் எல்லையைக் காணலாம். இல்லாவிடில் பயிற்சியிலேயே உயிரை விட்ட மனிதன் மறு ஜன்மத்தின் அப்பயிற்சிகளின் பயனையடைந்து, உயர் கலைக்கு வழி காட்டலாம்.

* * *

நல்லாசிரியனுக்குச் சக்தியான அழகைத் தவிரத் தன் கலையில் ஒரே ஒரு திருப்திதான் உண்டு. எவருக்கும் பயப்படாது உலகில் காணப்படுவதையும், நினைக்கப்படுவதையும், நடப்பதையும், தன் கலைமூலம் வெளியிடலாம். அஞ்சா நெஞ்சுடன், பயப்படாது அம்மாதிரி உண்மைகளை வெளியிடுபவனே பேராசிரியன்.

எல்ல பூபதி

எஸ். சோமசுந்தர தேசிகர்

> எல்லப்ப னம்மையப்பன் றருதிருவேங் கடநாத னெழிற்சீ ராமன்
> வல்லக்கொண் டையன் மாதை வேங்கடே சுரன்போல வரிசை செய்தே
> செல்வத்தம் பியருடனே கத்தூரி மகன்கறுப்பன் றெருவீ திக்கே
> பல்லக்குத் தான்சுமந்தா னதுநமக்கோ ராயிரம்பொன் பரிசு தானே[1].

என்பது கி. பி. 17-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்திருந்த படிக்காசுப் புலவரது வாக்காகும். இந்தச் செய்யுள் கறுப்பன் என்ற கொடையாளியினுடைய புகழைக் கூற எழுந்ததாகும். அந்தக் கறுப்பன் என்னும் பெயருடைய செல்வச் சீமானை எல்லப்பன், திருவேங்கடநாதர், மாதைவேங்கடேசுரன் முதலாயவர்களுக்கு ஒப்பாக நம் புலவர் பெருமான் கூறினார். இங்குக் கூறிய எல்லப்பன் யாவரென ஆராய்வாம்.

சைவ எல்லப்ப நாவலர்

நாம் இந்த நாள்வரையில் தெரிந்துகொண்டிருப்பது சைவ எல்லப்ப நாவலர் என்ற ஒரு புலவரையேயாகும். இவர் தஞ்சை ஜில்லாவில் காவிரிப்பூம்பட்டினத்துக்கு அருகிலுள்ள இராதாநல்லூரிலே பிறந்தவர்; கார்காத்தவேளாண் குலத்தவர்; தருமபுரம் மடத்தைச் சார்ந்து பல நூல்களுங் கற்றவர்; அருணைக் கலம்பகம் போன்ற சின்னூல்களும், செவ்வந்திப்புராணம்[2], திருச் செங்காட்டாங்குடிப்புராணம் முதலாய புராணங்களும் இயற்றியவர். இவர் சைவ என்ற அடைமொழியோடேயே அழைக்கப் பெறுவார். திருவேங்கடநாதர், வேங்கடேசுரன், கறுப்பன் முதலாய கொடையாளிகளோடு வைத்து எண்ணப்படும் தகுதிவாய்ந்தவரன்மையும் இனிது பெறப்படும். ஆகவே மேற்குறித்த செய்யுளிற் காணப்படும் எல்லபூபதி வேறொருவர் என்பது விளங்கும்.

தமிழ் நாவலர் சரிதை

தமிழ் நாவலர் சரிதையிலே உண்ணாமுலை எல்லப்ப நயினார் என்றொருவர் பெயர் காணப்படுகிறது. இவர் தமது காலத்துப் புலவரான பரமேசுவரப்புலவர்மீது,

---

1. தொண்டைமண்டலசதகம்.
2. திருவெண்காட்டுப்புராணம் முகவுரையைப் பார்க்க.

"பாழ்ப்பாய் மடத்துப் பரமாவுன் பாண்கவிதை
கேட்பாரெல் லாம்புத்தி கெட்டபேர்—தோட்பாவும்
ஓனன் விழுந்தாலு முண்டுபெரி காரமிது
வாணு ளளவே வரும்"

என்று ஒரு வெண்பா வசையாகப் பாடியுள்ளார்.

இவ்வாறு இவர் சீற்றங்கொண்டு பாடக் காரணம் இவர்களுக்குள்ள மாற்சரியமே என்பதும், அந்தப் பரமேசுவரப் புலவர் இவரை இழித்துக் கூறியதாக இருக்கவேண்டு மென்பதும் ஊகிக்க வேண்டியிருக்கின்றன. புலவர் பாடிய செய்யுள்:—

"கண்ணார் மதிக்குங் கவிராச சிங்கங் கடந்துதிரு
அண்ணு மலையப்பர் மேல்வண்ணம் பாடிமுத் தாலத்திகொண்
டெண்ணு யிரமட வார்சூழப் பல்லக்கி லேறிவந்தான்
உண்ணு முலையேல்லன் மூலைக டோறு மொதுங்கினனே"

என்பதாம்.

நூல்களிற் காணும் எல்லான்

இனி இந்த எல்லான் யாவரென நூல்களைக் கொண்டு ஆராய்வோம். வீரைக்கவிராச பண்டிதர் இயற்றிய சௌந்தரியலகரி என்ற நூலுக்குக் கண்ட வுரையில்,

"பிறைபுனைந் தருளுஞ் சிவன்றன துவகைப்
பெருக்கென வடமொழி முனிவன்
அறைசவுந் தரிய லகரியைத் தமிழா
லருள்கவி ராசபண் டிதன்றன்
நிறைமனங் கருதித் தாழைமா நகரி
னிலைபெற வாழ்கவி யெல்லான்
இறையள வெனினுந் தவறிலா துரைதேர்ந்
தெழுதின னெழில்விளக் கெனவே"

என்றொரு செய்யுள் காணப்படுகிறது. இந்தச் செய்யுளின்படி சௌந்தரியலகரிக்கு உரை கண்டவர் வடமொழி தென்மொழிகளில் வல்லவரானவரும் தாழை மாநகரினருமான எல்லான் என்று தெரிகிறது.

மலையார் பொற்பாவையொடு மகிழ்ந்தருளும் மணாளனும் தியாகப்பெருமான்மீது கோவை நூல் இரண்டு பாடப்பட்டுள. ஒன்று திருவாரூர்க்கோவை எனப் பெயர் பெறும்; மற்றொன்று திருவாரூர் ஒருதுறைக்கோவை என்று சொல்லப்படும். முன்னதான திருவாரூர்க்கோவை ஏடுகளின் இறுதியிலே,

"திணையாதி யாயிரண் டும்வழு வாமற் றெளிந்துசிவத்
திணையான தொன்றிநம் மாரூர்த் தியாக ரிணையடியே
துணையாக முத்தமிழ்க் கோவைசெய் தான்வட சொற்கடற்கும்
புணையான வன்றிரு வண்ணா மலையெல்ல பூபதியே"

என்றொரு செய்யுள் காணப்படுகிறது. இந்தச் செய்யுளினாலே திருவாரூர்க்கோவை செய்தவர் தமிழை யன்றி வடமொழியிலும் வல்லவரான திருவண்ணாமலையில் வாழும் எல்லபூபதி என்று அறியலானோம்.

சென்னை அரசாங்கத்துத் தொன்னூல் நிலயத்திலிருந்து வெளிவரும் மூவருட அறிக்கைப்பட்டியில் R 317-ஆம் எண்ணின் கீழ், திருவருணையந்தாதியைக் குறித்து எழுதப்பட்டுளது. அதனிலே, 'இது (அருணையந்தாதி) தாழைநகர் எல்லப்ப நயினார் இயற்றியது' என்று காணப்படுகிறது. அச்சிட்ட அருணையந்தாதியிலே அந்நூல் சைவ எல்லப்பநாவலர் பாடியதாகக் காணப்படினும், உண்மை பழைமையான ஏடுகளால் அறியப்படும். ஆகவே சௌந்தரியலகரி உரை, திருவாரூர்க்கோவை, அருணையந்தாதி ஆகிய நூல்களை இயற்றியவர் தாழைமாநகருடையாரும், அருணையிலே வாழ்ந்தவருமான எல்ல பூபதி என்பது பெற்றாம். இந்த நூல்களின் ஆசிரியர் முன் கூறிய தமிழ் நாவலர் சரிதையிற் கண்டவரா? என ஆராய்வோமாயின் அதுவும் ஒருவாறு விளங்காமற் போகாது.

சாஸன ஆதாரங்கள்

தஞ்சாவூர்ச் சீமையை யாண்ட செவ்வப்பநாயக்கர் என்பவர் திருவண்ணாமலையிலுள்ள அண்ணாமலையீசர்க்குச் சந்நிதியிலே குளமும் கோபுரமும் கட்டி யிருப்பதாகவும், அதனைக் குறிக்கும் கல்வெட்டுக்களின் காலம் கி. பி. 1572 என்றும் தஞ்சாவூர் ஜில்லா கஜட்டீர் [1] கூறுகின்றது. 'மற்றொரு சிலாசாஸனம் திருவண்ணாமலைக் கோயிலில் வரையப்பட்டிருக்கிறது. அச்சாஸனத்தில் கண்டிருக்கும் விஷயம் செவ்வப்ப நாயக்கர் அரசு செலுத்தும் நாளில் சகாப்தம் 1494-இல் சிவநேசன், லோகநாதன் என்ற இரண்டு சகோதரர்களால் மேற்படி கோவிலின் கோபுரம் ஒன்று கட்டி முடிக்கப்பட்டதென்பதேயாம். மேற்படி சகாப்தத்துக்குக் கிறிஸ்தாப்தம் 1572 ஆகிறது' என்று தஞ்சாவூர் நாயக்க ராஜவம்சசரித்திரச் சுருக்கம்[2] கூறும். கல்வெட்டுத் துறையாரது 1929-30-ஆம் ஆண்டு

1. தொகுதி I, பக்கம் 38.

2. இது பிரமஸ்ரீ டி. எஸ். குப்புசாமி சாஸ்திரிகளால் 1903-இல் வெளியிடப்பட்டது. பக்கம் 4.

அறிக்கையிலே 'காலிங்கராயர் உண்ணுமுலை நயினர் மகனர் எல்லப்ப நயினர் என்பார், செவ்வப்ப நாயக்கர் திருவண்ணமலையிலே அண்ணமலை யீசருடைய கோயிற் கோபுரம் கட்டியதைக் குறித்து மூன்று துதி கவிகள் பாடியுள்ளார்' என்று எழுதி யிருக்கின்றனர். அச்செய்யுட்கள் வருமாறு:—

"தானேற்ற மாகச் சகாத்தங்க ளாயிரத்து
நானூற்றுத் தொண்ணூற்று நாலின்மேல்—மானேற்ற
தென்னருணை நாதருக்குச் செவ்வமகி பன்கயிலை
அன்னதொரு கோபுரங்கண் டான்."

"மருவுசிவ நேசன் மகிழுலக நாதர்
இருவரும்பே ரன்பா லியற்ற—அருணையிலே
மானபரன் செவ்வ மகிபால [னப்]பதினென்
ருனநிலைக் கோபுரங்கண் டான்."
—எல்லப்ப நயினர் சொன்னவை.

"இருபுறமு மீன மெழுது புலியிட்
டருவரையிற் பேரெழுத வையத்—தொருவரையை
வைத்ததெனச் செவ்வ மகிபாலன் தென்னருணை
அத்தருக்குக் கோபுரங்கண் டான்."

[இது] காலிங்கராயன் உண்ணமுலை எல்லப்ப நயினர் சொன்னது.

மேற்கூறிய செய்யுட்களின் கருத்தாவது: செவ்வப்ப நாயக்கர் என்ற அரசர், சிவநேசன் உலகநாதன் என்ற இருவரைக்கொண்டு அண்ணமலையீசர் சந்நிதிக் கோபுரமொன்று பதினெரு நிலைகளை யுடையதாகச் சகம் 1494-இல் கட்டினர் என்பதைக் காளிங்க ராயன் வழியிலே வந்த உண்ணமுலை மகனர் எல்லப்ப நயினர் என்பவர் வெண்பாவிற் கூறினர் என்பது. ஆகவே தமிழ்நாவலர் சரிதையிற் கண்டவரும், நூல்களிற் கண்டவரும், கல்வெட்டிற் கண்டவரும் ஒருவரேயாவர் என்பது தெளிவாகிறது.

இவரைக் குறித்த சில செய்திகள்

இனி, இவர் எல்லான், எல்லநயினன், உண்ணமுலை எல்லப்ப நயினர், எல்ல பூபதி என்று பலவாறு அழைக்கப் பெறுவ ரென்று கண்டோம். இவர் தாழைமாநகரிலே பிறந்து, அருணைப்பதியிலே வாழ்ந்தவ ரென்பதும், அரசனல் மதிக்கப்படும் ஒரு

தலைவராக விளங்கியவர் என்பதும் இவ்வாராய்ச்சியால் கிடைத்தது. இவரது சமயம் சைவம்; குலம் வன்னிருல க்ஷத்திரியகுலம்; இவர் வடமொழி தென்மொழிகளில் வல்லவர்; இவர் இயற்றியன சௌந்தரியலகரி உரை, அருணையந்தாதி, திருவாரூர்க்கோவை, அருணாசலப் புராணம், திருவிரிஞ்சைப் புராணம் முதலியனவாம். அருணாசலப் புராணம் சைவ எல்லப்ப நாவலர் செய்ததாகக் காணப்படினும் அதற்குரிய ஆதாரம் ஒன்றும் கிடைத்திலது. நூலிலே பெயர் கூறப்படவில்லை. திரிவிரிஞ்சைப் புராணத்திலே அவையடக்கமாக,

"உற்ற செய்யுளா லருணைமா நகர்ச்சிறப் புரைத்தேன்
குற்ற மானது குணத்தவர் பொறுத்துளங் கொண்டார்
இற்றை நாளுமச் செருக்கினு விதனையு மிசைத்தேன்
கற்ற மாந்தருக் கனைத்தையும் பொறுப்பது கடனுல்"

என்ற செய்யுள் காணப்படுகிறது. சைவ எல்லப்ப நாவலர் இவைகளை யியற்றினவராயின் அவர் இயற்றிய மற்றைய நூல்களையும் கூறியிருப்பர். அவ்வாறு கூருததுகொண்டு எல்ல பூபதியே இந்த அருணாசலப் புராணமும் திருவிரிஞ்சைப் புராணமும் இயற்றியவர் என்று கொள்ளவேண்டியிருக்கிறது. இனி இவருடைய காலம் செவ்வப்ப நாயக்கர் காலமாகலான், அவர் வாழ்ந்த 16-ஆம் நூற்றுண்டிலேயே இவரும் வாழ்ந்தவராவார். இவர் சிவபக்தி மிக்குடையார் என்பது,

"காணரிய தில்லை கடவூரை யாறுகச்சி
சோணகிரி வேலூர் துவாரசத்தி—சோணகிரி
தண்டாத கச்சித் தலத்துவிடை பஞ்சசத்தி
கண்டானெல் லன்காலிங் கன்"

என்று திருவண்ணாமலையிற் காணப்படும் கல்வெட்டால் விளங்கும்.

சரித்திரம்

குருகூர்ச் சடகோபர்

ஆதிநாதப் பிள்ளை

ஆழ்வார் திருநகரி வரலாறு

தென்தமிழ் நாட்டில் ஏறக்குறைய ஆயிரம் ஆண்டுகளாகப் பெயர் பெற்ற சிறந்த ஊர் திருக்குருகூர். இதற்கு இப்பொழுது ஆழ்வார் திருநகரி என்று பெயர் மாறியிருக்கிறது. தாம்ரபர்ணி என்று வழங்கிவருகிற பொருநை யாற்றங் கரையிலுள்ள இவ் வூர் மிகப்பழைய காலத்திலேயே ஏற்றம் பெற்றிருக்க வேண்டும்.

வேளிர் மரபினராகிய வேளாண் மாந்தர் மருத நிலத்தில் வாழ்ந்து வந்திருக்கின்றனர். நம்மாழ்வாரும் வேளிர் மரபினர். அவருடைய முன்னோர் ஏழு தலைமுறையாகக் குறுநில மன்னராக இருந்திருக்கின்றனர்.

போர்க்காரி, காரி, மாறன்காரி என்பவை சடகோபருடன் முடியும் மூன்று தலைமுறைப் பெயர்கள்.

காரிமாறனாகிய சடகோபரின் பாட்டனார் போர்க்காரியார் பாண்டியருடன்கூடிக் குளந்தை யென்னும் பெருங்குளத்தில் போர்புரிந்துள்ளார்.

யானைமலையின் கற்கோயில் குடைந்த மாறன்காரி, எட்டாம் நூற்றாண்டினிறுதியிலிருந்த மாறன் சடையன், பராங்குசன் முதலியோர் பெயரைச் சடகோபர் தாங்கியிருப்பதனால், அக்காலத்தரசர் அமைச்சர்களுக்கும் அவர்கள் கீழிருந்த குருகூர்க் குறுநிலமன்னராகிய சடகோபர் மரபினருக்கும் உள்ள தொடர்பு விளங்கும். மலயமான் திருமுடிக்காரி போன்ற சங்ககாலத்தவர் மரபுக்கும் இவர் மரபுக்கும் ஏதேனும் இயைபுண்டோ இன்றோ தெரியவில்லை.

அரசனெவ்வழி அவ்வழிக் குடிகளாதலால், பல்லவர் பாண்டியரெல்லாம் பரம வைணவராகவே, ஆழ்வார் மரபினரும் அவ்வாறாயினர். நம்மாழ்வார் பரமாசாரியரானார்.

அன்பில் ஆழ்ந்திருந்ததனால் ஆழ்வாரெனப் பெயர் பெற்றார் ஸ்ரீ நம்மாழ்வார். இவருடைய முன்னோராண்டது திருவழுதி வளநாடு. அதன் தாயூர் தென்குருகூரென்பது.

மாறன் சடகோபர் தம்மைக் குருகைக்கோன் என்றும், வழுதி வளநாடன் என்றும், வண்பொருநல் சங்கணித்துறைவனென்றும் கூறிக்கொள்வதனுல், சடகோபர் ஓரரசராகவே இருந்தாரென்பது விளங்கும். கல்வி கற்றுத் தெளிந்து, பாடும் வன்மையும் பெற்றிருந்தார். திருக்குறள் உட்பட்ட சங்கநூல்களையும் தொல்காப்பியத்தையும் தெளிவா யுணர்ந்திருந்தார். அதனுல் அகப்பொருள் அமையப் பல கவிகள் பாடினுர். திருவாய்மொழி, திருவிருத்தம், திருவந்தாதி, திருவாசிரிய மென்பன அவரியற்றியவை.

'திருவுடை மன்னரைக் காணில் திருமாலைக் கண்டேனேயென்னும்' என்று அவர் கூறுவதனுல் மதுரையில் பாண்டிய மன்னரவைக்களத்தில் ஓலக்கம் கண்டிருக்க வேண்டும். மதுரை, மாலிருஞ்சோலை, திருவரங்கம், திருக்குடந்தை வழியாகத் திருப்பதி என்னும் வேங்கடம்வரை சென்று திருமால் கோயில்களைக் கண்டு வந்திருப்பார்.

தம் நாட்டிலேயே ஒன்பது திருமால் கோயில்கள் ஏற்பட்டுள்ளன. அவற்றுள் பல சடகோபர் மரபினரால் உண்டுபண்ணப் பட்டவை; சில தொன்றுதொட்டுள்ளவை.

திருமால் கோயில்களுடன் இறைவன் கோட்டங்களும் இருந்தன. குருகூரில் ஒன்பது இலிங்கங்கள் கோயில் கொண்டிருந்ததனுல் நவலிங்கபுர மென்று ஒரு பெயரும் அதற் கிருந்தது.

பின்பு அவை ஏகாதசருத்திரர் கோயில்களாயின. இப்பொழுது அவையாவும் இடிக்கப்பட்டுப் பொருநையாறு ஊரையழிக்காதபடி அதன்கரையில் கலிங்கல் கட்டப் பயன்படுத்தப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று 'அயனுதீச்சரம்' என்பது. இக்கோயில் கல்வெட்டிருந்த ஒரு கல்லை இன்னும் கோயில் பெயருடன் மாசித் தெருப் படித்துறையில் பதித்திருக்கப் பார்க்கலாம்.

திருவழுதி வளநாட்டிலிருந்த ஒன்பது திருமால் கோட்டமுள்ள ஊர்கள் வருமாறு:—

1. திருக்குருகூர் (ஆழ்வார் திருநகரி), 2. வைகுந்தம் (ஸ்ரீ வைகுண்டம்), 3. வரகுணமங்கை (நத்தம்), 4. திருப்புளிங்குடி, 5. குளந்தை (பெருங்குளம்), 6. தென் திருப்பேரை, 7. தொலைவில்லி மங்கலம் (இரட்டைத் திருப்பதி—இங்கே திருமால் நின்ற கோலத்தி லொருகோயிலும், இருந்த பாங்கி லொரு கோயிலுமாக இருகோயில்களுண்டு.), 8. திருக்கோளூர்.

இவற்றுள் குருகூர், கோளூர், புளிங்குடி மூன்றும் மிகவும் தொன்றுதொட்டவை என்று அவற்றின் பெயரால் விளங்கும்.

குருகூர்-நாரையூராயிருக்கலாம். ஊர் என்பது மருதநில மக்களுறையும் இடம். குருகென்பதும் குருக்கத்தி, நாரை எனப் பல பொருள் கொள்ளும் ஒரு தமிழ்ச்சொல்.

தலைச்சங்கத்தாரும் இடைச்சங்கத்தாரும் 'முது குருகு', 'குருகு' என்ற நூல்களைச் செய்தனர். முருகன், குருகென்னும் பெயரையுடைய குன்றத்தை யுடைத்தானெனப் புராண முண்டு.

கோளூர் என்பது நவக்கிரகங்கள் ஏற்பட்ட முற்காலத்தூராயிருக்கலாம். அப்படியானால் இஃது இப்பெயர் பெற்று 1500 ஆண்டுகளுக்கதிகமிராது.

வைகுந்தம், வரகுணமங்கை, தொலை வில்லி மங்கலம், பேரை, குளந்தை என்பன ஆழ்வாரின் முன்னோர் காலத்தவை என்பது வெளிப்படை. குருபரம்பரையில் ஆழ்வாரது முன்னோர் ஏழுதலை முறை முறையும், ஆழ்வார் காலத்துக்கு 200-ஆண்டுகளே முற்பட்டிருக்கலாம். மங்கை, மங்கலம், பேரை, குளந்தை, வைகுந்தம், எல்லாம் 7, 8-வது நூற்றாண்டுப் பெயர்கள்; பழம் பெயர்கள் அல்ல.

ஆழ்வார் பெயரையும் அவருடைய முன்னோர் பெயரையும் பாண்டிய மன்னர்கள் பெயருடன் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது மாறன் காரி, மாறன் சடையன், பராங்குசன் முதலியோர் காலமும் நம்மாழ்வார் முன்னோர் காலமும் விளங்கும். போர்க்காரியார், காரியார் என்ற நம்மாழ்வார் தந்தை, பாட்டனர் பெயர்களும் மாறன், சடகோபன் (மாறன் சடையனின் திரிபுபோலும்), காரி மாறன், பராங்குசன் என்ற நம்மாழ்வார் பெயரும் ஆழ்வாரை ஒன்பதாம் நூற்றாண்டினிடைப்பகுதியார் என்று விளக்கும்.

குருபரம்பரை யாண்டைக்கொண்டு ஒருவாறு கணித்தால் கி. பி. 835 முதல் 870 வரை அவர் வாழ்ந்தாரென்று யூகிக்கலாம். ஆனந்த வருஷம், வைகாசி மாதம், விசாகத்தில் தோன்றினாரென்று அவ்வரலாறுரைக்கும்.

இன்னும் முற்பட்ட காலத்தவராயிருக்கக் கூடாதா, அல்லது பழைய காலத்திலுள்ள இவருடைய பெயர்களை அரசர்களும் அமைச்சர்களும் இட்டுக்கொண் டிருக்கலாகாதா என ஐயமெழலாம். அவ்வாறெண்ண முடியாததற் கிரண்டு காரணங்களுண்டு.

1. இவர் வானமாமலை, நாங்குநேரி என்றுகூறப்படும் சிரீவரமங்கலத்தைப் பாடுகிறார். இவ்வூர் இப்பெயர் பெற்றது கி. பி. 783-இல் தான். அக்காலத்துக்குமுன் வேலங்குடி என்ற பெய

ரிருந்தது. அப்பெயரை மாற்றி வேதம்வல்ல சுச்சுடபட்டனுக்கு அவ்வூர் ஸ்ரீ வரமங்கலம் என்ற பெயரால் தானம் செய்யப்பட்டுச் செப்புப் பட்டையமு மளிக்கப்பட்டது. அப்பட்டையம் இன்றும் சென்னையிலுளது. அதனால் ஆழ்வார்காலம் 8-ஆம் நூற்றுண்டின் இறுதிக்கு முன்னில்லை என்று விளங்கும்.

2. கி. பி. 800 முதல் 825 வரை ஆண்ட வரகுணபாண்டியர் சோழநாட்டையும், தொண்டை மண்டலத்தையும் வென்று புகழ்பெற்றவர். அவர் பெயரால் நம்மாழ்வாருடைய தந்தை அல்லது பாட்டனுர் தம் ஆளுகைக்குட்பட்ட திருவழுதி வளநாட்டில் புளிங்குடியைச் சேர்ந்த மேலைப்பகுதிக்கு வரகுணமங்கை (வரகுண மங்கலம்) எனத் திருநாமம் சாற்றினுர். அவ்விடத்திலுள்ள திருமால் கோயிலை ஆழ்வார், "புளிங்குடிக் கிடந்து, **வரகுண மங்கையிருந்து** வைகுந்தத் துள்நின்ற எந்தாய்!" என்று பாடுவார். இதன் பொருள் 'திருப்புளிங்குடிக் கோயிலில் பள்ளிகொண்டு, வரகுணமங்கையில் வீற்றிருந்து, ஸ்ரீ வைகுண்டத்தில் நின்ற எந்தாய்' என்பது. பள்ளி கொண்ட திருக்கோலம், வீற்றிருந்த திருக்கோலம், நின்ற திருக்கோலம் ஆகிய மூன்றும் அந்த மூன்று ஊர்களிலுண்டு.

"திருவுடை மன்னரைக் காணில் திருமாலைக் கண்டேனே என்னும்" என்றுழ்வார் கூறுவதனுல், இவரும் வரகுண பாண்டியர் மகன் ஸ்ரீ வல்லப பாண்டியருடன் கூடிக் கும்பகோணம் பக்கம் போர் புரிய (அல்லது பார்க்க)ப் போயிருக்கலாம்; அல்லது பாண்டியரின் நாளோலக்கம் முதலியவற்றில் கலந்திருக்கலாம்.

"ஆழ்வாருடைய தாயார் பிறந்த ஊர் மலையாளத்தைச்சார்ந்த தாதலால், அதுவரை சென்று வழியிலுள்ள திருக்குறுங்குடி, வானமாமலை, திருவனந்தபுரம் முதலிய ஊர்களையும் பாடினுர். தமது நாட்டிலுள்ள ஒன்பது ஊர்களையும் பாடுவது இயல்புதான்.

ஆழ்வார் போய்ப்பார்த்த ஊர்களை அங்கங்கே சென்றபோது பாடவில்லை. தம் ஊரில்வந்திருந்து, பாடும்போது நினைவிலிருந்து அவ்வவ்வூர்களைக் குறிப்பிடுகிறுர். திருவாய்மொழிப் பாசுரங்கள் அந்தாதியாக அமைந்தவையாதலால் அவை ஒரேகாலத்தில் செய்யப்பட்டிருக்கலாம். ஆனுல் ஊர்களின் முறைவைப்பு அவர் சென்று வந்தவாறில்லை. மாறிக்கிடக்கின்றன. பொதுவாக எல்லா ஊர்களையும் தொகுத்துப் பார்த்தால் அவை திருப்பதிவரை அக்காலத்துப் பாதையிலுள்ளவை என்றும், தம் நாட்டிலும் தம் தாய் பிறந்த இடம்வரை செல்லும் வழியிலுமுள்ளவை என்றும் விளங்கும்.

அயோத்தி, திருப்பாற்கடல் போன்றவை இருந்தவிடத்தி லிருந்தே கேட்டவாறும் கற்றவாறும் பாடப்பட்டிருக்கலாம்.

அவர் சென்றுவந்த இடங்களின் இயற்கைநலம் விளங்கக் கருப்பொருளை விளக்கிப் பாடியிருக்கிறார். வீடு, மாடம், கொடி, கோபுரம், வயல், மரம், குளம், ஆறு, அல்லி, ஆம்பல், பறவை, விலங்கு, விழா, யாழ், முழவு, முரசு, முதலிய பல ஊர்களின் சிறப்பில் காணப்படும்.

குருகூரில் 9, 11 இலிங்கங்களேயன்றிப் பௌத்த, சமணப் பள்ளிகளும் இருந்தன. திருவழுதி வளநாட்டிலுள்ள ஒன்பது திருப்பதிகளும் தாம்ரபர்ணியாற்றின் இருகரைகளிலும் 8 மைல் களுக்குள் இருக்கின்றன.

வடகரையில் ஸ்ரீவைகுண்டம், வரகுணமங்கை, புளிங்குடி, தொலைவில்லிமங்கலம், பெருங்குளம் என்ற 5 ஊர்கள் 6 கோயில் களுடனிருக்கின்றன. தென்கரையில் குருகூர், கோளூர், தென் திருப்பேரை என்ற மூன்று ஊர்கள் உள்ளன. வடகரையில் பெருங்குளமும், தென்கரையில் தென்திருப்பேரையும், திருக் கோளூரும் ஆற்றுக்கு ஒரு மைல் தூரத்திலிருக்கின்றன. ஸ்ரீவை குண்டம், ஆழ்வார் திருநகரி (குருகூர்), தொலைவில்லி மங்கலம் (இரட்டைத் திருப்பதி) மூன்றும் ஆற்றங்கரையிலுள்ளன. புளிங்குடியும் வரகுண மங்கையும் சிறிது தூரம் தள்ளியிருக் கின்றன.

ஆகவே, ஆழ்வாரின் முன்னோராண்ட திருவழுதி வளநாடென்பது பத்துமைல் நீளம், ஐந்துமைல் அகலம், ஐம்பது சதுரமைல் பரப்புள்ள, ஆற்றை யிருபுறமும் அடுத்துள்ள, இடமென விளங்கும்.

திருச்செந்தூர்க்கோயில் கல்வெட்டொன்று திருவழுதி வளநாட்டு மங்கலக் குறிஞ்சி நிலம் தானம் செய்யப்பட்டதை யறிவிக்கிறது. இது தொலைவில்லி மங்கலத்துக்கும் குளந்தைக் கும் (பெருங்குளத்துக்கும்) இடையிலுள்ளவிடம்.

ஒன்பது திருப்பதிகளினும் திருவழுதி வளநாட்டு வைகுந்தம் புளிங்குடி, பெருங்குளம், கோளூர் என்ற கல்வெட்டுண்டு.

இப்பொழுது ஸ்ரீவைகுண்டத்திலும் பெருங்குளத்திலும் திருக்கோளூரிலும் பழைய காலத்துப் பெரிய சிவன் கோயில்கள் உண்டு. ஊருக்கு ஊர் இறைவன் கோயிலும் பண்டைய முறைப் படி இருந்தது போலும். அவையும் ஆழ்வார் முன்னோரால் கட் டப்பட்டும் சீர்திருத்தப்பட்டு மிருக்கலாம்.

திருக்கோளூரின் தென்கிழக்குப்பக்கத்தில் சமணன் திடரொன்றிருந்தது. அதிலிருந்து ஒரு சமண முனிவருருவம் எடுக்கப்பட்டது. அது இப்பொழுது ஆழ்வார் திருநகரி கிராம முனிசீப் கோர்ட்டிலிருக்கிறது. முனிவர் மீது முக்குடையும், இருபுறமும் இரு விச்சாதரர் சாமரம் பிடித்தும், தூபம் போட்டு மிருக்கும் உருவங்களும் உண்டு. முனிவர் சம்மணம் போட்டு இடதடி மேல் வலது திருவடியை வைத்திருக்கிறார். அடிமடியில் வலக்கரம் இடது கையின்மே லிருக்கிறது. மழித்த தலையும் வடித்த காதும் உண்டு.

உடை, அணி முதலிய ஒன்றும் கிடையாது. இத்தகைய இலக்கணம் எல்லாச்சமண உருவங்களிடமும் உண்டு.

திருப்புளிங் குடியில் அகப்பொருளியற்றிய நூலாசிரியர் நாற்கவிராஜ நம்பிகள், 'சிங்கஞ் சுமந்த ஆசனத்தில் முக்குடைக்கீழிருந்த முனிவரை வழிபடுபவர்' என்று கூறப்படுகிறார். இவர் தந்தை முத்தமிழ் வல்லவர். இவர் பன்னிரண்டாம் நூற்றாண்டினர்.

ஆழ்வார் திருநகரியிலும் சமணர், சாக்கியர் இருந்திருக்கலாம். திருக்குருகூர்ப் பதிகத்தில் 'இலிங்கத் திட்ட புராணத்தீரும், சமணரும், சாக்கியரும், மற்றும் வலிந்து வாது செய்வீர்களும்' என்று ஆழ்வார் பாடுகிறார். சாக்கிய மதம் என்பது புத்தமதம்.

சமணரும் சாக்கியரும் இங்கிருந்தோர்; தனித் தமிழரே. அவர்கள் வழியினர் இப்பொழுது பல் குலங்களில் மாறி யிருக்க வேண்டும்.

இன்னும், பிரமன், இந்திரன் கோயில்களும் இருந்திருக்கலாம். ஆழ்வார், "யான் மேவித் தொழும் பிரமன் சிவன் இந்திரன் ஆதிக்கெல்லாம் நாபிக் கமலம் முதற் கிழங்கே" என்பார்.

ஆழ்வாருக்கு எல்லா மதமும் உண்மைகளைக் கொண்டவை, அவற்றிலிருந்து மெய்ப்பொரு ளுணரலா மென்ற பரந்த கொள்கையுண்டு.

"அவரவர் தமதம தறிவறி வகைவகை
அவரவர் இறையவர் எனவடி அடைவர்கள்
அவரவர் இறையவர் குறைவிலர் இறையவர்
அவரவர் விதிவழி அடையநின் றனரே"

என்றருளிச் செய்வார்.

ஆழ்வார் வேளிர் மரபினர். வேளிருக்கும் சேர சோழ பாண்டியருக்கும் பெண் கொடுத்தல் எடுத்தலுண்டு. அதனால் பாண்டிய மன்னருடன் உறவு பெற்றிருக்கலாம்.

பட்டாபிஷேக விமரிசை

பே. நா. அப்புஸ்வாமி ஐயர், பி. ஏ., பி. எல்.

சுமார் நூற்றைம்பது வருஷங்களுக்கு முன் பிரான்சு தேசத்திலே மோந்து கோல்பியர் என்று இரு சகோதரர்கள் இருந்தார்கள். அவர்கள் வைக்கோலைப் போட்டுக் கொளுத்தி, அதிலிருந்து கிளம்பும் புகையைத் துணிப்பையில் அடைத்தால் அது உயரப் பறக்கும் என்று கண்டுபிடித்தார்கள். அப்படிச் செய்த புகைக்கூண்டைப் பறக்கவிட்டும் காட்டினார்கள். அதற்கப்புறம் சில வருஷங்கள்வரையில் எங்கே பார்த்தாலும் புகைக் கூண்டைப் பறக்கவிட ஆரம்பித்துவிட்டார்கள். எந்த ஊரிலே எந்தக் கொண்டாட்டம் வந்தாலும்சரி——கலியாணமோ, கோயில் திருவிழாவோ, ராஜாவின் பிறந்த நாளோ, எது வந்தாலும் சரி——புகைக்கூண்டுகளைப் பண்ணிப் பறக்கவிடுவார்கள். நிறநிறமான காகிதங்களாலும், துணிகளாலும், பட்டுக்களாலும் அவைகளைக் கட்டுவார்கள். விதவிதமாகச் சிங்காரிப்பார்கள். பூக்களின் உருவங்களையும் மனிதர்களின் வடிவங்களையும் அவற்றில் வரைவார்கள். இப்பேர்ப்பட்ட மிகவும் அழகான புகைக்கூண்டுகளைப் பண்ணுவதிலும் சித்திரிப்பதிலும் சிலர் மிகவும் கைதேர்ந்தவர்களாய் இருந்தார்கள். அவர்களுள் பிரான்சு தேசத்தில் உள்ள கார்னெரின் என்பவர் ஒருவர். விசித்திர விசித்திரமான புகைக் கூண்டுகளைச் செய்து அழகாய் அலங்கரித்துப் பறக்கவிடுவதில் அவருக்கு நிகர் கிடையாது. அந்த நாட்டிலே எந்தப் பெரிய விழா வந்தாலும் அதிலே புகைக்கூண்டைப் பறக்கவிடும் காரியத்தை அவரிடம் ஒப்புவித்துவிடுவார்கள்.

நெப்போலியனைப்பற்றிக் கேள்விப்படாதவர்கள் இருக்க மாட்டார்கள். அவர் மிகவும் சாமானியமான ஒரு குடும்பத்தில் பிறந்தவர். பட்டாளத்தில் சேர்ந்து, தம்முடைய சாமர்த்தியத்தினல் பெரிய பெரிய பதவிகளைப் பெற்றார். பிறகு பிரான்சு நாட்டிற்கெல்லாம் மேலதிகாரியாக ஆகிவிட்டார். அவருடைய ஆசைக்கு அளவே இல்லை. எத்தனையோ தேசங்களைச் சண்டைக்கு இழுத்து, அவர்களோடு சண்டை செய்து வெற்றி அடைந்தார். தாமும் அரசராக ஆகவேண்டும் என்ற ஆசை அவருக்கு உண்டாயிற்று. சக்கரவர்த்தியாக முடிசூட்டிக்கொள்ளவேண்டும் என்று தீர்மானித்தார்.

சாமானிய அரசர்களுக்கு அவரவர்கள் நாட்டில் உள்ள பிரதம குருவே முடிசூட்டுவது வழக்கம். உலகத்தையே வென்று மகோன்னத நிலைமையை அடைந்த தமக்கு முடிசூட்டுவதற்குச் சாமானிய குருக்கள் தக்கவரல்லர் என்று தீர்மானித்தார். தம்முடைய பதவிக்கு ஏற்ற பதவியையுடைய குருமட்டிலுந்தான் தமக்கு முடிசூட்டுவதற்குத் தகுதியுள்ளவர் என்று எண்ணினார். உலகத்திலுள்ள கத்தோலிக் கிறிஸ்தவர்களுக்கெல்லாம் குருவாய், உலக குரு என்று கொண்டாடப்படுகிற போப் ஒருவர்தாம் தகுதியுள்ளவர் என்று முடிவு செய்தார்.

போப் ரோமாபுரியில் வசிப்பவர். முடிமன்னர்களும் வணங்கும் பெரிய பதவியில் உள்ளவர். அதைப்பற்றி நெப்போலியனுக்கு என்ன? ராவணேசுவரனுடைய அதிகாரத்தைப் போன்றது அவருடைய அதிகாரம்: தம்மைப் பெரிதும் மதிப்பது; பிறரைச் சிறிதும் மதியாதது; திமிர் பிடித்தது. ஆகையால் அவர் 'போப் ரோமாபுரியை விட்டுப் புறப்பட்டுப் பாரிஸ் நகரத்துக்கு வர வேண்டும். பாரிஸ் நகரத்தில் உள்ள மதக்கோயிலிலே எனக்குப் பட்டாபிஷேகம் செய்விக்கவேண்டும்' என்று உத்தரவிட்டார். போப் இதற்குச் சம்மதிக்கவில்லை. தம் ஊரைவிட்டு வேறோர் ஊருக்குப் போய், அங்கேயும், அரசவமிசத்தில், அரச பரம்பரையில் பிறவாத சாமானிய மனிதன் ஒருவனுக்கு முடிசூட்டுவதில் அவருக்குத் துளி கூடச் சம்மதம் இல்லையாம். தம்முடைய பதவிக்கு நேர்ந்த ஒரு பெரிய அவமானமாகவே இதைக் கருதினாராம். ஆயினும் நெப்போலியனுடைய கட்டளையைச் சிரமேல் தாங்கிய அவருடைய ஆட்கள் 'திக்விஜயம் செய்து, உலகத்தையே அடிமை கொண்ட ஒரு மகாவீரருக்கு முடிசூட்டுவதனால் உமக்குத்தான் கௌரவம்' என்று சொன்னார்களாம். அவர் அதன் பிறகும் இணங்கவில்லையாம். ஆனாலும் நெப்போலியனுடைய கட்டளையை எப்படி மீற முடியும்? அவருடைய அதிகாரத்திற்குப் பயந்து, மிகவும் மனக் கிலேசத்துடன், பாரிஸ் நகரத்துக்கு வந்து சேர்ந்தார்.

பிறகு பாரிஸில் முறையாக எல்லாக் காரியங்களும் நடந்தன. பகலிலே, நோத்ருதேம் என்னும் உலகப் பிரசித்தமான கோயிலிலே உலக குருவே தம்முடைய கையால் வீரருக்கு முடிசூட்டினார். வீரர் அரசரானார். நகரத்திலே எல்லாவிடங்களிலும் அந்த விழாவைச் சிறப்பாகக் கொண்டாடினார்கள். இரவிலே எத்தனையோ விதமான வாணவேடிக்கைகள் நடந்தன. 'முப்பதினாயிரம் பிராங்கு செலவு செய்து கார்னெரின் மிகவும் பிரம்மாண்டமான புகைக் கூண்டு ஒன்றைக் கட்டியிருக்கிறார். அது மிகவும்

அழகாயிருக்கிறது' என்கிற வதந்தி எங்கும் பரவிற்று. அதைப் பார்ப்பதற்கு ஏராளமான ஜனங்கள் கூடிவிட்டார்கள்.

அன்று இரவு பதினொரு மணிக்கு எங்கே பார்த்தாலும் வாணவேடிக்கைகள் நடந்துகொண்டிருந்தன. அந்தச் சமயத்தில் நோத்ருதேம் கோயிலிலிருந்து கார்னெரின் சிருஷ்டித்த பலூன் கிளம்பிற்று. அந்தப் பலூனைச் சுற்றி மூவாயிரம் விளக்குக்கள் வைக்கப்பட்டிருந்தன. நிற நிறமான விளக்குக்கள். 'வானவில்லை யே உருட்டிப் பந்துபோல் ஆக்கிவிட்டானே, கார்னெரின்?' என்று ஜனங்கள் பேசிக்கொண்டார்கள். 'உலக குருவாயும் புனித மிக்கவராயும் உள்ள ஸ்ரீலஸ்ரீ ஏழாவது பயஸ் அவர்கள் நெபோலிய சக்கரவர்த்திக்கு முடிசூட்டினார்கள். பாரிஸ் நகரம், பதின் மூன்றும் வருஷம், மூன்றும் மாதம், இருபத்தைந்தாம் தேதி' என்று தங்க எழுத்துக்களால் அந்தப் பலூனைச் சுற்றி எழுதியிருந்தது.

அன்று பகலில் பட்டாபிஷேகம் நடந்த இடமாகிய நோத்ருதேம் கோயிலின் வாயிற்புறத்திலிருந்து அந்தப் பிரம்மாண்டமான பலூனானது மிகவும் கம்பீரமாக உயரக் கிளம்பிற்று. அக்கோயிலின் உன்னதமான கோபுரங்களைத் தாண்டி உயரப் பறந்து, கண்ணுக்கு எட்டாமல் மறைந்து போய்விட்டது. இந்த ஆச்சரியத்தைப் பார்த்துக்கொண்டேயிருந்த பாரிஸ் நகரவாசிகள் ஆர்ப்பரித்துச் சந்தோஷித்தார்கள்.

இந்தப் பலூன் எவ்வளவு உயரம் பறந்திருக்கும், எவ்வளவு தூரம் பறந்து போகும், எவ்வளவு காலம் வரையில் பறந்துகொண்டே யிருக்கும், எங்கே போய் இறங்கும், என்றெல்லாம் அந்தக் கூட்டத்திலுள்ளோர் பலவிதமாகப் பேசிக்கொண்டார்கள். பலூனைப் பறக்கவிட்டுச் சில நாட்கள் வரையிலும் அதைப் பற்றிய விருத்தாந்தம் ஒன்றும் கிடைக்கவில்லை. பிறகு, கொஞ்சங் கொஞ்சமாக அதனுடைய விசித்திரமான சரித்திரம் தெரிய வந்தது.

பாரிஸ் நகரில் கொண்டாட்டம் நடந்த மறுநாள், அதிகாலையில், அருணோதய வேளைக்கு முன்னால், ரோமாபுரியிலுள்ள ஜனங்கள் ஓர் அற்புதமான காட்சியைக் கண்டார்கள். ஆகாய வெளியிலே, போப்பின் மடத்துக்கும் அர்ச். பேதுருவின் மதக்கோயிலின் உன்னத சிகரத்துக்கும் மேலே, புத்தப் புதிதான ஒளி ஒன்று பிரகாசித்துக்கொண்டிருப்பதைக் கண்டார்கள். முதலிலே அது மினு மினுவென்று சின்னஞ் சிறிய ஒளியாக இருந்தது. வரவரப் பெரிதாகிக்கொண்டே வந்தது. பிறகு, பிரம்மாண்டமான, கோளவடிவமான, ஒளியாகத் தோன்றி எழுமலையின் மேல் மிகவும்

கம்பீரமாக மிதந்துகொண்டிருந்தது. சிறிது நேரம் அசையாமல் ஸ்திரமாய் ஒரே இடத்தில் நின்றுகொண்டிருந்தது. பட்டாபிஷேகம் நடந்த சிலமணி நேரத்துக்குள் ரோமாபுரியை அடைந்த அந்தப் பலூன் அந்தச் செய்தியை ரோம்புரிக்கு அறிவிப்பதற்காகவே வந்ததுபோல் அங்கே நின்றுகொண்டு சிறிது நேரம் காட்சியளித்தது. பிறகு மெல்லென்ற காற்று வீசவே அது நகரத்துக்குத் தென் புறமாக மிதந்துபோய்விட்டது. அதுதான் கார்னெரின் கட்டிய பட்டாபிஷேகப் பலூன்.

இந்தப் பலூனின் விந்தை இதோடு நிற்கவில்லை. கொஞ்ச நேரம் தெற்குமுகமாய்ப் போனபிறகு இந்தப் பலூன் பூமியில் இறங்கிற்று. அதைப் பிடிக்கப் பலர் ஓடினர்கள். அவர்கள் கையில் அகப்படாமல் மறுபடியும் மேலே கிளம்பிற்று. ஆட்களுக்குப் பயந்தோடும் உயிருள்ள பிராணியைப்போல்—சிறகொடிந்த பக்ஷியைப்போல்—இது பலமுறை இறங்கி இறங்கி ஏறிற்று.

ரோமாபுரிக்கு அடுத்த மைதானத்தில் அது தங்கிற்று. அதன் கயிறுகள் அங்கே உள்ள ஒரு கட்டடத்தில் மாட்டிக்கொண்டன. 'பலூன் அகப்பட்டுக்கொண்டது' என்று ஜனங்கள் ஆரவாரித்துக்கொண்டு அதைப்பிடிக்க ஓடினர்கள். சிறுகாற்று அடித்தது. பலூன் தலையை அசக்கிற்று. ஜனங்கள் கிட்ட வருவதற்குள், கையைத் திமிறிக்கொண்டு ஓடுவதைப்போல், கயிற்றைப் பிடுங்கிக்கொண்டு பலூன் கிளம்பிவிட்டது. அந்தச் சமயத்தில் பலூனில் கொஞ்சம் சேதம் உண்டாயிற்று. அதில் பொன்னினல் வரையப்பட்டிருந்த சக்கரவர்த்திச் சின்னமாகிய கிரீடமானது கட்டடத்தின் முனையில் மாட்டிக்கொண்டு கிழிந்து வேருக வந்துவிட்டது. கிரீடம் இழந்த பலூன், உயிர்தப்பினல் போதுமென்று ஓடுவதுபோல், ஓடிவிட்டது. ஜனங்கள் பொற்கிரீடத்தைக் கண்டு வியப்புற்ருர்கள். அந்தக் கட்டடம் பழங்காலத்திலே ரோமாபுரியிலே கொடுங்கோலரசு செலுத்திய நீரோவின் சமாதியின்மேல் கட்டப்பட்டிருந்த ஞாபகச் சின்னம்.

அங்கிருந்து புறப்பட்டுப் போன பலூன், கொஞ்சநேரம்வரை நொண்டி நொண்டிப் பறந்து, கடைசியில் பறக்க முடியாமல் பிராக்கியானே ஏரியில் போய்த் தொப்பென்று விழுந்தது. பலர் ஓட்டமாய் ஓடி, அது தண்ணீரில் நனைந்து ஊறிப்போவதற்குள் அதைப் பிடித்து இழுத்து வெளியே கொண்டுவந்து போட்டார்கள். அதில் எழுதியிருந்த வாசகத்தைப் படித்தார்கள். படித்ததும் அதன் ஆச்சரியமான விருத்தாந்தத்தைத் தெரிந்துகொண்டார்கள்.

ஏரியில் நனைந்து சொட்டச் சொட்டக் கிடந்த அந்தக் கிழிந்து போன பலூனை எடுத்த ஜனங்கள் அது மன்னர் மன்னரான நெப்போலியனுடைய பட்டாபிஷேகச் சின்னம் என்பதைக் கண்டு கொண்டார்கள். தங்களுக்குள்ள ராஜபக்தியைக் காட்ட விரும்பிய அவர்கள், அதை மிகவும் கௌரவப் படுத்தினார்கள். அதைச் சரிப் படுத்திச் சீராக்கி, மிகவும் ஜாக்கிரதையாக மேளதாளத்துடன் எடுத்துப் போய்ப் போப்பினுடைய மடாலயமாகிய வாடிகன் மாளிகையிலே கட்டித் தொங்கவிட்டுப் பத்திரப்படுத்தி வைத்தார்கள்.

ஆயினும் அப்பொழுதே இதைப்பற்றிப் பலர் பலவாறாகப் பேசிக்கொண்டார்கள். நிமித்தங்களிலே நம்பிக்கை உள்ளவர்கள், அவரவர்களுடைய மனப்போக்கின்படி, இதை நல்ல நிமித்தமாகவோ, துர்நிமித்தமாகவோ கருதினார்கள். இரண்டுக்கும் இதில் இடமிருக்கிறது அல்லவா?

'ரோமாபுரியிலிருந்து புறப்பட்ட போப் பாரிஸ் நகரத்திலிருக்கிறார்: அவர் நெப்போலியனை இத்தாலியா நாட்டுக்குச் சக்கரவர்த்தியாக முடிசூட்டினார்' என்னும் சந்தோஷச் செய்திகளை உயிரற்ற ஜடப்பொருளாகிய ஒரு பலூன் தானாகவே புறப்பட்டுப் போய் ரோமாபுரியிலுள்ள மகாஜனங்களுக்கு அறிவித்தது என்பதை மிகவும் நல்ல நிமித்தமாகச் சிலர் கொண்டாடினார்கள்.

வேறு சிலர் விருத்தாந்தத்தில் இன்னொரு அம்சத்தை எடுத்துக்கொண்டார்கள். 'பழங்காலத்துக் கொடுங்கோலன் ஒருவன் தற்காலத்துக் கொடுங்கோலனுடைய வெற்றிச் சின்னத்தைப் பிடித்திழுத்து அவனுடைய கிரீடத்தையே வாங்கிவிட்டான். இது ஒரு துர்நிமித்தமே யாகும்' என்று பேசிக்கொண்டார்கள்.

இவை எல்லாம் நெப்போலியன் காதில் போய் விழுந்தன. அவனுக்கு வந்த கோபத்துக்கு அளவே இல்லை. 'இனிமேல் இந்தக் கார்னெரினைக் கொண்டு பலூன் செய்யக் கூடாது' என்று உத்தரவிட்டான் என்று சொல்லப் படுகிறது.

நெப்போலியனுடைய அதிகாரம் செழித்தோங்கி அவன் உலகத்தைக் கலக்கிக் கொண்டிருந்த காலமெல்லாம் அந்தப் பலூன் வாடிகன் மாளிகையில் சிறப்பாகத் தொங்கிக்கொண்டிருந்தது. அவன் மகோன்னத பதவியிலிருந்து விழுந்தானோ இல்லையோ, அந்தக் கிழிந்த பலூனுக்கு ஏற்பட்டிருந்த பதவியும் அடியோடு தொலைந்துபோயிற்று. நெப்போலியன் 1814-ஆம் வருஷத்தில் தோல்வியடைந்து சிறைப் பட்டதும் பலூனைத் தூக்கி வெளியே எறிந்துவிட்டார்கள். பலூன் காற்றிற் குமிழி யல்லவா?

வானமும் கடலும்

பெ. நா. அப்புஸ்வாமி ஐயர், பி.ஏ., பி.எல்.

"நீல விசும்பினிடை என்ன கண்டிட்டாய்?
நெரித்த திரைக்கடலில் என்ன கண்டிட்டாய்?"—பாரதி.

எல்லையற்ற ஆகாயத்தின் நிறம் நீலம். கரையற்றதாய்த் தோன்றும் கடலின் நிறமும் நீலம்.

நீல நிறம்

இந்த நிறத்தைக் கவிகள் கண்டு அநுபவிக்கிறார்கள்: ஆநந்த பரவசர்களாகி மெய்ம்மறந்து கனவுகாண்கிறார்கள். நீல நிறமானது பெருக்கெடுத்துப் பரவிச் சென்று அவர்கள் உள்ளம் முழுவதையும் நிறைத்துக் கவிதாவெள்ளமாக வெளியிலே வருகிறது.

ஆகாய வெளியிலே பரந்து அகன்று விரிந்துகிடக்கும் நீலத்தைத் தத்துவஞானிகள் பார்க்கிறார்கள். அவர்களுடைய மனக் கண்களிலே அது தெய்வத்தினுடைய வடிவத்தை ஏற்றுக்கொள்ளுகிறது. திருமாலின் நிறம் நீலம்; பராசக்தியின் நிறமும் நீலம்.*

இதே நிறத்தைக் காதலர்களும் பார்க்கிறார்கள். நீல விசும்பினிடையே காதலியின் முகத்தைக் காண்கிறார்கள். நெரித்த திரைக்கடலிலும் அவளது அழகிய வதனமே அவர்களுடைய கண்களின்முன்னே வந்து கொஞ்சி விளையாடுகிறது. வானும் கடலும் காதலர் காதலிகளாக விளையாடுவதாகவும் இன்பம் ததும்புகின்ற அவர்களுடைய மனத்திலே தோன்றுகிறது.

டாக்டர் ஸர் சி. வி. ராமனும், டாக்டர் கே. ஆர். ராமநாதனும் சற்றேறக்குறைய இருபது வருஷங்களுக்கு முன்பு செய்த ஆராய்ச்சிகளை ஆதாரமாக வைத்துக்கொண்டு மனம் போனபடி எழுதியது.

* 'இந்துக்கள் தங்களுடைய தெய்வங்களை ஏன் நீல நிறமுள்ளவர்களாகக் கருதுகிறார்கள்?' என்று கேட்டதற்கு விவேகாநந்தர், "கடல் ஏன் நீலமாயிருக்கிறது? வானம் ஏன் நீலமாயிருக்கிறது? எல்லையற்றவை யாவும் நீலம்" என்று பதில் கூறினார்.

சாமானியர்களாகிய நாமும் இந்த நிறத்தைக் காண்கிறோம். சிற்சில வேளைகளிலே இதன் அழகை உணருகிறோம். நாம் செய்வதெல்லாம் இவ்வளவு தான்: தத்துவ ஆராய்ச்சிகள் நாம் செய்வதில்லை, கவி எழுதுவதில்லை, கனவும் காண்பதில்லை.

விஞ்ஞானிகளும் இக்காட்சிகளையே காண்கிறார்கள். அவர்களுடைய மனமும் இவற்றைக்கண்டு இன்புறுகின்றது. ஆனால் அவர்களுடைய புத்தியானது அவர்களை ஓயாது கேள்விகள் கேட்டுக்கொண்டே இருக்கிறது. 'இது ஏன்?', 'இது எப்படி?' என்ற கேள்விகளுக்கு விடை பெற முயல்வதிலேயே அவர்களுடைய அறிவானது ஈடுபட்டிருக்கிறது. அதனால் எத்தனையோ வகையான ஆராய்ச்சிகளை நடத்தி அக் கேள்விகளுக்கு விடைதேடிக் காண அவர்கள் முயன்றுகொண்டே இருக்கிறார்கள்.

ஸர் சி. வி. ராமனும், டாக்டர் ராமநாதனும் 'வானையும் கடலையும் நோக்கி' மகிழ்ந்திருந்தார்கள். அந்தச் சமயத்திலே அவர்களுடைய புத்தியானது அவர்களைத் தட்டி, 'ஆகாயம் ஏன் நீலமாய் இருக்கிறது?' 'திரைக் கடல் ஏன் நீலமாக இருக்கிறது?' என்ற கேள்விகளைக் கேட்டது. இக் கேள்விகளுக்குப் பதில் சொல்லும் பொருட்டு அவர்கள் செய்த ஆராய்ச்சிகளின் சாராம்சத்தை ஒருவாறு சொல்ல முயலுகிறேன்.



ஸர் சி. வி. ராமன்

வானம்

வான வளையம்

வானவளையம் நம்மைச் சூழ்ந்திருக்கிறது. நம்மைச் சுற்றி, நாநாபக்கங்களிலும், கண்ணுக்கும் மனத்துக்கும் எட்டாத அளவில், வானவெளியானது பரந்து விரிந்து அகன்று கிடக்கின்றது. அவ் வெளியானது மிக்க அழகுள்ளதாயும், நல்ல நீலநிறம் உடையதாயும் நமக்குத் தோன்றுகிறது. அது நீலமாய் இருப்பதற்குக் காரணம் என்ன? வானம் என்பது வெறும் வெளியிடந் தானே. வெளியிடத்திற்கு நிறம் ஏது? இவ்வளவு அழகிய, கண்ணையும் மனத்தையும் கவர்கின்ற, நீல நிறம் அதற்கு எங்கேயிருந்து வந்தது? இக் கேள்வி

களைச் சிற்சில விஞ்ஞானிகள் தம்மைத் தாமே கேட்டுக்கொண்டார்கள். அவர்களுள் டின்டல் ஒருவர்.

டின்டல் இவ்விஷயத்தை ஆராய்ந்து சிந்தித்து ஒரு முடிவுக்கு வந்தார். அவர் சொன்னதாவது:

டின்டல் செய்த முடிவு

'வெறும் ஆகாயவெளிக்குச் சுயமாக ஒரு நிறமும் கிடையாது. சூரிய வெளிச்சமானது வானவெளியிலே படாமல் இருக்குமானால் அவ் வானவெளி நிறமற்றதாய் இருக்கும்; அதனால் வானவெளி எங்கும் ஒரே மை இருட்டுப்போலத் தோன்றும். வெளிச்சமே இல்லாத இரவிலே ஆகாயம் கறுப்பாகத் தோன்றுகிறதல்லவா? சுயநிறமற்ற வானவெளியின் வழியாகச் சூரிய வெளிச்சம் வருகிறது. வரும்பொழுது அதற்கு யாதொரு தடையும் ஏற்படாமல் இருந்தால், சூரியனது வெள்ளிய கிரணங்கள் தன்மையிலும் அளவிலும் மாறுபடாமல் நம்மை வந்து சேரும்; வானத்தின் வெளியிடமும் கறுப்பாகவே இருக்கும். ஆனால் அப்படி இராமல் எங்கும் ஒரே நீலமாய் அது தோன்றுகிறது. ஏன்? கிரணங்கள் வருகிற வழியில் அவற்றுக்குத் தடை உண்டாகின்றது. வரும் வழியில் உள்ள ஏதோ சில பொருள்களின் மேலே மோதிப் பிரிந்தும் சிதறுண்டும் போகின்றன. அப்போது வெள்ளைக் கிரணங்கள் பல நிறங்களாகப் பிரிகின்றன. இடைவெளியில் உள்ள அந்தப் பொருள்கள் நீல நிறத்தை மட்டிலும் போக விடுகின்றன. மற்ற நிறங்களைத் தம்முள் அடக்கிக் கொள்ளுகின்றன.

'இவ்வாறு கிரணங்களைத் தடுத்துப் பிரித்துச் சிதறிக் கவர்ந்து வழிவிடும் பொருள்கள் எவையாயிருக்கலாம்? நமது பூமியைச் சுற்றி இருநூறு மைல் தூரம்வரை வாயுமண்டலம் ஒன்று வியாபித்திருக்கிறதல்லவா? இந்த வாயுமண்டலத்திலே வெகு தூரம் வரையில் தூசி கலந்து கிடக்கிறது—அணுப்போன்ற மிகவும் நுண்ணிய தூசி, கண்ணுக்குக்கூட எளிதில் தெரியாத தூசி. இதைத் தவிர நுண்ணிய நீர்த்திவலைகளும், பனிக்கட்டியின் படலங்களும் வாயுமண்டலத்தில் உயரத்திலே மிதந்துகொண்டிருக்கின்றன. அணுப்போன்ற திவலைகளிலேயும், தூசிப்பொடிகளிலேயும் சூரிய கிரணங்களிற் சில படுகின்றன; பட்டுப் பலநிறமாகப் பிரிந்து போகின்றன; சிதறியும் போகின்றன. சிவப்பு, மஞ்சள் முதலிய நிறங்கள் இத்தகைய தூசிப்பொடிகளிலே அடங்கிப் போகின்றன. நீல நிறம் மட்டிலுமே இவற்றால் கவரப்படாது தப்பிக்கொண்டு நம்முடைய கண்களிலே வந்து படுகின்றது. அதனாலேதான் ஆகாய

வெளியானது நீல நிறமுள்ளதாக நம்முடைய கண்களுக்குத் தோன்றுகிறது.'

டின்டல் சொன்ன காரணத்தைச் சுமார் முப்பது வருஷத்துக்கு முன்வரை அநேகமாக எல்லாரும் சரி என்று ஒப்புக்கொண்டு வந்தார்கள். ஆனால் ஒரு சிலருக்கு அது திருப்திகரமாகத் தோன்றவில்லை. ஏனென்றால், மழைக் காலத்திலே, சோனாமாரியாக மழை கொட்டின பிறகு, வானவெளியில் உள்ள தூசியிலே பெரும்பகுதி மழையினாலே அடித்துக்கொண்டு போகப்படுகிறது; அதிலே கரைந்தும் போகிறது. ஆகையால் வானமானது நிர்மலமாகத் தூசியற்றதாகத் தெளிந்துவிடுகிறது. டின்டல் சொன்னது சரியானால், வானத்தின் நீலநிறம் அப்பொழுது குறைய வேண்டும் அல்லவா? அப்படிக் குறைவதில்லை. அப்பொழுது முன்னைக் காட்டிலும் அதிகமாகவல்லவா ஆகிவிடுகிறது! மேலும், கனத்த மழை பெய்தபிறகு நன்றாக வெயில் காயும் நாளிலே, காற்றிலே மிதந்துகொண்டிருக்கும் நீர்த்திவலைகள் எல்லாம் ஆவியாகிவிடுகின்றன. அப்பொழுது வாயுமண்டலத்தில் பனித்திவலைகளும் இருக்கமுடியாது. ஆயினும் ஆகாயமானது அப்பொழுதும் களங்கமற்ற நீலநிறமுள்ளதாகத் துலங்குகிறதே. தூசியும் நீர்த்துளியுமே காரணம் என்று டின்டல் சொன்னது சரியானால், இவ்விரண்டும் இல்லாமற்போன அந்த வேளைகளில் ஆகாயம் நிறமற்றதாக அல்லவோ இருக்கவேண்டும்? ஆதலால் டின்டல் சொன்ன காரணம் அவ்வளவு சரியான காரணம் அல்ல என்று சிலர் ஆக்ஷேபித்தார்கள்.

சில ஆக்ஷேபங்கள்

'ஆகாயம் நீல நிறம் உள்ளதாகத் தோன்றுவதற்கு வேறு ஏதாவது தக்க காரணம் இருக்கவேண்டும், அந்தக் காரணம் என்னவாய் இருக்கலாம் என்பதை ஆராயவேண்டும்' என்று விஞ்ஞானிகள் மறுபடியும் ஆராயத் தொடங்கினர். அவர்களுள் ரேலி பிரபு ஒருவர்.



ரேலி சொன்னார்: 'டின்டல் சொன்னது முற்றிலும் பிசகல்ல. அதில் பேர்பாதி சரிதான். ஆகாயம் நீலமாய்த் தோன்றுவதற்குச்

சூரிய வெளிச்சந்தான் காரணம். சூரிய கிரணம் சிதறுண்டு பல நிறங்களாய்ப் பிரிந்து போவதாலும், அந்நிறங்களில் ஒன்றாகிய நீலநிறம் மட்டிலும் நமது கண்ணில் வந்து படுவதாலுமே ஆகாயம் நீல நிறமுள்ளதாகத் தோன்றுகிறது. இதுமட்டில் டின்டல் சொன்னது சரிதான். ஆனால் சூரிய கிரணம் சிதறுண்டு போவதற்கு நம்முடைய வாயுமண்டலத்தில் உள்ள தூசிப்பொடிகளும் காரணமல்ல; சிறிய நீர்த்துளிகளும் காரணம் அல்ல; சிறு பனிக்கட்டித் துண்டுகளும் காரணம் அல்ல; காற்றின் 'மாலிக்யூல்கள்' தான் இதற்குக் காரணம். எப்படியெனில்:

ரேலி பிரபுவின் கோள்கை

'சூரியனிடமிருந்து வெளிப்புறப்படும் கிரணங்கள் வெறும் வெளியைத் தாண்டிக் கடந்து நமது வாயுமண்டலத்தை அடைகின்றன. அப்பொழுது அந்தக் கிரணங்கள் அங்கேயுள்ள பல வகையான காற்றுக்களின் நுண்ணிய மாலிக்யூல்களின் இடைவெளி வழியாகப் பாய்ந்தோடி நேராக வருகின்றன. ஆனால் சிற்சில கிரணங்களுக்கு நேர் வழி அகப்படுவதில்லை. எதிரே உள்ள சிறிய மாலிக்யூல்களின் மேலே அவை மோதும்படி நேர்கிறது. ஆதலால் மோதுகின்றன; மோதிச் சிதறிப்போகின்றன. அப்போது வெள்ளிய சூரிய கிரணமானது பல நிறமுள்ள கிரணங்களாகப் பிரிந்து போகிறது. அவற்றுள் நீலநிறக் கிரணம் ஒன்றைத் தவிர மற்றக் கிரணங்கள் யாவும் காற்றின் மாலிக்யூல்களுக்குள்ளேயே பெரும்பாலும் அடங்கிப் போகின்றன. நீலநிறக் கிரணம் ஒன்றுமட்டிலும் தப்பிக்கொண்டு நம்முடைய கண்ணில் வந்து படுகிறது. ஆகையால் வாயுமண்டலம் நீலநிறமுடையதாக நமக்குத் தோன்றுகிறது. உண்மை வானத்தை உள்ளபடி நாம் பார்ப்பதில்லை. நீலநிறமுடைய கண்ணாடியின் வழியாகப் பார்க்கும் ஒருவனுக்கு எல்லாம் நீலநிறமுள்ளதாகத் தோன்றுவது போல், நீல நிறத்தையுடைய வாயு மண்டலத்தின் வழியாகவே நாம் வானத்தைப் பார்ப்பதால் நிறமற்ற வானவெளியானது நீலநிறமுள்ளதாக நம்முடைய கண்களுக்குத் தோன்றுகிறது.'

அவர் சொன்னது மிகவும் ஆச்சரியமாக இருந்தது. அதனால் விஞ்ஞானிகள் அதை முதலில் ஒப்புக்கொள்ளவில்லை. சில தடைகளும் தோன்றின. அவர் சொன்னதை ஒப்புக்கொண்டால் அவர்கள் அதுவரை நம்பிவந்த சில விஷயங்களைக் கைவிடவேண்டியது அவசியமாயிற்று. உதாரணமாக: 'காற்று நிறமற்றது; ஒளியைத் தடையின்றி ஊடுருவிப் பாயவிடும் குணத்தை உடையது; கண்ணால் பார்க்க இயலாதது'

சந்தேகங்கள்

என்று விஞ்ஞானிகள் வர்ணித்து வந்தார்கள். ரேலி சொன்னது சரியாயிருந்தால் இவ்வாறு காற்றைப்பற்றிக் கொண்ட எண்ணங்கள் முற்றிலும் தவறு என்று ஏற்பட்டுவிடும்.

அவர் சொன்னதிலிருந்து வானம் நீலம் அல்ல, காற்றுத்தான் நீலம் என்று ஏற்படுகிறதல்லவா? நாம் நீலமாகப் பார்ப்பது காற்றைத்தானே? ஆகையால் காற்று நமது கண்ணுக்குத் தெரிகிறதே. அது நிறமற்றது என்று சொன்னதும் தப்பல்லவா? மேலும் அது வெள் ஒளியை முற்றிலும் ஊடுருவிப் பாய விடுவதில்லையே. விடுமானல் அதற்கு நிறம் இருக்காதே. இத்தனை முடிவுகளும் ரேலியின் கொள்கையிலிருந்து விளைகின்றன அல்லவா? ஆகையால்தான் அவருடைய கொள்கையை முதன்முதலில் விஞ்ஞானிகள் எளிதில் ஒப்புக்கொள்ளவில்லை. சில விஞ்ஞானிகள் மட்டிலுமே ஒப்புக்கொண்டார்கள்.

இக் கொள்கைகளைச் சோதித்துப் பார்த்து உண்மையை அறிதியிட வேண்டுமென்ற முயற்சியில் ஸர் சி. வி. ராமனும் அவருடைய துணைவர்களும் ஈடுபட்டார்கள்.

சி. வி. ராமன் ஆராய்ச்சி

'நிறமற்றனவாக நாம் கருதும் ஆக்ஸிஜனும், நைட்ரஜனும் கலந்த காற்றுனது நீலநிறமாக இருக்குமானல், அவைபோன்ற மற்றக் காற்றுக்களும் நிறம் உள்ளவைகளாகவே இருக்கலாம் அல்லவா?' என்று எண்ணி அவற்றைச் சோதிக்கத்தொடங்கினர்கள்.

இம்மாதிரியான சோதனைக்கு மிகவும் தீக்ஷ்ணமான வெளிச்சம் அவசியம். சோதனை செய்யப்படும் காற்றுக்களுக்குப் பின்புறத்திலே யாதொரு நிறமும் இருக்கலாகாது. நிறமற்ற வெறும் கறுப்பு மட்டிலுந்தான் இருக்கலாம். பின்புறத்திலே ஏதாவது நிறம் இருக்குமானல், சோதிக்கப்படும் காற்றின் நிறமும் அந்த நிறத்தினல் மாறுபடும். ஆகையால் மிகவும் இருட்டாயுள்ள, நிறம் அற்ற, அறை ஒன்றைத் தயார் செய்தார்கள். அந்த அறைக்குக் 'கல்கத்தாவின் இருட்டறை' என்று வேடிக்கையாகப் பெயர் வைத்தார்கள். இந்திய சரித்திரத்தில் சொல்லப்படும் இருட்டறைக்கும் இதற்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை!

சாதாரணக் காற்றை மிகவும் நன்ருக வடிகட்டித் தூயதாக்கினர்கள். அதிலே ஒரு பொட்டுத் தூசிகூட இல்லாமற் செய்தார்கள். பிறகு அந்தக் காற்றை இந்த அறையிலே வைத்து அதன் ஊடே மிகவும் தீக்ஷ்ணமான ஒளிக்கிரணத்தைப் போகவிட்டுச் சோதனைகளை நடத்தினர்கள். அப்பொழுது அந்தக் கிரணமானது நல்ல நீல நிறம் உடையதாய்க் காணப்பட்டது. இதே

மாதிரியாக, நிறமற்றனவாகக் கருதப்படும் வேறு சில காற்றுப் பொருள்களையும் சோதித்துப் பார்த்தார்கள். அவைகளும் நீல நிறமுடையனவாகவே காணப்பட்டன.

இத்தகைய ஆராய்ச்சிகளைச் சிலகாலம் மிகவும் சிரத்தையாக வும் ஒழுங்காகவும் கல்கத்தாவில் ராமனுடைய சோதனைச்சாலையில் நடத்தி வந்தார்கள். ரேலி சொன்னது சரிதான் என்பது இவ்வாராய்ச்சிகளால் நிரூபிக்கப்பட்டது.*

ஆராய்ச்சிப் பயன்கள்

காலைப்பொழுதிலே உதய சூரியன் 'கதிர்களை வீசிக் கடுகி வான்மிசை' ஏறுகின்றான். அக்கதிர்கள் தொட்ட மாத்திரத்திலே இன்புற்ற வானமானது 'மோகன மாம் சோதி பொருந்தி' 'வன்னச் சுடர் மிகுந்து' விளங்குகின்றது. பொன்னிறமாயும் செந்நிறமாயும் அது திகழ்ந்து நமக்கு இன்பக் காட்சியை அளிக்கின்றது. மாலைப்பொழுதின் அழகைக் கண்டு மகிழ்ந்து புகழாத கவி இல்லை; சாமானிய மனிதனும் இல்லை. மாலை வேளையிலே வானத்திலே எத்தனை நிறங்கள் தோன்றுகின்றன! எங்கு நோக்கிடினும் ஒளித்திரள்! வானமா னது 'வன்னக் களஞ்சிய'மாக ஒளிருகின்றது.

காலையும் மாலையும்

காலையிலும் மாலையிலும், நீல நிறமுள்ள நெடிய வான வெளியி னிடத்தே, பல வர்ணங்கள் நவநவமாகத் தோன்றுகின்றன. ஏன்? ரேலியின் கொள்கையானது இதற்கும் தக்க விடையை அளிக்க வல்லது என்பதை ராமன் உணர்த்தினார்.

தம்முடைய ஆராய்ச்சிச் சாலையிலே ராமன் சில சோதனைகளை நிகழ்த்தினார். அகன்ற வானவெளியில் இயற்கை அன்னை தோற்று விக்கும் காலைக்காட்சியையும் மாலைக்காட்சியையும் அவர் தம் முடைய சின்னஞ் சிறிய அறையிலே இயற்று வித்தார். இயற்கையாக வானவெளியிலே தோன் றும் அழகை எல்லாம் தம்முடைய செய்கை யாலே சோதனைச்சாலையிலே அவர் தோன்றச்

அறையிலும் மலையிலும் ஆராய்ச்சி

---

* காற்றிலுள்ள மாலிக்யூல் சுமார் இன்ன அளவு உள்ளதாக இருக்கிறது என்பதும், மாலிக்யூலில் உள்ள அணுக்கள் அதனுள் எவ்வாறு அமைந்தி ருக்கின்றன என்பதும் இவ்வாராய்ச்சிகளால் தெரிய வந்தன. இவைகளும் இச்சோதனைகளிலிருந்து கிடைத்த பயன்களேயாகும்.

செய்தார். நீல நிறத்திடையே செந்நிறமும் பொன்னிறமும் கலந்து காட்சி யளித்தன. வானத்திலே நீலம் மறைந்து பொன்னாவதின் காரணம் இவ்வகையான சோதனைகளால் விளங்கலாயிற்று. சூரிய மண்டலத்திலிருந்து புறப்படுகிற கிரணங்கள் எல்லாம் வாயுமண்டலத்தைக் கடந்து நம்மிடம் வந்து சேருகின்றன. நடுப்பகலிலே நமது தலைக்கு நேராகச் சூரியன் இருக்கும்போது அதன் கிரணங்கள் கடக்கவேண்டிய தூரத்தைக்காட்டிலும் காலை வேளையிலே அடி வானத்திலே அது இருக்கும்போது அதன் கிரணங்கள் அதிக தூரத்தைக் கடந்துவரவேண்டியிருக்கிறது. அப்படி வரும்போது சூரிய கிரணங்கள் ஒளியிற் குறைந்து போகின்றன. அவற்றிலுள்ள நீலக்கிரணங்கள் அதிகமாகச் சிதறுண்டு விலகிப் போகின்றன. ஆதலால் நமது கண்ணில் வந்து படும் ஒளியில் உள்ள நீலநிறம் அளவில் குறைந்து போகிறது. ஏழு நிறங்களும் உரிய அளவில் கலந்திருப்பதால் அல்லவோ சூரிய பிம்பமானது வெள்ளிபோல் பிரகாசிக்கிறது? முக்கியமான ஒரு நிறம் குறைந்து போகவே வெண்மையின் தன்மை மாறிவிடுகிறது. நீலநிறம் குறைந்துபோவதால் வெள்ளிய சூரிய பிம்பம் நிறம்மாறிப் பொன் நிறமாகவோ செந்நிறமாகவோ தோன்றுகிறது. வான வெளியில் உண்டாகும் மாறுதல்களும் இவ்வாறே உண்டாகின்றன. வானத்திலுள்ள நீலக் கிரணங்கள் குறைவான அளவில் நமது கண்களில் வந்து படுவதால் வானமானது நீல நிறத்தை இழந்து செவ்வானமாகத் தோன்றுகிறது. காற்றிலுள்ள தூசியினாலும் வானத்தின் நிறம் மாறுபடுகிறது. நீர்த்துளியும், நீராவியும், மேகங்களும் வானத்திலே எத்தனையோ நிற மாறுபாடுகளை உண்டாக்குகின்றன. மேகங்களற்ற மாலைப்பொழுதிலே உன்னதமான மலைச்சிகரத்திலே நின்று கொண்டு வானத்தைக் கவனித்துப் பார்ப்பதுதான் வானத்தின் நிறங்களை ஆராய்வதற்கு ஏற்ற நல்ல ஆராய்ச்சி முறை. நீலகிரியிலுள்ள தொட்டபெட்டா மலை உச்சியில் நின்றுகொண்டு டாக்டர் ராமன் சில ஆராய்ச்சிகளை நடத்தினர். இவ்வாராய்ச்சிகள் யாவும் மேற்சொன்ன முடிவுகளையே உறுதி செய்தன.

கடல்

நீலக் கடல்

'நீலநிறக்கடலில் என்ன கண்டிட்டாய்?' என்னும் கேள்விக்கு விரிந்த விசும்பிடையிற் கண்டதையே நீலக் கடலிடையும் கண்டிட்டேன் என்று விஞ்ஞானியும் சொல்லுகிறான். கப்பலேறி நாம் கடற் பிரயாணம் செய்யும்பொழுது நம்மைச் சுற்றி எல்லாப் பக்கங்களிலும் கடல் சூழ்ந்து விரிந்துகிடக்கின்றது. மேலே உள்ள வானத்தின் நிறம் நீலம்!

சுற்றிலும் உள்ள கடலின் நிறம் நீலம்! எங்கே பார்த்தாலும் ஒரே நீலநிறச் செறிவு!

கப்பலிலிருந்து கீழே பார்ப்போனுக்குக் கடலின் நீர் தூய நீலமாகவோ கருநீலமாகவோ தோன்றுகிறது. கடலின் அடியிலே உள்ள பொருள்கள் அவன் கண்ணுக்குத் தெரிவதில்லை. அடி மட்டத்திலுள்ள பொருள்களைக் கடல்நீர் மறைக்கின்றது. அதே கடல் நீரைத்தான் கப்பலில் குளிக்கும் ஸ்நான அறையில் உள்ள பீங்கான் தொட்டிகளில் நிரப்புகிறார்கள். அப்பொழுது அதி லுள்ள நீரானது பளிங்கு போலத் தெளிவாயிருக்கிறது! தொட்டி யின் அடியிலுள்ள பொருள்கள் யாவும் நன்றாகத் தெரிகின்றன! தொட்டித் தண்ணீரிலே மிகவும் லேசான பச்சைநிறம் ஒன்று தெரிந்ததும் தெரியாததுமாய் இருக்கிறது. கடலிலே இருக்கும் போது நீருக்கு இருந்த அந்த அழகிய கருநீலநிறம் தொட்டிக்கு வந்ததும் காணவில்லை. அது எங்கே போய்விட்டது?

இதைப்பற்றி ஆராய்ந்த சிலர், 'கடலானது வானத்தின் நீல நிறத்தைப் பிரதிபலிக்கிறது. ஆகையால்தான் அது நீலநிறம் உடையதாகத் தோன்றுகிறது. ஆகாயத்தின் நீலநிறத்தையே நாம், நிலைக்கண்ணாடியில் பார்ப்பதுபோல், சமுத்திரஜலத்திலும் தெரியக் காண்கிறோம்' என்று சொன்னார்கள். 'வானத்திலே மேகங்கள் திரண்டு, மந்தார மாயிருக்கிற வேளையிலே கடலானது நீலநிறமாய்த் தோன்றுவதில் லையே? அப்பொழுது அது சாம்பல்நிறமாகவோ காரீய நிற மாகவோதானே தோன்றுகிறது. நீலநிறம் அதற்கு இயற்கையான நிறமானால் எப்பொழுதும் அது நீலநிறமாக அல்லவோ தோன்ற வேண்டும்?' என்று வழக்குப்பேசினார்கள்.

ஒரு கட்சி

இது சரியான காரணம் அல்ல. ஏனென்றால், வானத்தின் நிறத்தைக்காட்டிலும் கடலின் நிறம் அதிக நீலமாக அல்லவோ இருக்கிறது! அப்படி யிருக்கும்போது அதைப் பிரதிபலிப்பு என்று எப்படிச் சொல்லலாம்? வானத்தை மேகம் மூடுகிறபோது கடலின் நிறம் மங்குகிறது என்பது உண்மைதான். ஆனால் அது மேகத்தைப் பிரதிபலிப்பதால் அல்ல. கடலின் நிறத்தை நன்கு எடுத்துக்காட்டும் சூரிய வெளிச்சமானது மேகத்தால் மறை பட்டுக் குறைந்துபோகிறது. அதனால்தான் கடல் நிறமும் குறைந்ததாகத் தோன்றுகிறது.

'கடல் நீருக்கு இயற்கையாக உள்ள நிறம் நீலநிறம்; அதனால் தான் கடல் நீலமாகத் தோன்றுகிறது' என்று வேறு சிலர் சொன்னார்கள்.

இன்னொரு கட்சி

இதுவும் சரியல்ல. ஏனென்றால், நீரானது பளிங்கு போன்றது. அதனால் ஒளியை ஊடுருவிச் செல்ல விடும் தன்மையை உடையது. அப்பேர்ப்பட்ட பொருள் ஒன்றின் உண்மையான நிறம் நமக்குத் தெரியவேண்டுமானால், பொருளைத் தெரியச் செய்யும் ஒளிக் கிரணங்களுக்கும் பொருளைப் பார்க்கும் நமது கண்களுக்கும் இடையே அப்பொருள் இருப்பது அவசியம். அப்படி இருந்தால்தான் அதன் ஊடு செல்லும் வெள்ளிய ஒளியானது அப் பொருளின் சுயநிறத்தால் நிறவேறுபாடு பெற்று, அந்த வேறுபாட்டோடு நமது கண்களை அடைந்து அப் பொருளின் உண்மை நிறத்தை நமக்குக் காட்டுகிறது. நாமும் பொருளின் உண்மை நிறத்தை அறிகிறோம். ஆதலால் தெளிவான கடல் நீரின் உண்மை நிறம் நமக்குத் தெரியவேண்டுமானால் கடல்நீரானது ஒளி வீசும் சூரியனுக்கும் நமக்கும் இடையே இருந்தால் அல்லவோ முடியும்? கடல்நீரைப் பார்க்கும் நாம் ஒளியைத் தருகின்ற சூரியனுக்கும் ஒளியை ஊடுருவ விடுகின்ற கடலுக்கும் இடையே அல்லவோ இருக்கிறோம்? கடல் நீரில் தூசியோ வேறு பொருள்களோ மிதந்து கொண்டிருக்கின்றன; அவை வெளிச்சத்தைப் பிரதிபலிக்கின்றன என்று வைத்துக்கொண்டாலன்றிக் கடலில் படுகிற ஒளி நம்முடைய கண்ணில் எப்படித் திரும்பவந்து படும்? ஆனால் மிகவும் நீலமாகத்தோன்றுகிற நீரைச் சோதித்துப் பார்த்தால், அது தூசியற்றதாயும் பளிங்கைப்போல் தெளிவாகவும் இருக்கிறது.


கப்பலிலும் ஆராய்ச்சி

இந்த விஷயத்தைக் குறித்து ஸர் சி. வி. ராமன் பலவகைச் சோதனைகளை நடத்திப்பார்த்தார். அவர் கப்பற் பிரயாணஞ் செய்யும் பொழுது கப்பலிலிருந்தே பல ஆராய்ச்சிகளை நடத்தினார். பிறகு அவருடைய சோதனைச் சாலையிலும் பல ஆராய்ச்சிகளை நடத்தினார். டாக்டர் ராமநாதனும் அநேக சோதனைகளை நடத்தினார்.

ஆழக்கடலிலே மிகவும் நீலமாய்த் தோன்றும் நீரானது மிகவும் தெளிவாயும் தம்பு தூசி யற்றதாயும் இருக்கிறது என்பது அந்த நீரை வெளியே எடுத்துச் சோதித்தபொழுது தெரிய வந்தது. அப்பேர்ப்பட்ட தெளிந்த நீரைச் சோதனைச் சாலையில்

பரிசோதித்தார்கள். அதன் வழியே பிரகாசமான வெளிச்சத்தைப் போகவிட்டார்கள். அப்பொழுது அந்த வெளிச்சமானது நல்ல நீலநிறமாய்த் தெரிந்தது.

இதனுல் உண்டான முடிவு என்ன என்றுல், காற்றிலே உள்ள மாலிக்யூல்கள் ஒளிக்கிரணத்தைச் சிதறச் செய்வதால் காற்று நீலநிறம் உடையதாகத் தோன்றுவது போலவே, நீரிலே உள்ள மாலிக்யூல்கள் ஒளிக்கிரணத்தைச் சிதறச் செய்வதாலேயே கடலின் நீர் நீலநிறமாகத் தோன்றுகிறது என்பதுதான். ஆயினும் இவ் விரண்டுக்கும் சிற்சில வித்தியாசங்கள் உண்டு. அவற்றை இப் பொழுது விவரிப்பது அவசியமில்லை.

வானினும் மிக்க நீலம்

வானத்தைக்காட்டிலும் கடல் அதிக நீலமாகத் தோன்றுகிற தல்லவா? அது ஏன்? காற்றின் மாலிக்யூல்கள் வெள்ளைக் கிரணத் தைச் சிதறச்செய்கின்றன. அவற்றுள் நீலம் நம்முடைய கண்ணில் வந்து படுகிறது. மற்ற நிறக் கிரணங்கள் பெரும்பாலும் காற்றின் மாலிக்யூல்களில் அடங்கிப்போகின்றன. ஆயினும் அவற்றுள் ஒரு சிறு பகுதி நமது கண்ணிலே வந்து படுகின்றது. படுவதால் இந்த நீல நிறத்தி காந்தி சற்றுக் குறைந்துபோகின்றது. அதனுல் காற்றின் நீலமானது அவ்வளவு நல்ல நீலமாகத் தோன்றுவதில்லை.

கடலின் நீரிலும் இதே மாதிரியான நிகழ்ச்சி நடக்கின்றது. அதன் மாலிக்யூல்கள் வெள்ளைக் கிரணத்தைச் சிதறச்செய்து நீலநிறத்தைமட்டிலும் வெளியே விடுகின்றன. அந்த நீலம் நமது கண்களில் படுகிறது. ஆனுல் சிவப்பு, மஞ்சள் முதலிய மற்ற நிறங்கள் மிகவும் அதிகமான அளவிலே நீரின் மாலிக்யூல் களுக்குள்ளே அடங்கிப்போகின்றன. கடலின் நீர் சிவப்பையும் மஞ்சளையும் விழுங்கிவிடுகிறது என்றே சொல்லலாம். அதனுல் அந் நீரானது, சிவப்பு மஞ்சள் முதலிய மாற்று நிறங்கள் கலவாத, தூய, நீல நிறம் உடையதாக நமது கண்ணுக்குத் தெரி கிறது. அதனுல்தான் வானத்தைக்காட்டிலும் கடலானது அதிக நீலமாகத் தோன்றுகிறது.

கரைந்தன: மிதப்பன: ஒளிர்வன

கடல்நீரில் கரைந்துள்ள பொருள்களும் அதில் மிதக்கின்ற தூசி போன்ற பொருள்களும் கடல்நீரின் நிறத்தை மாற்று கின்றன. அவற்றின்மேல் சூரியகிரணங்கள் படும்போது கடலானது நீலநிறம் குறைந்து, பசிய நீலமாகவோ, வெறும் பச்சையாகவோ, வெளிறிய பச்சையாகவோ, வெள்ளையாகவோ தோன்றுகிறது.

கடல்நீரின் நிறவேறுபாட்டிற்கு இன்னொரு காரணமும் உண்டு. கடல்நீரிலே சிற்சில பொருள்கள் இருக்கின்றன. அவை தாமாகவே பல்வேறு நிறங்களுடன் ஒளிர்கின்றன. அப்பொருள் களின் நிறங்களும் கடல்நீரின் நிறத்தை மாற்றுகின்றன.

வானத்திலும் கடலிலும் தோன்றும் நீலம் முதலிய அழகிய நிறங்கள் யாவும் கிட்டத்தட்ட ஒரே வகைக் காரணத்தினாலேயே உண்டாகின்றன என்கிற உண்மையை ஸர் சி. வி. ராமன் முதலிய விஞ்ஞானிகள் நுண்ணிய ஆராய்ச்சிகளை நடத்தி உலகம் அறியும்படி தெரிவித்தார்கள்.

ஆதலால், இவ்வழகுகளைக் கண்ணினால்மட்டும் அநுபவித்துக் கொண்டிருந்த நம்மை அறிவினாலும் காணும்படி செய்து நமது இன்ப உணர்ச்சியை இப்பெரியோர்கள் அதிகரிக்கச் செய்திருக் கிறார்கள்.

ஆட்டின் இயல்பு

வித்துவான் ச. கு. கணபதி ஐயர்

'அஜகஜாந்தரம்' என்பது ஒரு வழக்கு. இரண்டு மனிதருக்குள் பேதத்தைப் புலப்படுத்தும்போது, 'அவனுக்கும் இவனுக்கும் அஜகஜாந்தரம்' என்கின்றோம். அஜம் என்பது ஆடு; கஜம் என்பது யானை. அஜத்தையும் கஜத்தையும் முறையே சிறுமைக்கும் பெருமைக்கும் எல்லையாக வைத்துப் பலர் இத்தொடரை எடுத்தாளுகிறார்கள். துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் இத்தொடருக்கு வேறுவகையில் பொருள் காண்கிறார். கரும்புத் தோட்டத்திற் புகுந்த யானை, இரசமுள்ள கரும்பையே விரும்புகின்றது; அத்தோட்டத்தில் நுழைந்த ஆடோவென்றால் சாரமற்ற கருப்பந்தோகையையே கறிக்கின்றது. 'அவனுக்கும் இவனுக்கும் அஜகஜாந்தரம்' என்றால் அவ்விருவரில் ஒருவன் சாரமுள்ள விஷயங்களைக் கிரகிப்பவன் என்றும், மற்றவன் சாரமற்ற விஷயங்களையே கிரகிப்பவனென்றும் பொருள்கொள்ளவேண்டுமென்பது சிவப்பிரகாசரின் கருத்து. ஒழிவிலொடுக்கத்தின் உரையாசிரியரும் இப்பொருளையே குறிக்கின்றார். யானை, ஆடு இவற்றின் இயல்புகளை நன்கு அறிந்து இந்த இரண்டு புலவரும் மேற்கூறிய பொருளைக் கொண்டுள்ளார்கள். ஏதேனுமொன்றில் இழிந்தவர்களுக்கு ஆட்டை உவமை கூறும் வழக்கம் தமிழ்நாட்டில் இருந்து வருவதற்கு இத்தொடர் ஓர் எடுத்துக்காட்டாகும்.

கற்பிக்கும் விஷயங்களை எளிதில் மனத்திற் கொள்ளாதவனை இகழ்ச்சியாக 'ஆட்டுமூளை' யுடையவன் என்பது மற்றொரு வழக்கு. ஆட்டுமூளை அவ்வளவு மந்தமானதா என்ன? ஒருவர் சென்ற வழியையே கண்மூடிகளாய்ப் பலர் பின்பற்றிச் சென்றால் அவர்களை யெல்லாம் சிலர் 'ஆடுகள்' என்று பரிகசிக்கின்றனர். கடைமாணுக்கரை 'ஆட்டைப் போன்றவர்கள்' என்று இலக்கண நூல்கள் கூறுகின்றன: ஓரிடத்தில் வேண்டிய அளவு புல் முளைத்திருந்தாலும் ஆடு அவ்விடத்தில் வாயை வைத்துச் சிறிது கறித்த பிறகு வேறோரிடத்தை நாடிச் செல்லும். அங்கேயும் தங்கி முற்ற மேயாமல் பிறிதோரிடத்தைத் தேடிச் செல்லும். அதுபோல் கடைமாணுக்கர் நல்லாசிரியரைத் தலைப்பட்டும், அவரிடம் பல

நாளிருந்து கல்வி பயிலாமல் சின்னாளில் நீங்கி வேறோர் ஆசிரியரைத் தேடிச் செல்வார்கள். மேய்ச்சலால் ஆட்டின் வயிறும் நிறையும் பாடில்லை; இம்மாணவர்களின் கல்வியும் இச்செயலால் முற்றுப் பெறுவதில்லை. இந்த உவமையைப் பலர் அடிக்கடி எடுத்தாண்ட போதிலும் அவர்களுள் சிலராவது 'ஆட்டிற்கு இந்த இயல்பு இருப்பது ஏன்?' என்று தெரிந்துகொண்டதாகக் காணேன்.

ஆட்டின் இயல்புகளைக் குறித்து நம் முன்னோர்கள் பலபடியாக ஆராய்ந்து தம் நூல்களில் குறித்துள்ளார்கள். ஆட்டைப்பற்றி மட்டுமல்ல; பல விலங்குகளைப்பற்றியும், பறவைகளைப்பற்றியும், பிற பிராணிகளைப்பற்றியும் அங்கங்கே குறித்திருக்கிறார்கள். நாம் சிரமப்பட்டுப் பொறுமையுடன் அவற்றையெல்லாம் துருவித் தேடிப் பிராணி சாஸ்திரிகளின் ஆராய்ச்சி முடிபுகளைக்கொண்டு ஒப்பு நோக்கினால், தமிழ்மொழியில் ஒரு விலங்கு நூலையோ, பறவை நூலையோ மிக அழகாக எழுதிவிடலாகும். உதாரணமாக இங்கே ஆட்டைப்பற்றி எழுதுகிறேன்.

இக்காலத்தில் ஆடு வீட்டில் வளர்க்கப்படும் பிராணியாக மாறிவிட்டது; பல்லாயிர வருடங்களுக்குமுன் அது மலைப்பிரதேசத்தில் வாழ்ந்துவந்த மிருகமாகும். எந்தப் பிராணியினிடத்திலும் பரம்பரைக்குணங்கள் அமைந்திருப்பது இயல்பு. சில பரம்பரைக்குணங்கள் தற்காலப் பிராணிகளுக்கு அநாவசியமாக இருந்தாலும் அவற்றினிடம் அவ்வியல்புகள் அமைந்திருக்கின்றன. மலையில் தம் இஷ்டம்போல் வாழ்ந்துவந்த ஆடுகளுக்குச் சில இயல்புகள் அவசியமாக வேண்டியிருந்தன. இக்காலத்தில் நம் பட்டி ஆடுகளுக்கு அவ்வியல்புகளிற் பல வேண்டியதில்லை என்றாலும், அமைந்திருக்கின்றன. இவற்றையெல்லாம் ஆராய்வோம்.

மலைகளின்மேல் சுற்றித் திரியும் விலங்குகளுக்குக் குளம்புகள் கூர்மையானவைகளாகவும் பிளவுபட்டனவாகவும் இருக்கும். இந்த வசதியினால், பிற பிராணிகள் ஏறமுடியாத செங்குத்தான பாறைகள்மேலும் இவ்விதப் பிராணிகள் ஏறிவிடும். ஆபத்து நேரும் போது தற்காப்புக்காக இவை மலைப்பிரதேசங்களில் செங்குத்தான இடங்களைத் தேடி ஓடும். பிற பகைவிலங்குகள் அவற்றைப் பற்றிக்கொள்ள அந்த இடத்திற்குச் செல்வது இயலாத காரியமாகும். நம் பட்டி ஆடுகளிடம் இக் குணம் அமைந்திருக்கிறது. இப்பொழுது நீங்கள் ஓர் ஆட்டை வெருட்டிப் பாருங்கள். அது மேட்டுப் பிரதேசத்தை நாடித் தப்பித்துக்கொள்ள முயலும். ஒரு குட்டிச்சுவரின் அருகில் சில ஆடுகள் நிற்பதைக் கண்டு நான் அவைகளை வெருட்டினேன். பல ஆடுகள் சுவரின்மேல் ஏறிக்

கொண்டதைக் கண்டேன். வீட்டில் வளரும் ஆடுகளுக்கு இது பரம்பரைக்குணம் என்று நாம் உணரவேண்டும். ஆட்டின் குளம்புகள், மலைப்பிரதேசங்களில் சஞ்சாரம் செய்வதற்கு ஏற்றவையாகவே அமைந்துள்ளன.

ஆட்டிற்குக் கடவுள் பலமான குரலை அமைத்திருக்கிறார். மலைப்பிரதேசத்தில் அவை மேயும்போது புதர்கள், பாறைகள் முதலியன ஆடுகளில் ஒன்றை மற்றொன்று பாராமல் மறைத்து விடுவது இயல்பு. ஆகையால் ஆடுகள் ஒன்றை ஒன்று அறிந்து கொண்டு ஒன்றுசேருவதற்குப் பலமான குரலோசை அவசிய மல்லவா? கிளிகளும் கூட்டங் கூட்டமாக வாழ்பவை. பச்சைக் கிளிகள் இலைகள் நிறைந்தமரங்களில் வாழுங்காலையில் ஒன்றன் இருப்பிடம் மற்றொன்றுக்குத் தெரியாது. குரலைக்கொண்டு தான் அவை ஓரிடத்தில் கூடும். அதற்காகவே கிளிகளுக்கும் பெருங்குரல் அமைந்திருக்கின்றது.

தாயின் குரலோசையைக் கேட்டு ஆட்டுக்குட்டி அதனிடம் வருகிறது. அது, குட்டியை அதன் குரலால் அறிந்துகொள் ளாமல் மோப்பத்தினாலேயே அறிந்துகொள்ளுகின்றது. ஒரு குட்டியை அதன் தாயிடங்கொண்டுவிடாமல் வேறு ஆட்டி னிடம் விட்டால், அது முதலில் அந்தக் குட்டியை மோந்து பார்க்கின்றது. தன் குட்டியல்ல வென்பதை உணர்ந்துகொண்ட தும் அதனை இடித்துத் தள்ளிவிடுகின்றது. மாட்டினிடமும் இத் தகைய குணம் இருக்கிறது. தன் கன்று அணுகும்போதும் தாய்ப் பசு முதலில் அதனை மோந்துபார்த்த பிறகே பால் கொடுக்க இசைகின்றது. இந்த இயல்பு அதனிடம் இருப்பதனால்தான் சென்னையில் பால் விற்பவர்கள் செத்த கன்றுகளின் தோலில் வைக்கோலை அடைத்துக் கறவைப்பசுக்களை ஏமாற்றிப் பால் கறக்கிறார்கள். கன்று இறந்துவிட்ட பிறகும் அதன்தோல் பழைய வாசனையை இழப்பதில்லை போலும்!

ஆடுகள் மேய்ச்சலுக்குப் புறப்படுங்காலையில் பலத்திலும் அநுபவத்திலும் முதிர்ந்த ஓராடு முன்னால் வழிகாட்டிச் செல்லும்; மற்ற ஆடுகள், இராணுவம் கட்டளைக்குக் கீழ்ப்படுவது போல், ஒழுங்கு தவறாமல் அதனைப் பின்பற்றிச் செல்லும். யானைகளும் இந்த முறையைக் கைக்கொள்ளுமாம். முதலில் செல்லும் யானையை நூல்கள் யூதநாதன் என்று குறிக்கின்றன. மலைப்பிர தேசங்களில் மேடுகளும் பள்ளங்களும் வழியில் தடையாகப் புலப்படுவது இயல்பன்றோ? அதனால் முன்னால் செல்லும் ஆடு ஜாக்கிரதையாக வழிகாட்டிச் செல்லவேண்டுமல்லவா? முதலில்

செல்லும் ஆடு ஓரிடத்தைத் தாண்டிச் சென்றால் மற்றவையும் அந்த இடத்தைத் தாண்டியே செல்லும். முன் சென்ற ஆடு காரணமின்றித் தாண்டியிராது என்பது பின் தொடர்பவைகளின் கருத்து. ஓராட்டுமந்தை செல்லும் வழியில் முதலாட்டின்முன் ஒரு மூங்கிலைத் தடையாக நிறுத்துங்கள். அஃது அதனைத் தாண்டிச்செல்லும். இரண்டொன்று அவ்வாறு தாண்டிச் சென்ற பின் மூங்கிலை எடுத்துவிடுங்கள். எடுத்துவிட்ட பிறகும் அந்த இடத்தை மற்ற ஆடுகளும் தாண்டிச் செல்வதைக் காண்பீர்கள். பின்னால் வரும்ஆடுகள் ஒரு முறை தாண்டுவதற்குப் பதிலாக இரண்டு மூன்று முறை தாண்டிச் செல்வதையும் நாம் காணலாம். இது பரம்பரைக்குணம் என்று உணரவேண்டும்.

மலைகளில் புல்லும் தழைப்புதர்களும் இங்கும் அங்குமாகவே இருந்திருக்குமாகையால் மலையாடுகள் ஓரிடத்திலேயே இருந்து வயிறார மேயாமல் இங்கு மங்கும் திரிந்து மேயும் வழக்கத்தை இக்காலத்து ஆடுகளும் தம் முன்சந்ததியி னிடமிருந்து பெற்றிருக்கின்றன.

ஆடுகள் ஓரிடத்தைத் தாண்டுவதைக் கவனியுங்கள்; நான்கு கால்களையும் ஒன்றாகத் தூக்கித் தாண்டும். தாண்டி முடிந்ததும் மறுபடியும் கால்களை நிலத்தில் ஊன்றும்போது நான்கு கால்களையும் ஒருசேர நெருக்கித் தரையில் குளம்புகளை ஊன்றி நிற்கும். ஒரு பாறையிலிருந்து அதிக விஸ்தீரணமில்லாத மற்றொரு பாறைக்குத் தாண்டிச் செல்ல இந்த இயல்பு அவசியமல்லவா?

கூட்டம் கூட்டமாகக் கூடி வாழும் பிராணிகள் சிதறிக் கிடக்கும் சமயத்தில் அவற்றில் சிலவற்றிற்கு ஆபத்து நேரிடுவதாக வைத்துக் கொள்ளுவோம். அவ்வித ஆபத்துக் காலத்தில் சிதறிக் கிடக்கும் எல்லாப் பிராணிகளும் ஓரிடத்தில் வந்து சந்தித்த பிறகே தப்பிச் செல்ல முயலும். இச் சந்தர்ப்பங்களில் ஆபத்துத் தோன்றிய இடத்துக்கே எல்லாப் பிராணிகளும் சென்று தீமைக்கு உள்ளாவதும் உண்டு. இந்த இயல்பு ஆடுகளிடம் சர்வ சாதாரணமாக அமைந்துள்ளது.

செம்மறியாடுகளின் கொம்புகள் திருகலாக அதன் இருபுறங்களிலும் உடலை நோக்கி வளைந்து சுருள்போல் அமைந்திருக்கின்றன. கொம்பு உள்பட தலையின் அகலத்தைக் கணக்கெடுக்குங்கால், மொத்த அகலம் உடலின் எந்தப் பாகத்தின் அகலத்தைக் காட்டிலும் சிறிதளவு அதிகமாகவே இருக்கும். பூனைக்கும் எலிக்கும் மீசை மயிர் எப்படி உதவி செய்கின்றது? இடுக்கான வழிகளில் அவை செல்லும்போது மீசை மயிர் தடையுண்டால்,

அவ்வழியாக அதற்குமேல் தம்மாற் செல்லமுடியாதென்று பூனையும் எலியும் பின்தங்கிவிடும். அவ்வாறு செம்மறியாடு தன் கொம்புகளோடு தலையை நுழைக்க முடியாத பாறை, புதர் இடுக்குக்களில் செல்லாது. செம்மறியாட்டிற்குக் கொம்புகள் உடலை நோக்கி உட்புறம் சுருண்டிராவிட்டால் மலைப்புதர்களிற் செல்லும்போது கொம்புகள் கொடிகளில் சிக்குண்டு ஆடு வருந்தவேண்டி வருமல்லவா! ஆட்டிற்குக் கொம்பு சுருண்டிருப்பதன் இரகசியங்களில் இஃது ஒன்று.

அந்தக் கொம்புகளின் தட்டையான அகன்ற பாகம் வெளிப்புறம் தெரியுமாறு அமைந்திருப்பதை நாம் பார்க்கலாம். இது தற்காப்புக்காக. ஆடு தன்தலையால், கொம்புகளின் பலத்தைக் கொண்டு, பிற பிராணிகளுடன் போராடும் இயல்புடையது. அதனுல் முட்டப்படும் பிராணிக்கு அடி பலமாகப் படுவதற்காகவே கொம்பின் தட்டையான பாகம் வெளிப்புறமாக அமைந்திருக்கின்றது. வீரங்காட்டிப் போர்செய்வதில் ஆட்டைப்போன்ற விலங்குகளை நாம் காண்பது அருமை. ஆட்டுச் சண்டை சிலருக்கு உற்சாக மளிக்கத் தக்கது. முன் காலத்தில் தமிழ்நாட்டார் இவ்விதச் சண்டைகளில் வெறிகொண்டிருந்தார்கள். செல்வச் செருக்கினையுடைய மாந்தர்கள் ஆடுகளின் புண்ணைக் கருதாராய்ப் பின்னும் போரை விரும்பி, ஆடுகளைச் சண்டைக்குத் தூண்டி வேடிக்கை பார்ப்பதைத் தமிழ்நூல்கள் பலவற்றிற் காணலாம். வீரர்கள் போரொழிந்த காலங்களில் ஆட்டுச் சண்டைகளில் ஈடுபட்டுவந்தார்கள். இது 'தகர்வென்றி' என்று புறத்திணை யிலக்கணத்தில் கூறப்படும்.

செம்மறியாட்டின் வீரம் போற்றத்தக்கதொன்ரும். அது எந்த மிருகத்தினிடத்திலும் சண்டைக்குத் தயாராக நிற்கத் தக்கது. மந்தைக்கு ஆபத்து வராமற் பாதுகாப்பதும் இந்தச் செம்மறியாடுதான். எவராவது தன்னை எதிர்க்கத் தயாராகின்றனர் என்பதைச் சிறிதளவு அறிந்தாலுங்கூட, செம்மறியாடு அவர்கள்மேல் பாயத் துணிந்துவிடும். ஆட்டுக்குட்டிகள் விளையாட்டாக இந்தப் பயிற்சியைப் பழகிக் கொள்வதை நாம் பலமுறை பார்த்திருக்கிறோமல்லவா! சில ஆடுகள் தம் இடியினுல் பெருங் குதிரைகளைக்கூடக் கீழே தள்ளிவிடக்கூடுமாம். சேலம் ஜில்லா வேலூரில் ஓரிடத்தில் பயங்கரமான நாய் ஒன்று இருந்தது. அந்நாய், தான் இருக்கும் தெருவழியாக எத்தகைய மாடு, எருமை, கழுதை முதலியவற்றையும் வரவிடுவதில்லை. அந்த நாயைக் கண்டால் அவை ஓடிவிடும். ஒருநாள் செம்மறியாடொன்று அவ்வழியாக வந்தது. அதனைக் கண்டு அந்த நாய் தன் வழக்கம்

போல் குரைத்துக்கொண்டு அதன்மேற் பாயச் சென்றது. உடனே ஆடு எதிர்ப்புக்குத் தயாராகத் தலையைக் காட்டிக்கொண்டு முன் சென்றது. பிறகு நாய் பிற்படத் தொடங்கியது. ஆனால் ஆடு அதனோடு நில்லாமல் நாயைத் துரத்த ஆரம்பித்தது. சிறிது நேரத்தில் நாய் வீட்டிற்குள் ஓடி மறைந்தது. அந்த ஆடு பிறகு வெற்றி பெற்றதாகக் கம்பீரத்தோடு அந்த வீட்டின் தலை வாசலில் நெடுநேரம் நாய் வருமென்று காத்திருந்துவிட்டு அப்பால் சென்றது.

போர் செய்யும்போது ஆடு தன் முன்னங் கால்களைத் தூக்கிக்கொண்டு தலையால் இடிக்க முயலும். சில சமயங்களில் இரண்டோரடி பின் சென்று ஓடிவந்து தாக்குவதும் உண்டு. பந்தயங்களில் நிகளத்தையும், உயரத்தையும் (*Long Jump and High Jump*) தாண்ட விரும்புகின்றவர்கள் பின் சென்று ஓடிவந்து தாண்டுவதை ஆட்டினிடமிருந்தே கற்றுக்கொண்டார்கள் போலும்!

சில ஆடுகள் முன்னங்கால்களை மண்டியிட்டு இரையை உட்கொள்வதைக் காண்கின்றோம். மலை ஆடுகள் அக்காலத்தில் பாறைகளின் சரிவுகளில் முளைத்திருக்கும் புற்களைப் பாறையின் மேலிருந்தவண்ணமாக முன்னங் கால்களை மடித்துக் குனிந்து தின்றுவந்த பழக்கம் பரம்பரைக் குணமாக இவற்றுக்கு அமைந்ததுபோலும்.

ஆடு, தன்னை வளர்ப்பவனை நன்கு அறிந்துகொண்டு அவன் செல்லுமிடங்களுக்கெல்லாம் தானாக அவனைத் தொடர்ந்து செல்லும் இயல்புடையது. இது சிலப்பதிகாரத்தில் அடியார்க்கு நல்லாரால் குறிக்கப்பட்டிருக்கிறது. (சிலப். நாடுகாண், 5-8 விசேட வுரை.)

ஆட்டிற்குச் சந்தோஷமுண்டானால் அது தன் புறவாயினை நக்கித் தன் மகிழ்ச்சியை அறிவிக்கும். 'புறவாயினை நக்கும் நல்ல தகர்' என்று புறப்பொருள் வெண்பாமாலையார் குறித்துள்ளார். அது தன் எஜமானன்மேல் உராய்ந்து தன் அன்பைக் காட்டுவது முண்டு.

ஆட்டுக்குட்டி எப்பொழுதும் துள்ளி விளையாடும் இயல்புடையது. என்றைக்காவது அது துள்ளி விளையாடாமற் போகுமானால் அச்செயல் உற்பாதத்தின் அறிகுறி என்று சிலப்பதிகாரம் (பக்கம் 442, 451) கூறும்.

மந்தை வெளிகளில் ஆடுகள் மேய்ந்துகொண்டிருக்கையில் மழை வந்துவிட்டால் அவைகள் படும் துன்பத்தை அளவிட்டுக்

கூற இயலாது. மழைத் துன்பந்தான் அதற்குப் பெருந்துன்பம். அச்சமயங்களில் ஓராடு மற்றோர் ஆட்டின் பின்னங் கால்களுக் கிடையில் தன் தலையை வைத்துக்கொண்டு அவஸ்தையுறுவதைக் காணலாகும். 'ஆடு நனைகிறதென்று ஓநாய் அழுததாம்' என்ற பழமொழியால் ஆடு மழைத் துன்பத்தைப் பெரிதாகக் கருதுவது ஊகிக்கப்படுகிறது. மழை வரப்போவதை முன்னதாகத் தெரி விப்பவைகளில் ஆடும் ஒன்றாகும். மேய்ச்சலுக்காக ஆடுகளைப் பட்டியிலிருந்து வெளிப்படுத்துகையில் அவை வெளி வராமல் பட்டியிலேயே அடைந்திருக்க விரும்புமாயின், அன்று மழை வரும் என்று நம் குடியானவர்கள் உணர்ந்திருக்கிறார்கள்.

புராணம் முதலிய நூல்களில் ஆட்டைப்பற்றிய பல செய்தி கள் கூறப்படுகின்றன. கும்பகருணனை வேறு வகைகளில் துயி லெழுப்ப முடியாத அரக்கர்கள் ஆடுகளைக்கொண்டு அவனை மிதிப் பித்து எழுப்பினார்களாம். நாரதர் வேள்வியினின்று எழுந்த ஓராட்டுக்கிடாய் உலகையே அழிக்கத் தலைப்பட்டகாலையில் முருகக்கடவுள் அதனை அடக்கி வாகனமாகக் கொண்டாராம். அக்கினிதேவனுடைய வாகனமும் ஆடுதான். சிவபெருமானை மதியாத தக்கன் தன் தலையை இழந்து பிறகு ஆட்டுத் தலையோடு உயிர் பெற்று அவர் விஷயமாகச் சமகம் என்ற நூலை இயற்றினான் என்று கந்த புராணம் கூறும். இக் கதைகளில் அமைந்துகிடக்கும் உட்பொருளை வாசகர்களின் ஆராய்ச்சிக்கு விட்டொழித்து, விரிவஞ்சி, இக் கட்டுரையை முடிக்கின்றேன்.

விஷ விருக்ஷம்

பங்கிம் சந்த்ர சட்டோபாத்யாய

[நகேந்த்ரன் ஒரு பெரிய தனவான். அவன் குந்தநந்தினி என்ற அநாதையான ஓர் அழகிய யுவதியைத் தன் ஆதரவில் வைத்துக் கொண்டு போஷிக்கலானான். நகேந்த்ரனின் மனைவி ஸூர்யமுகி என்பவள் சகோதர முறை பாராட்டிவந்த தாராசரண் என்பவனுக்குக் குந்தம் விவாகம் செய்து கொடுக்கப்பட்டாள். தாராசரண் நண்பர்களில் தேவேந்த்ரன் என்பவன் ஒருவன். அவன் குந்தநந்தினியின் புது இளமையின் இணையற்ற எழிலைக்கண்டதும் மயங்கிப்போனான். அவனால் அவளை மறக்க முடியவில்லை. நிற்க, சின்னாளில் அந்த இளம் பருவத்திலேயே குந்தம் 'விதவை' என்ற பழிச்சொல்லுக்கு ஆளாகி, மீட்டும் நகேந்த்ரன் மாளிகைக்கு வந்து சேர்ந்தாள். ஒருநாள் அம் மாளிகைக்கு ஹரிதாஸி வைஷ்ணவி என்ற ஒரு பிச்சைக்காரி வந்தாள். வந்தவள் குந்தத்தைத் தனிமையில் கண்டு பேசும் சந்தர்ப்பத்தைப் பெற்று, முன்பு ஓடிப்போயிருந்த குந்தத்தினுடைய மாமியார் ஓரிடத்தில் தங்கியிருப்பதாகவும், அவள் குந்தத்தைப் பார்க்க விரும்புவதாகவும் கூறினாள். குந்தம் வைஷ்ணவியைப் பின் தொடர மறுக்கவே, அவள் வறிதே திரும்பிச் சென்றாள். இதுவே முன் ஒன்பது அத்தியாயங்களின் சுருக்கம்.]

(343-ஆம் பக்கத்தொடர்ச்சி)

பத்தாவது அத்தியாயம்

தேவேந்த்ர பாபு

ஹரிதாஸி வைஷ்ணவி நகேந்த்ரதத்தனின் அந்தப்புரத்தை விட்டு நேராகத் தேவீபுரத்தை நோக்கிச் சென்றாள். தேவீபுரத்தில் விசித்திர இரும்புக் கிராதிகள் சூழ்ந்த ஓர் உத்யானவனம். அதில் அநேகவிதமான நறுமலர்ச் செடிகளும் கனிதரும் தருக்களும் இருந்தன. காவினிடையே ஒரு குளம். அதற்கு மேலண்டை பாகத்தில் ஒரு சிருங்கார மண்டபம். ஹரிதாஸி அந்தப் புஷ்பவனத்தை நண்ணினாள். சிருங்காரமண்டபத்திலுள்ள ஒரு தனி அறையை அடைந்து வேஷங்களைக் களைய ஆரம்பித்தாள். சற்றுமுன் வாரி முடித்திருந்த கூந்தல் அவளுடைய தலையிலிருந்து நழுவிக் கீழே விழுந்தது. அது ஒரு பொய்க் கூந்தலே. மார்பிலிருந்த ஸ்தனங்கள் இரண்டும் கழன்று விழுந்தன. அவை துணியால் அமைந்தவை. வைஷ்ணவி, பித்தளைக் காப்பையும், வங்கி வளையலையும் கழற்றி

னாள். நெற்றியிலிருக்கும் ரஸகலி திலகத்தை அழித்தாள். வேறு ஆடை புனைந்து வைஷ்ணவி ஸ்திரீவேஷத்தை நீக்கி முருகு வாய்ந்த ஒரு யுவபுருஷனாக விளங்கினாள். இளைஞனின் வயது இருபத்தைந்து இருக்கும். ஸுகுமாரமான தேகக் கட்டும் பொலிவுற்ற மேனியும் வாய்ந்த இந்த ஆள்தான் தேவேந்த்ர பிரபு! வாசகர்கள் இவனை முன்னமே அறிந்திருப்பார்கள்.

தேவேந்த்ரனும், நகேந்த்ரனும் ஒரே வம்சத்தினர். ஆனால் இரு குடும்பத்தாருக்கும் பரம்பரையாய் ஒரு பகை வந்து கொண்டே இருந்தது. தேவீபுரத்துப் பாபுக்களுக்கும், கோவிந்த புரத்து பாபுக்களுக்கும் முகாவலோகனமே இல்லாமற் போய்விட்டது. இரு தரத்தாருக்குமுள்ள சச்சரவு கோர்ட்டு வரை போய்விட்டது. முடிவில் ஒரு பெரிய வியாஜ்யத்தில் நகேந்த்ரனுடைய பாட்டனார் தேவேந்த்ரனுடைய பாட்டனைத் தோற்கடித்துவிட்டதனால் தேவீ புரத்துப் பிரபுக்கள் சக்தி இழந்தனர். வழக்காடினதினால் அவர்களுக்கு இருந்த கொஞ்சநஞ்சம் சொத்தும் போய்விட்டது. அது முதற்கொண்டு தேவீபுரம் மாட்சிமை குன்றி, கோவிந்த புரம் செல்வத்துடன் விளங்கலாயிற்று. அதுமுதல் இரு தரத்தாருக்கும் சமாதானமே ஏற்படவில்லை. தேவேந்த்ரனுடைய தகப்பனார் இழந்த ஐச்வர்யத்தையும் ஹோதாவையும் மீண்டும் பெற ஓர் உபாயம் செய்தார். ஹரிபூர் ஜில்லாவில் கணேச் பாபு என்ற ஒரு ஜமீந்தார் இருந்தார். அவருக்கு ஒரே பெண், ஹைமவதி. தேவேந்த்ரனுக்கு அவளை மணந்துகொண்டார், ஏராளமான சொத்து வரும் என்ற ஆசையால். ஹைமவதி என்னவோ நல்லமாதிரிதான். ஆனால் அவளிடம் சில குணக் கோளாறுகள் இருந்தன. அவள் குரூபி, வாயாடி; இன்மொழியற்ற, சிடுசிடுத்த ஸ்வபாவ முடையவள். அவளைக் கல்யாணம் செய்துகொள்ளும் வரை தேவேந்த்ரனுடைய நடத்தையில் யாதொரு கல்மஷமும் இல்லை. ஸத்யநிஷ்டனாய் இருந்தான். இந்தக் கல்யாணமே அவனுக்குச் சனியனாக முடிந்தது. யௌவனதசை வந்ததும் தேவேந்த்ரன் தன் பார்யையை வைத்துக் கொண்டு இல்லறம் நடத்துவதில் யாதொரு ஸுகமும் இல்லை என்று ஐயமறத் தெரிந்து கொண்டான். இளமையின் வேகத்தினால் அவனுக்குப் பரஸ்திரீமோஹம் அதிகரித்தது. தன்னகத்திலேயே இந்த வேட்கையைத் தணித்துக்கொள்ள அவனால் இயலவில்லை. தம்பதிகளுக்கிடையே எப்போதாவது சிறிது பிரேமை மூண்டால், தலைவியின் சிடுமூஞ்சி அந்த க்ஷணநேர இல்லற ஸுகத்தையும் பாழாக்கிவிடும். ஸுகம் கிடக்கட்டும் ஒரு பக்கம். இந்த வாயாடி இழைக்கும் எரிச்சலை அவனால் ஸஹிக்க முடியவில்லை. ஆனவரை பொறுத்துப் பார்த்தான்; முடியவில்லை. ஒரு நாள் அளவுக்கு

மீறிக் கோபமூட்டப்பட அவன் தன் மனைவியைக் கைகொண்ட வரை புடைத்துவிட்டுக் கல்கத்தாவிற்குவந்து வசிக்கலானான். இதற்குள் அவனுடைய தகப்பனாரும் பரலோகப்ராப்தி அடைந்து விட்டார். தேவேந்த்ரன் தன்னிஷ்டப்படி ஆட வழி ஏற்பட்டது. கல்கத்தாவின் பாபக்குழியில் உழன்று, சிற்றின்ப லாகிரியில் மயங்கி இருந்தான். இந்த ஸ்திதியிலும் சில சமயம் அவனுக்குத் தான் செய்வது மஹாபாபம் என்று தோன்றும். இம் மனக்கிளர்ச்சியை மறந்திருக்க வேண்டி ஆரம்பித்து, ஓயாமல் குடிக்கவும் பழக்கிக் கொண்டு விட்டான். அப்புறம் அவனுக்கு உலகமே அனுவச்ய மாகிவிட்டது. பாபக்ருத்யங்களே அவனுடைய சித்தத்தைக் கடைசியில் அடக்கி ஆண்டன. நாகரிகமுறைகளில் தேர்ச்சி பெற்றுக் கிராம வாழ்வின் தூய்மையைக் கெடுக்க ஊருக்குத் திரும்பி வந்து தன் மாளிகையில் புதிதாகக் கட்டப்பட்ட கேளீ க்ருஹத்தில் பட்டணத்துச் சுகங்களுடன் வாழ்ந்து வந்தான்.

தேவேந்த்ரன் கல்கத்தாவிலிருந்து கற்றுவந்த புது ரீதிகள் எண்ணற்றவை. தேவீபுரத்தைச் சீர்திருத்தம் பண்ண வந்திருப்ப தாகத் தன்னைப் பற்றியே தான் 'அளந்து' கொண்டான். முதலில் பிரம்மஸமாஜம் ஒன்றை ஸ்தாபித்தான். தாராசரண் முதலியோர் அவனுடன் சேர்ந்துகொண்டனர். நடந்த சொற்பொழிவு களுக்குக் கணக்கே கிடையாது. ஒரு பாலிகா பாடசாலை வைக்கப் போவதாக ஆர்ப்பாட்டம் செய்தார்கள். ஆனால் கார்யத்தில் ஒன்றும் நடக்கவில்லை. விதவாவிவாஹ ப்ரச்னையில் மும்முரமாக இறங்கினார்கள். கீழ் வகுப்பைச் சேர்ந்த இருவருக்கு விதவா விவாஹம் நடத்திவைத்தனர். ஜெனனாவிலிருந்து ஸ்திரீகளை வெளிக்குக் கொண்டு வரவேண்டுமென்று கிளர்ச்சி செய்தார்கள். லோகோபகாரமாகத் தேவேந்த்ரன் இப்படிப் பாடுபட்டு வேலை செய்வதில் என்ன அதிசயம் இருக்கிறது? தன் இல்லற வாழ்க்கை சரியாக இல்லாததனால் அல்லவோ, பாவம், அவன் சுயநலமற்றுத் தேசத்தொண்டு செய்ய ஆரம்பித்துவிட்டான்!

தேவேந்த்ரபாபு வைஷ்ணவியின் வேஷத்தைக் க[illegible]த்து நிஜ ஸ்வரூபம் கொள்ளத் தன்னறைக்கு வந்தான் என்று முன்னமேயே சொன்னோம். வேலைக்காரன் ஒருவன் புகையிலையை நிரப்பி ஹுக் காவை அவன்எதிரே கொண்டுவந்து வைத்தான். சற்று நேரம்வரை தேவேந்த்ரன் ஸர்வச்ரமநிவாரிணியான இந்தப் புகையிலை மஹா தேவியின் த்யானத்தில் ஆழ்ந்திருந்தான். இந்த மஹாதேவியின் வரப்ரஸாதத்தைப் பெறாதவர் மனிதர்களே அல்லர்! ஹே ஸர்வ ஜன சித்த விலாஸினீ! மாந்தர் அறிவை மயக்கும் மஹா சக்தியே! உன்னிடத்தில் நீங்காத பக்தியை எனக்கு அருள வேண்டும், உன்

னுடைய வாஹனமான குழாயும், தெய்வப் பணிப் பெண்களான ஹுக்காவும், குடாக்கும், ஸதாகாலமும் என் கண்முன் தோன்றி என்மோக்ஷ ஸாதனத்திற்கு ஹேதுவாய் இருக்கட்டும். ஹே ஹுக் காய்! ஹே குழாயே! புகைச் சுருள் விடுபவளே! ஸர்ப்பத்தைப் பழிக்கும் குண்டலாகார ரூபிணீ! வெள்ளி அணி பூண்ட பேர் எழிலே! உன் கிரீடத்தில் தொங்கும் ஜாலரின் (குஞ்சம்) ஜிலு ஜிலுப்புத்தான் என்னே! உன் நாபியில் திகழும் நீரின் பொங்கொலி தான் என்னே! ஹுக்காய்! பார்யை இகழ்ந்த புருஷரின் மனதுக்கு ஆறுதலளிக்கும் பெருந்தகையே! பிரபுவால் வெருட்டப்பட்டுத் துன்புறும் எளியோருக்கு அபயஹஸ்த ப்ரதாயினீ! புல்லறிவாளர் நின் மஹிமையை எவ்வாறு உணர்வர்? துக்கம் கொண்டவருக்குத் துவர் தருகிறாய்! அச்சம் கொண்டவருக்கு ஆண்மை தருகிறாய்! புத்தி கெட்டவருக்கு முக்தியைத் தருகிறாய். சினம் கொண்ட வருக்குச் சாந்தியைத் தருகிறாய்! ஹே ஸர்வஸுகதாயினீ! நீ என் க்ருஹத்தில் என்றும் நிலையாக இரு. தாயே! உன் ஸுகந்தம் தினம் தினம் பெருகிக் கமழட்டும். உன் வயிற்றிலுள்ள ஜலகல் லோலம் மேக முழக்கம்போல் தொனிக்கட்டும். உன் குழை இதழி லிருந்து என் இதழ் சிறிதும் பிரியாமல் நீடூழி இருக்கட்டும்.

சிற்றின்பத்தில் ஈடுபட்ட தேவேந்த்ரன் தன்னிஷ்டப்படி இந்தத் தூமாதேவியை உபாஸனை பண்ணிக்கொண்டிருந்தான். இதனாலும் அவன் மனதிற்குத் திருப்தி உண்டாக வில்லை. இன்னொரு சக்தி-பூஜையில் இறங்கினான். வேலைக்காரன் கையில், வைக்கோல் வஸ்திரம் தரித்துச் சீசா வாஹனமேறி ஸுராதேவி பிரசன்னமானாள். வெண்மையான படுக்கையின் பேரில், வெள்ளித் தட்டில் வீற்றிருந்த வண்ணம், அந்திவானில் தோன்றும் குருதி நிறம்போல் 'டிகாண்டரி'ல் (*Decanter*), மினுக்குடன், ஒயின்தேவி ஆவிர்ப்பாவமானாள். பூப்போட்ட 'க்ளாஸி'ல், கருப்பு நிறப் புரோகிதர் (*Butler*), பாத்திரம் வரவரச் சிவக்கச் செந்நிறத் தெய் வத்தை இறக்கினார். 'ஹாட் வாடர் (சுடுநீர்) ப்ளேட்' என்ற நாமம் பூண்ட திவ்யமான புஷ்பப் பாத்திரத்தில் ரோஸ்ட் மட்டன் கட்லெட் (*Roast mutton cutlet*) என்னும் பரிமள புஷ்பங் களைக் கொண்டுவைத்தார். தேவேந்த்ர தத்தர் சாஸ்த்ரோக்த மாய்ப் பக்தியுடன் அர்ச்சிக்க ஆரம்பித்தார்.

இது முடிந்ததும், தான்பூரா (தம்பூரா), தபலா, ஸிதார் முதலிய இசைக்கருவிகளுடன் காயகர்களின் ஜமா ஒன்று தேவேந்த்ரனின் பேரில் வந்திருக்கும் தெய்வத்தை மெள்ள மெள்ள ஆற்றுவித்துச் சுபகாரியத்தை இனிது முடித்தது.

கடைசியில் தேவேந்த்ரனுடைய ஸமவயதினன் ஒருவன்— வசீகரத் தோற்றமுடைய ஓர் இளைஞன்—அங்கு வந்தான். ஸுரேந்த்ரன் தேவேந்த்ரனுக்கு அம்மான்சேய் ஆகவேண்டும். குணத்திலோ தேவேந்த்ரனுக்கு நேர் மாறானவன். இவனுடைய கண்யஸ்வபாவத்தினால் இவன்மீது தேவேந்த்ரனுக்கு அளவற்ற ப்ரீதி. இவனுடைய பேச்சைத் தவிர வேறு யாருடைய பேச்சையும் இந்த உலகில் அவன் கேட்பது கிடையாது. பிரதிதினம் இரவு ஸுரேந்த்ரன், தேவேந்த்ரனைப் பார்த்துவிட்டுப் போவது வழக்கம். ஆனால் கெட்ட ஸஹவாஸம் பிடித்துக்கொள்ளுமோ என்ற திகிலினால், சீலமுள்ள அந்த வாலிபன் அங்கு வெகுநேரம் தங்குவதில்லை. எல்லோரும் எழுந்துபோனதும், ஸுரேந்த்ரன் தேவேந்த்ரனை அந்தரங்கமாய், "இன்று உனக்கு உடம்பு எப்படி இருக்கிறது?" என்று கேட்டான்.

தேவேந்த்ரன்: शरीरं व्याधिमन्दिरम्: சரீரம் வ்யாதிமந்திரம் (உடலானது நோய்க்கு இருப்பிடம்).

ஸு: ஆமாம், உன் வரைக்கும். இன்று ஜுரம் வந்ததா?

தே: இல்லை.

"குலைநோய் எப்படி இருக்கிறது?"

"முன்போலவேதான்."

"இதெல்லாம் கொஞ்ச காலம் நிறுத்திவைக்கக்கூடாதா?"

"எதை? குடிப்பதையா? எத்தனை நாளைக்கு? அது என்னுடைய நேசப் பாங்கி யாச்சே!"

"அது நீ வரும்போது உன்னோடு வந்ததா? நீ போகும்போது கூடவும் வரப்போகிறதில்லையே. எவ்வளவோ கெட்ட பழக்கங்களை நீ விட்டிருக்கிறாய். இதைத் தள்ளிவைப்பது உனக்கு ஒரு கஷ்டமான காரியமா?"

"இதைத் தள்ளி வைப்பதனால் எனக்கு என்ன ஸுகம் வந்துவிடப்போகிறது? உலகத்தவருக்கு இருப்பதுபோல எனக்கு நிம்மதி ஏது?"

"ஆனால் உயிர் இருப்பதற்காகவாவது குடியை நிறுத்தேன்."

"உயிரை வைத்துக்கொண்டிருந்தால் ஸுகம் பெறலாம் என்ற நம்பிக்கை இருந்தால், இந்தப் பழக்கத்தை ஒழிக்கலாம். நான் எதற்காக இந்தப் பிராணனை வைத்திருக்கவேண்டும், சொல்?"

இதைக்கேட்டதும் ஸுரேந்த்ரனின் கண்களில் நீர் நிறைந்தது. ஓர் அன்பார்ந்த ஸ்நேகிதனின் கடைசி வார்த்தைகளான, "ஆனால் நான் சொல்வதைக் கேட்கமாட்டாயா?" என்ற வேண்டுகோளை

மொழிந்தான். தேவேந்த்ரனுடைய கண்களிலும் நீர் திரையிட்டது. "என்னை நல்வழிக்குத் திருப்பப் புத்தி கூறுபவர்கள் உன்னைத் தவிர எனக்கு யார் இருக்கிறார்கள்? நான் இதை ஒழிக்கப் பார்க்கிறேன், ஸுரேந்! இன்னும் . . . ." என்று நிறுத்தி விட்டான்.

"இன்னும் என்ன?" என்றான் ஸுரேந்த்ரன்.

"என் பெண்டாட்டி செத்தாள் என்று காதில் கேட்டேனால் இந்தக் குடியை விட்டுவிடுகிறேன். இல்லாவிட்டால் நான் பிழைத்திருந்தும் பயனில்லை. உயிர் வைத்துக்கொள்வதும் ஒன்றே, சாவதும் ஒன்றே" என்று தேவேந்த்ரன் சொன்னதும், ஸுரேந்த்ரன் கண்ணீரை உதறி விட்டுத் தன் மனதினுள்ளேயே ஹைமவதியைச் சபித்துக்கொண்டே அவ்விடத்தை விட்டகன்றான்.

பதினோராம் அத்தியாயம்

ஸூர்யமுகியின் கடிதம்

"உயிரினும் இனிய ஸ்ரீமதி கமலமணிக்கு அநேக ஆசீர்வாதம். உனக்குக் கடிதம் எழுதுவதென்றால் எனக்குக் கூச்சமாயிருக்கிறது. இப்போது நீ பெரியவளாகிவிட்டாய். ஒரு குடும்பத்திற்கு யஜமானி. என்றாலும், நான்மட்டும் உன்னை என் சகோதரியென்றே எண்ணிவருகிறேன். உன்னை நான் எடுத்து வளர்த்தேன். சிறு வயதில் என்னிடந்தான் நீ படிக்கக் கற்றுக்கொண்டாய். இப்போது உன்னுடைய படிந்த கையெழுத்தையும் படிப்பையும் பார்த்து நான் இந்த மாதிரி கிறுக்குவது எனக்கே வெட்கமாயிருக்கிறது. வெட்கப்படுவதால் என்ன பிரயோஜனம்? நான் சுகமாய் வாழ்ந்த நாளெல்லாம் போய்விட்டது. என்ன நேர்ந்தது என்று கேட்கிறாயா? இதை என்னவென்று சொல்லுவது?

"துக்கம் என் நெஞ்சை அடைக்கிறது. எழுதவும் வெட்கமாயிருக்கிறது. மனதிலுள்ள துக்கத்தை யாரிடமாவது வாய்விட்டுச் சொல்லாதுபோனால் ஹ்ருதயம் வெடிக்கிறது. என் கஷ்டத்தை யாரிடம் முறையிடுவேன்? நீ ஒருத்திதான் இருக்கிறாய். உன் அண்ணாவைப்பற்றி உன்னிடம் சொல்லாமல் வேறு யாரிடம் சொல்வது?

"சுடலையில் என்னுடைய சிதையை நானே மூட்டிக்கொண்டேன். குந்தநந்தினி எக்கேடுகெட்டால் என்ன: செத்துப்போனால்தான் என்ன! பகவான் எல்லோருக்கும் வழி காட்டுகிறாரே, இந்த அநாதைக்கு ஏன் ஒரு வழி செய்யவில்லை? என் குடிக்குக் கோடாலிக் காம்பான இவளை நான் ஏனோ அழைத்துக்கொண்டேன்?

காப்பக நூலகம்
211841
சென்னை-600 008

"இந்தச் சனியன் பிடித்தவள் பாலிகையாய் இருக்கும்போது தான் நீ பார்த்திருக்கிறாய். இப்போது அவளுக்கு வயது பதினெட்டாகிறது. அவளுடைய அழகோ சொல்லவேண்டியதில்லை. வர வர விருத்தியாகிக்கொண்டிருக்கிறது! பாழும் அந்த ரூபமே எனக்கு யமனாக வந்திருக்கிறது.

"உலகத்தில் என் புருஷன்தானே எனக்கு ஸர்வமும்? அவரைச் சுற்றித்தானே என் உடல், உயிர், உணர்ச்சி, யாவும் இருக்கின்றன? புருஷன்தானே தெய்வம்? அப்பேர்ப்பட்ட புருஷனுடைய மனதைக் குந்தம் அபஹரித்துக்கொண்டாளே! இந்த ஜன்மத்தில் நான் எதைக் கோரி நிற்கிறேன்—என் புருஷனின் அன்பை அல்லவா? அந்த அன்பை இந்தத் திருடி கவர்ந்துவிட்டாள். கமலமணி! உன் தமயனை நான் இகழ்ந்து கூறவில்லை. அவர் தர்மாத்மா. சத்ருவுக்குக் கூடக் கெடுதி நினைக்காத மஹாபுருஷர். அவர் தம் மனதைக் கட்டப் போராடுவதை நான் நித்யமுந்தான் கவனித்து வருகிறேன். குந்தம் இருக்கும் இடத்தை அவர் கண்ணால்கூடப் பார்ப்பதில்லை. ஏதாவது அவசியம் இருந்தால் அவள் பெயரை உச்சரிக்கிறார். ஏன், அவளிடம் சிற்சில சமயம் கடுமையாகவும் நடந்துகொள்கிறார். வீணாக அவர்மேல் அவதூறு ஏன் சுமத்தவேண்டும்?

"ஆனால் இந்தக் கிறுக்கலை எழுதி ஏன் அவதிப்படுகிறாய் என்று கேட்கிறாயா? புருஷர்களுக்கு இதன் மர்மம் புரியும்படி சொல்வது கஷ்டம். ஆனால் நீ ஒரு பெண் ஜன்மமாச்சே—இதை நீ புரிந்துகொண்டிருப்பாய். எல்லோரிடத்திலும் சகஜமாகப் பழகுவதுபோல் அவர் ஏன் குந்தநந்தினியிடம் மட்டும் இல்லை? இது உனக்குத் தெரியவில்லையா? குந்தநந்தினியின் ஞாபகம் வரும்போதெல்லாம் ஒன்று அவர் மனதை ஊடுருவிப் பாதிக்கிறது. அது புஷ்ப பாணந் தானே? ஆனால் அவள் விஷயத்தில் கடினமாயுமிருக்கிறார் அவர். இவை எல்லாம் உனக்கு அதிசயமாக இல்லையா? சில வேளைகளில் தன்பேரிலேயே கோபம் கொள்கிறார்—விசித்திரமான மனப்போக்கு! உள்ளும் புறமும் ஒக்க, அவர்பால் இதுவரை நான் என் தர்மத்தை வழுவாமல் நடத்திவருகிறேன். இத்தனை நாள் அவருடன் வாழ்ந்ததனால், பார்த்தபோதே அவருடைய மனதில் தோன்றுவதை ஊகிக்கும் சக்தி எனக்கு இருக்கிறது. நான் ஒரு த்ரோஹமும் செய்யவில்லையே? என்னிடம் ஏன் இதை மறைக்கிறார்? அடிக்கடி எங்கோ மனதைப் பறிகொடுத்தவராய் யாரையோ தேடுகிறார்? இதைப் பிறர் கண்டுகொண்டால் அவர் தம்மை உடனே சமாளித்துக் கொள்கிறார். ஆனால் அது எனக்குப் புரியவில்லையா? யாருடைய இன் குரலைக் கேட்க, அந்தப்புரத்திற்குச் சாப்பிடவரும்போது, காதை வைத்து ஊன்றிக் கவனிக்கிறார்?

அதுகூடவா எனக்குத் தெரியாது போய்விடும்? என்றும் மலர்ந்த முகமாய் இருந்த என் மணாளன் இப்போது ஏதோ வேறுபட்ட சிந்தையினராக மாறிவிட்டார்! நான் ஏதாவது சொன்னால் அவர் காதில் விழுவதில்லை—வேறு பதில் தருகிறார். நான் கோப மாய், 'ஐயோ! சீக்கிரம் எனக்குச் சாவு வராதா' என்று வேண்டு மென்றே சொல்லும்போது, "உம்" என்கிறார்! இப்படி ஏன் ஆகி விட்டார் உன் அண்ணா? வற்புறுத்திக் கேட்டால், "வழக்குத் தொல்லை" என்று மழுப்புகிறார். வழக்கு ஒன்றும் அவரைத் துன்புறுத்தவில்லை—இது எனக்கு நன்றாகத் தெரியும். இன் னொரு விஷயம். ஒருநாள் அந்தப்புரத்தில் பெரிய கிழவிகள் எல் லோரும் சேர்ந்துகொண்டு குந்தம் சின்ன வயதிலேயே அறுத்து விட்டதைப்பற்றித் துக்கித்துக்கொண்டிருந்தனர். உன்னுடைய ஸஹோதரரும் அங்கு இருந்தார்—நான் மறைவிலிருந்து பார்த் தேன். அவர் கண்களிலிருந்து நீர் பலபலவென்று பெருகிக் கொண்டிருந்தது. சட்டென்று அவர் துயரம் தாளாமல் அவ் விடத்தை விட்டுப் போய்விட்டார்.

"நான் புது வேலைக்காரி ஒருத்தியை அமர்த்திக்கொண்டிருக் கிறேன். அவள் பேர் குமுதம். பாபு அவளைக் கவனக்குறைவாகக் குந்தம் என்று கூப்பிட்டுவிடுகிறார். மனதில் எது முன்னால் பதிந்து இருக்கிறதோ அதைத்தானே நாக்கும் உளறிக்கொட்டி விடும்! நீயே சொல்! அவர் என்னைத் திரஸ்கரிக்கிறார் என்று சொல்வது மஹாபாவம்! யாதொரு இன்னலுக்கும் அவர் என்னை உட்படுத்தவில்லை. அதற்கு மாறாக முன்னைவிட என்னை மிகவும் பாராட்டிவருகிறார். இதன் காரணமும் தெரியும். அவர் நெஞ்சே அவரை அறுக்கிறதுபோலும். இதனால் என்னை அவர் தன் மனதிலிருந்து நழுவவிட்டார் என்று தெரிகிறதல்லவா? கமலமணி! ஆசை என்பது ஒன்று. ஆதரவு என்பது வேறு. இவைகளுக் குள்ள வித்யாசம் ஸத்ரீஜன்மங்களுக்குத்தான் தெரியும்!

"இன்னொரு சிரிப்பிற்கிடமான விஷயம். கல்கத்தாவில் யாரோ ஈச்வரசந்த்ர வித்தியா ஸாகரராமே! அவர் விதவா விவாஹத்தைப் பற்றிப் புஸ்தகம் எழுதியிருக்கிறாராம். அவர் மகா மேதாவியாய் இருந்தாலும் விதவையை மறுவிவாஹம் பண்ணிக் கொள்ளச் சொல்லுவது, நூறு சாஸ்திர ஸம்மதம் இருந்தாலும், சுத்த முட்டாள்தனம். இது நேர்மைக்கு விரோதமாக இல்லையா? இந்த விதவாவிவாஹத்தைப்பற்றிய தர்க்கவிதர்க்கமே வெளிமறை வில் குலபுரோஹிதர் பட்டாசார்ய மஹாசயருக்கும் யஜமானருக் கும் ஸதா நடக்கிறது. உங்கள் அண்ணா எந்தக் கக்ஷியென்று நீயே ஊகித்துக்கொள்ளலாம். ஏன்? ந்யாயரத்ன மஹாசயருக்கு வர

வரப் புத்தி உலுக்கைக் கொழுந்தாகிவிட்டது. யஜமானரோடு விதவாவிவாஹத்தின் பக்கமாகத் தாளம்போட்டு அவரிடமிருந்து பத்து ரூபாயைப் பாடசாலை புனருத்தாரணத்திற்காக அடித்துக் கொண்டு போய்விட்டார். அடுத்த நாள் ஸார்வபௌம டாகுர் இதைக் கண்டித்துப்பேசினர். எனக்குத் திருப்தி. கல்யாணம் ஆகப்போகிற அவருடைய புத்ரிக்கு ஐந்து ஸவரனில் வளையல் பண்ணிப் போடப்போகிறேன். இப்போது விவாதம் சற்று ஓய்ந்து இருக்கிறது.

"என்னுடைய மனோதுக்கங்களைப்பற்றி எழுதி உன்னைத் தொந்தரவு படுத்துகிறேனா? என்ன பண்ணுவது, கமலமணி? என் துயரை உன்னிடம் மொழியாது பின் வேறு யாரிடம் சொல் வேன்? என் கதை இதோடு முடியவில்லை. உன்னுடைய பதில் வரும் என்ற ஆசையால் நான் சற்றுப் பொறுத்து இருக்கிறேன். இவையெல்லாம் யாருக்காவது தெரியப்போகிறது. என்மேல் ஆணை. மாப்பிள்ளைக்கு இது எட்ட வேண்டாம்.

"நாங்கள் வாழும் இந்த அழகை நீ எப்போ வந்து பார்க்கப் போகிறாய்? நீ கட்டாயம் வா! உன்னை நேரில் கண்டால் என் துயரம் எவ்வளவோ ஆறிவிடும். குழந்தையைப்பற்றிய க்ஷேமத்தை அடிக்கடி எழுது.

இப்படிக்கு,
ஸூர்யமுகி.

"ஒன்று விட்டுவிட்டேன்: பாபத்தை என் வீட்டிலிருந்து எப்படியாவது தொலைத்துவிடவேண்டுமே. அதை எவ்விதமாகத் தொலைப்பது? அதுதான் கேள்வி. நீ அவளை வைத்துக்கொள் கிறாயா? உனக்குப் பயமாயிருக்கிறதா?"

மேல்கண்ட லிகிதத்திற்குக் கமலமணியின் ப்ரத்யுத்தரம்:

"உனக்குப பைத்தியம் பிடித்து விட்டதா என்ன, மன்னி? இத்தனை நாள் கழித்து உனக்கு ஏன் இப்படியெல்லாம் தோன்றிக் கணவன் பேரில் அவநம்பிக்கை விழவேண்டும்? உன் கணவன் அப் படி இருப்பான் என்று நினைக்காதே. உனக்கு அப்படி நம்பிக்கை ஏற்படாத பக்ஷத்தில் குளத்தில் விழுந்து மரிப்பதைவிட வேறு வழி யில்லை. கமலமணி உனக்குச் சொல்லித் தருகிறாள்—கயிற்றை எடுத்துக் கொள், கை கால்களைச் சேர்த்துக் கட்டிக்கொண்டு போ, குளத்தில் விழுந்து மடி. புருஷனிடம் நம்பிக்கை குறைந்து வாழ் வதைவிட இறப்பதே மேல், மன்னி!"

(தொடரும்)

காதலின் ஸ்வரூபம்

ஸ்ரீ ராம நரேஷ் த்ரிபாடீ

சந்திரதேவனுக்கு ஒரு சிறிய பெண் இருந்தாள். விளையாட்டுப் பார்ப்பதில் அவளுக்கு அளவற்ற பிரியம். சந்திரனருகில் உட்கார்ந்துகொண்டு அவன் செய்யும் வேடிக்கைகளை எல்லாம் கவனிப்பாள். சந்திரன் தன் கிரணங்களால் உலகத்தை அழகுபடுத்தும்பொழுது அவள் அந்த மிருதுவான கிரணங்கள் வழியாகப் பூமிக்கு வந்து அங்குள்ள அழகிய தோட்டங்களில் ஒளிந்துகொள்வாள். அங்கே தனிமையில் சந்தித்துச் சந்தோஷிக்கும் யுவதி, யுவர்களின் சம்பாஷணையைக் கேட்பாள். பக்கத்தில் கம்பீரமாகச்செல்லும் நதிக்கரைக்கு ஒரு சமயம் ஓடுவாள். அங்கே மெல்ல ஒலிக்கும் அலைகளில் தோணிகள் அழகாக மிதந்து ஆடிக்கொண்டிருக்கும். அவைகளில் இளந்தம்பதிகள் பேசும் காதல் பொருந்திய சம்பாஷணையைக்கேட்டுச் சந்தோஷிப்பாள். அவர்கள் அன்புடன் தழுவிக்கொள்ளும் சமயம் அவர்கள் ஹிருதயத்தில் எழும் படபடப்பைக் கேட்கப் பதறி ஓடுவாள். ஒரு சமயம் ஒரு வீட்டின் ஜன்னலின் வழியாக உள்ளே நுழைந்து, அங்கே மஞ்சத்தில் உறங்கிக் கொண்டு ஸ்வப்னத்தில் தன்காதலனைக் கண்டு புளகாங்கிதமடையும் ஒரு காரிகையின் கருங்கூந்தலில் ஒளிந்து கொள்வாள். காதலன் மெதுவாக, அடிமேல் அடிவைத்து, உள்ளே நுழைந்து, தூங்கும் யுவதியின் முகத்தை இமை கொட்டாமல் பார்ப்பான். அப்படி அவள் அழகை அவன் அள்ளிப்பருகும் சமயம் அவன் கண்களில் எழும் ஜோதியைக் கண்டு சந்திரகுமாரி மகிழ்வாள். பிறகு தன் மலர்போன்ற மெல்லிய கன்னங்களில் ஏதோ ஸ்பர்சமாவதை யுணர்ந்து, துள்ளியெழுந்து, அன்போடும் வெட்கத்தோடும் தலை குனிந்துகொள்ளும் காரிகையைக் கண்டு களிப்பாள். அப்பொழுது சந்திர கன்னிகை தன் மனத்துக்குள்ளேயே, 'அடாடா! இந்த உலகத்தில் எவ்வளவு சுகம் இருக்கிறது! காதல் உள்ளவிடத்தில் தானே பரிபூர்ணமான சுகம் இருக்கும். கரை காணாத சமுத்திரம்போல் காதலும் எல்லையற்றல்லவோ இருக்கிறது'

ஓர் ஹிந்திக்கதை. மொழிபெயர்த்தவர்: ஸ்ரீமான் பி. எம். கிருஷ்ணசாமி.

என்று நினைப்பாள். அச்சமயங்களில் அவளுக்குத் தன் வாழ்க்கையில் வெறுப்புத் தோன்றும்.

இப்படியே சிறிதுகாலம் சென்றது. ஒருநாள் அவள் எதையோ மனத்தில் ஆழ்ந்து சிந்தித்துக்கொண்டே சந்திரனிடம் சென்றாள். போகும்பொழுது "உண்மையான சுகமும் அழகும் காதலில்தான் இருக்கின்றன; காதல்தான் உலகத்தின் உயிர்;......பூலோகம்" என்று ஏதோ தனக்குள்ளேயே சொல்லிக்கொண்டிருந்தாள். சந்திரனை அணுகினதும் கொஞ்சலாக அவன் கழுத்தில் கைகளைப் போட்டுக் கொண்டு, "என்னைக் கொஞ்சகாலம் பூலோகத்துக்குப் போகவிடு, அப்பா" என்றாள்.

சந்திரதேவன் திடுக்கிட்டான்; "இந்த யோசனை உனக்கு ஏன் தோன்றிற்று, திடீரென்று" என்றான். அவள், "அப்பா, அன்பில் அபரிமிதமான சுகம் இருக்கின்றது; நான் பூலோகத்தில் போய் அந்தக் காதலின் அழகை அனுபவிக்க விரும்புகிறேன்" என்றாள்.

சந்திரதேவன் தலையையசைத்துக்கொண்டே, "ஓஹோ, எங்கேயோ தோட்டங்களிலும் தோணிகளிலும் விளையாடும் அந்த அனுபவமற்ற மனிதர்களின் பயித்தியக்காரப் பேச்சுக்களைக் கேட்ட தன் பலன இது? என் பிரகாசத்தினல் உன்மத்தமடைந்தல்லவா அவர்கள் அவ்விதம் உளறுகிறார்கள். அவர்கள் சொல்லும் வார்த்தைகளில் ரஸமே கிடையாதே. 'வாழ்க்கையின் புயலில் மனிதன் தன் மனோவிகாரங்களுடன் கூடவே—அதாவது தன் மனநோய்களையுங்கூடச் சுமந்துகொண்டு—அலைகிறான்' என்று புத்தர் ஒரு சமயம் சொல்லியிருப்பதை நினைத்துப்பார். நீ பூலோகத்திற்குப்போனல் உனக்குப் பகவான் புத்தரின் சொற்கள் முற்றிலும் உண்மையென்று புலப்படும்; அங்கே வீண் துக்கந்தான் வரும்" என்றான்.

சந்திரதேவன் சொன்ன வார்த்தைகள் அவள் காதில் விழவேயில்லை. அவள், "அப்பா, நேற்று நான் அங்கே ஒரு தோட்டத்தில் ஒரு கவிஞன் பாடிக்கொண்டிருந்ததைக் கேட்டேன். அவன் காதல் ஸ்வரூபத்தை எப்படியெல்லாம் வர்ணித்தான்! அந்தப் பாட்டைக் கேள், அப்பா" என்று பாட ஆரம்பித்துவிட்டாள்:

'அன்பில்லா வழ்க்கையதும் அருளில்லா ஆட்சிதானே.'

'மணமில்லாப் பூவைப் போலே
குணமில்லா மருந்தைப் போலே
ஒளியில்லா மதியைப் போலே

உயிரில்லா உடலைப்போலே
ஜயமில்லாச் சண்டை போலே
ஜகத்தினிலே யன்பில்லாமை.'

'அன்பினிலே சுவர்க்கமுண்டாம்
சுவர்க்கத்தையும் அன்பே ஆளும்
அன்பினிலே யழகுண்டாம்
அன்பினிலே யமைதிதோற்றும்
அன்பினாலே ஆட்சிகூடும்
அன்பதுவே கடவுள்காட்டும்.'

'அன்பில்லா வாழ்க்கையது அருளில்லா ஆட்சிதானே.'

"அன்பை எப்படிப்புகழுகிறான்! அந்த அன்பு—காதல்—எவ்வளவு மதுரமாயிருக்கிறது! காதலர்கள் நதிக்கரையிலும் உத்தியானத்திலும் எவ்வளவு ஆனந்தத்துடன் சந்திக்கின்றனர். அன்பே அவர்கள் வாழ்வு; காதலே அவர்கள் விழிப்பு; காதலிலேதான் அவர்களுக்கு ஓய்வு. காதலுக்காகவே அவர்கள் உயிர்வாழ்கின்றனர். காதலுக்காகத்தான் சரீரத்தையும் தியாகம் செய்யச் சித்தமாயிருக்கின்றனர். நானும் அந்தக் காதல் சுகத்தை அனுபவிக்க அனுமதிகொடு, அப்பா" என்று கெஞ்சினாள்.

ஆகாயத்தில் கணக்கற்ற நக்ஷத்திரங்கள் சந்திர கோளத்தைச் சுற்றிச் சுற்றி ஒளிர்ந்துகொண்டிருந்தன. எங்கும் சாந்தமயமாயிருந்தது. சந்திரதேவன் குமாரியை நோக்கி, "சரி, குழந்தாய், நீ பூலோகத்துக்குப்போய் மூன்று வருஷங்கள் இருந்துவிட்டு வா" என்று பிரியாவிடை கொடுத்தான்.

பெண்ணின் மனம் ஆனந்தத்தால் துள்ளியது. அவளும் குதித்துச் சிரித்துக்கொண்டு சந்திரதேவனின் கிரணங்களின்மேல் கால் வைத்துக் கீழே யிறங்கினாள். முதலில் ஒரு பனைமரத்தின் உச்சியில் வந்துசேர்ந்தாள். பிறகு ஒரு மாங்கொம்பின்மேல் வந்து கொஞ்சநேரம் இங்குமங்கும் பார்த்தாள். பிறகு அங்கிருந்து ஒரு முல்லைப்புஷ்பத்தின்மேல் ஜம்மென்று குதித்தாள். சுற்றிலும் நூற்றுக்கணக்கான புஷ்பங்கள் மலர்ந்திருந்தன. எல்லாம் சிரித்துக்கொண்டிருந்தன. ஒரு புஷ்பம் மாத்திரம் கொஞ்சம் வருத்தத்துடன்,

'பாவியந்த தோட்டக்காரன் பறித்திடுவான் நாளைதினம்
பூவாக மலருமுன்னம் பூமிதன்னில் வீழ்த்திடுவான்'

என்று முணுமுணுத்துக்கொண்டிருந்தது. சந்திரகன்னிகைக்கு இது பிடிக்கவில்லை. "இது ஏதோ துர்ப்பாக்கியமுள்ளது போலிருக்

கிறது'' என்று சொல்லிக்கொண்டே நகர்ந்தாள். இதற்குள் ஒரு வண்டு அங்குள்ள பூக்களைச் சுற்றிச் சுற்றிப் பாடிக்கொண்டே வந்தது. அது,

'கண்மணியே கதவைத்திற, காத்திருந்தேன் வெகுநேரம்
பெண்ணரசே பெறுவதற்குன் பெருங்காதல் புவியினிலே'

என்று பாடிக்கொண்டே ஒரு பூவைச் சுற்றிச்சுற்றி வந்தது. சந்திரகன்னிகையின் சித்தம் சஞ்சலமடைந்தது. மனத்தில் ஒரு புயல் எழும்பிற்று. 'நானும் என் காதலனை இதேபோல் தவிக்க வைப்பேன்' என்று சொல்லிக்கொண்டாள்.

அவள் யாராவது ஒரு மனிதனின் வரவை எதிர்பார்த்து ஒரு மல்லிகைப் புஷ்பத்தின் மேல் உட்கார்ந்துகொண்டாள். காலை வேளையில் ஓர் இடையன் அங்கே வந்தான். அவன் பூஜைக்காகப் புஷ்பங்கள் பறிக்கவந்தவன். சந்திரகன்னிகையிருந்த மல்லிகைப் பூவை அவன் பறித்துவிட்டான். மனுஷ்யனின் ஸ்பர்சம் ஏற்பட்டவுடன் சந்திரகன்னிகை ஒரு முத்துப்போல அவன் கையில் உருண்டுவிட்டாள். இடையன் பார்த்துக்கொண்டிருக்கும் பொழுதே அவள் ஒரு சிறு குழந்தையாய்விட்டாள். இடையன் ஆச்சரியத்துடன் அவளை மெதுவாகக் கீழே யிறக்கிவிட்டான். ஒரு க்ஷணநேரத்துக்குள்ளேயே அவள் 'ஜோதி நுதல், கருநெடுங் கண், துவரிதழ்வாய், தரளநகை'யும், யௌவனம் ததும்பும் சரீரமும், 'அன்ன நடையும், மின்னின் இடையும்', உள்ள ஒரு பதினாறு வயதுப்பெண் ஆகிவிட்டாள். அவளைப்பார்த்த உடனேயே இடையனுக்குப் பூஜை ஞாபகமே மறந்துவிட்டது. அவன் தன் ஆச்சரியத்தின் ஆவேசத்தில் அவளைக் கட்டி மார்புடன் அணைத்துக்கொண்டான். இடையனுடைய வஜ்ரம்போன்ற புஜங்களில் கட்டுண்டதும் சந்திரகன்னிகை மூச்சுத் திணறிவிட்டாள். அவன், "கண்ணே, உன்னைக்கண்டு நான் மதியிழந்துவிட்டேன். என்னுடன் வீட்டுக்குவா, நான் உன்னை என் வீட்டுக்கு லட்சுமியாக்கி வைத்துக் கொள்ளுகிறேன்'' என்றான்.

சந்திரபாலா அவன் சொன்ன சொற்களைக் கேட்டுப் பயந்துவிட்டாள். பூஞ்சோலைகளிலும் தோணிகளிலும் அவள் கண்ட காதல் கனிவு இந்த இடையனிடம் எப்படிக் கிடைக்கும்!

சூரியன் வெளிக்கிளம்பி விட்டான். நதியின் ஜலப்பரப்பில் தங்கத்தகடுகள் மிதக்கவிட்டதுபோல் கிளரொளி மின்னிற்று. இடையன் சந்திரபாலாவைக் கூட்டிக்கொண்டு வீடுவந்து சேர்ந்தான். வீடு மூங்கில்களினால் கட்டப்பட்ட ஒரு குடிசை. சுற்றிலும் மா, பலா, பூவரசு, புன்னை முதலிய சில விருக்ஷங்களும் சில

காய்ந்த புதர்களும் இருந்தன. சந்திரபாலா உதாசீன மடைந்து முகத்தைத் தொங்க விட்டுக்கொண்டு உள்ளே சென்ருள். இடையன் அவள் முகத்தைக் கவனித்தான்; ஆனுல் அவளைச் சமாதானப் படுத்தவுமில்லை; அன்பு ததும்பப் பேசவுமில்லை. அவனுக்கு அதெல்லாம் தெரியாது, பாவம்! இப்படியே சில நாட்கள் கழிந்தன. இடையன் சந்திரபாலாவின் அழகில் ஈடுபட்டானேயொழிய, தன் மனேபாவத்தை அவளிடம் வெளிப்படுத்த அவனுக்குத் தைர்யமில்லை. அவனுக்கு இந்த விஷயத்திலெல்லாம் அனுபவமில்லை, பாவம்!

இவ்விதமாக இரண்டு வருஷங்கள் கழிந்தன. சந்திரபாலா எந்தச் சுகத்தைத்தேடிப் பூலோகத்துக்கு வந்தாளோ, அது அவளுக்கு ஸ்வப்னத்தில்கூடக் கிடைக்கவில்லை. இடையன் வீட்டில் அவள் நாள் முழுவதும் உழைத்துவந்தாள். கஷ்டத்துடன் நாட்களைக் கழித்தாள். இரவில் சிலசமயம் அவள் சந்திர வெளிச்சத்தில் முல்லைக்கொடியருகே உட்கார்ந்து,

> 'மன்னன் இன்னும் வரக்காணேன் - மாலையிங்கு வாடுதடீ
> என்னதவம் செய்தால் நான் என்துரையை அடைவேனடீ'

என்று ஏதோ பாடிக்கொண்டிருப்பாள்.

அவள் அழகைக் கண்டு மற்றப் பெண்கள் பொருமை கொண்டனர்; அவர்களுடைய க்ரூரம் நிறைந்த வசைமொழிகள் அவள் மனத்தைப் புண்படுத்தின. அவளுக்குப் பூலோகத்தில் வெறுப்புத் தோன்ற ஆரம்பித்தது.

நாட்கள் ஓடின. மூன்று வருஷத்தில் மூன்று மாதங்களே பாக்கி. ஒருநாள் சாயங்காலம் அவள் ஒரு மரத்தின் கீழ் உட்கார்ந்திருந்தாள். சந்திரன் தன் கிரணங்களைப் பொழிந்துகொண்டிருந்தான். சிலர் அவனை வரவேற்றனர். சிலர் அவனை வெறுத்தனர். சிலருக்கு அவன் குளிர்ந்தவனுகத் தோன்றினுன்; சிலர் அவன் கிரணங்களின் வல்லமையினுல் வாடினர். சந்திரபாலாவும், 'இந்த ஸாரமற்ற பிரேமைக்காக என் மனத்தில் ஏன் மோகம் உண்டாயிற்று? பூலோகத்தில் சுகம் எது? எல்லாம் ஏமாற்றமாகத் தான் தென்படுகிறது' என்ருள்.

அச்சமயம் குதிரையின் மேல் ஆரோகணித்த ஓர் இளைஞன் அவ்விடம் வந்துசேர்ந்தான். அவன் அந்தப்பிரதேசத்து அரசன். நல்ல அழகு வாய்ந்தவன். போகும் போக்கில் அவன் சந்திர குமாரியைக் கண்டான். உடனே ஆச்சர்யத்தால் ஸ்தம்பித்து நின்றுவிட்டான். அவள் அழகு அவன் உள்ளத்தைக் கவர்ந்தது. அவள் கழுத்தில் குன்றிமணிமாலை, தலையில் பலரகபுஷ்பம்; இந்தச்

சாதாரண வேஷத்திலிருந்தும் அழகு பொங்கி வழிந்துகொண்டிருந்தது. மண்பானையில் வைத்ததனால் அமிர்தத்தின் குணம் குன்றிவிடுமா? அரசன் அங்கு வெகுநேரம் தங்கவில்லை. ஆனால் அவளைப்பற்றிய சமாசாரங்களையெல்லாம் விசாரித்துக்கொண்டு சென்றுவிட்டான்.

இரவில் மறுபடியும் அரசன் சந்திரபாலாவைத் தேடிக் கொண்டுவந்தான். சந்திரகிரணங்கள் இலைகளின் இடுக்குவழியாகப் பூங்கொடிகளின்மேல் விழுந்துகொண்டிருந்தன. இன்று சந்திரிகையின் வெளிச்சத்தில் ஏதோ விசேஷ சக்தி தென்பட்டது. எல்லோர் மனத்தையும் அது குழப்பிக்கொண்டிருந்தது. சந்திரபாலா ஜலக்கரையில் உட்கார்ந்து மனுஷ்யர்களின் ஸாரமற்ற ஜீவனத்தின் சமாசாரத்தைச் சந்திரனுக்கு அனுப்பிக்கொண்டிருந்தாள். திடீரென்று அரசன் அங்கே வந்துசேர்ந்தான். சந்திரனின் பிரகாசத்தில் சந்திரபாலாவைக் கண்டு அவன் மனத்தில் ஒரு புது அன்பு ததும்பிற்று. அவளருகில் உட்கார்ந்துகொண்டான். கொஞ்சநேரம் சந்திரபாலாவின் மனம் நடுங்கிற்று. இதற்குள் எங்கிருந்தோ ஒரு குயில் கூவிற்று. ஏகாந்தத்தில், நதிக்கரையில், பால் நிலவில், வஸந்தருதுவில், மாந்தோட்டத்தில், காதல் நிறைந்த மனம் பொருந்திய இருவர்களின் சங்கோசத்தை விலக்குவதற்குத்தான் குயில் கூவுகிறது. சந்திரபாலா அரசனின் தோள்களில் தன் தலையைச் சாய்த்துக்கொண்டாள். அவனும் அவளை அணைத்துக் கொண்டு அவள் அழகை இடைவிடாமல் அள்ளிப் பருகிக்கொண்டிருந்தான். இவ்வளவு நாள் இடையன்வீட்டில் இருந்த அவளுக்குக் காதலின் ரஹஸியங்கூட மறந்துபோனது போலிருந்தது. இப்பொழுது அரசன் அதை மறுபடியும் எழுப்பிவிட்டான்.

காலையில் அரசன் சந்திரபாலாவை அழைத்துக்கொண்டு அரண்மனைக்குச் சென்றான். இடையன் பயத்தால் எங்கேயோ ஓடிவிட்டான். சந்திரபாலா அரண்மனையில் உல்லாசமாக வசிக்கத் தொடங்கினாள். அரசனுடன் சிரித்துக் குதித்து விளையாடினாள். தன் புன்சிரிப்பால் அரண்மனை ஜனங்களை ஆட்டிவைத்தாள். மனிதர்களிடையும் சுகம் இருக்கிறது என்று எண்ணித் திருப்தியடைந்தாள். ஆனால் சுகத்தின் அனுபவம் அதிகரிக்க அதிகரிக்க, அவள் மனத்தில் ஒரு கவலையும் அதிகரித்துவந்தது. தன் பூலோக வாசம் சீக்கிரம் முடிவடையப்போவதை நினைத்து நினைத்து வருத்தப்படுவாள்.

சந்திரபாலாவுக்குப் புஷ்பத்தைக் கண்டால் வெகுப் பிரியம். ஒரு நாள் மல்லிகை மாலையணிந்து, வெள்ளை வஸ்திரம்உடுத்து,

அவள் அரசனுடன் தோணிவிளையாட்டுக்குச் சென்றாள். "இன்று என் சுகத்தைக் கண்டு சந்திரன் சந்தோஷமடைவான்" என்று அவள் எண்ணினாள். படகில் உட்கார்ந்துகொண்டு அவள் தன் பாதி திறந்த கண்களால் அரசனைப் பார்த்தாள். அவளுடைய கண்களில் ஆனந்தமும் துக்கமும் ஒருங்கே கலந்திருந்தன. அரசன் அவளைத் திருப்திசெய்ய எண்ணி, "சந்திரபாலா, நான் உன் தாஸனல்லவா, என் அரசு உன்னுடைய தல்லவா?" என்றான். இதைக்கேட்டு அவள் ஒரு பெருமூச்சுவிட்டாள். அவளுடைய கண்களில் கண்ணீர் ததும்பி முத்துப் போல் பிரகாசித்தது. அரசன் அவள் கைகளைத் தன் கைகளில் வைத்துக்கொண்டு, "கண்ணே, என்ன துக்கம்" என்றான். அவள் மறுபடியும், கொஞ்சநேரத்துக்கு, அன்றுதான் தன் பூலோக வாழ்வின் கடைசி நாள் என்பதை மறந்தாள்.

படகு மெதுவாக நதியின் நடுவில் ஒரு தீவை யடைந்தது. இருவரும் இறங்கினர். சந்திரபாலா அரசனிடம், "இன்று இரவு தான் நாம் கூடி ஆனந்தம் அனுபவிக்கக் கடைசி நாள். நீ என் கதையைப் பொய்யாகவே எண்ணி வந்தாய். இதில் எனக்குத் திருப்திதான். நான் ஆகாயத்தில் வசிப்பவள். பூமியில் காதல் மந்திரம் கற்கவந்தேன். காதலில் திருப்தியில்லை; ஓர் ஆகர்ஷணந் தான் இருக்கிறது. கரையில்லை, அலைதான் இருக்கிறது; சாந்தி கிடையாது, கவலை அதிகம். காதல் எல்லையைக் கடக்குமுன் வாழ்வே முடிந்து விடும்" என்றாள்.

அரசன் சிரித்துக்கொண்டே, "நாம் ஒருவரை யொருவர் விட்டுப் பிரியவா உண்டாக்கப்பட்டோம்" என்றான். சந்திரபாலா, "நான் சொல்லுவதை நீ நம்பமாட்டாய்; நாளைக்காலை நான் ஆகாய உலகத்திற்குச் சென்றுவிடுவேன். நம் அன்பிற்குத் தடை ஏற்படு மென்ற பயத்தால்தான் நான் இதுவரை அதைச் சொல்லவில்லை; நீ எனக்கு அன்பின் இயல்பைக் கற்பித்தாய்; அதன் மர்மத்தை அறிவித்தாய். ஆனால் நான் திருப்தியடைய முடியவில்லை. நான் நாளைக்காலை சென்றுவிடுவேன்" என்றாள்.

'நான் இவளிடம் செலுத்தும் அன்பு முழு அன்பில்லை என்று இவள் சந்தேகப்படுகிறாளோ' என்று அரசன் நினைத்தான். அவன் "சந்திரபாலா! நாம் இருவரும் கிழப்பருவம்வரை ஒன்றாகச் சேர்ந்தே இருப்போம். பிறகு நாம் பிரிந்தாலும், மறு ஜன்மத்திலும் நாம் சேர்ந்திருக்க அருளும்படி கடவுளைப் பிரார்த்திப்போம்" என்றான்.

அரசனும் சந்திரபாலாவும் தங்கள் மனத்திலுள்ள எண்ணங்களை வெளியிட்டுப் பேசிக்கொண்டு சென்றனர். சந்திரபாலாவுக்கு

இந்தச் சுகத்தின்முன் ஆகாய உலகத்தின் சுகம் கேவலமாகத் தோன்றிற்று. இரவு மெதுவாகக் கழிந்துகொண்டிருந்தது. குளிர்ந்த நறுமணம் வீசும் மந்தமாருதத்தில் இருவரும் கொஞ்சநேரம் தூங்கினர். திடீரென்று சந்திரபாலாவுக்கு ஒரு நடுக்கம் உண்டாயிற்று. அரைத்தூக்கத்திலேயே அரசனை ஒரு தரம் முத்தமிட்டுக்கொண்டாள். அரசன் ஒரு ஸ்வப்னம் கண்டுகொண்டிருந்தான். "அரசே! நான்போகிறேன்" என்றாள் சந்திரபாலா.

சந்திரனின் கிரணங்கள் சந்திரபாலாவை மேலே இழுக்க ஆரம்பித்தன. அவள் மேலே சென்றுகொண்டிருந்தாள். மேலே செல்லச் செல்ல அவள் கண்களிலிருந்து கண்ணீர் பெருகிற்று. அழுதுகொண்டே அவள் சந்திரனை அடைந்தாள். சந்திரதேவன், "பெண்ணே! புத்தன் சொன்னது சரிதானா? மனிதனின் வாழ்க்கையே ஒரு புயல்; அதில் அவன் மனநோய்கள் வேறு அவனைக் கஷ்டப்படுத்துகின்றன என்று அறிந்துகொண்டாயா?" என்றான்.

சந்திரபாலாவின் கண்ணீர் நிற்கவில்லை. அவளுடைய கண்ணீர்த்துளிகள் ஆகாயத்திலிருந்து பூமியில் விழவும், அவைகள் அழகிய பட்டுப்பூச்சிகளாக மாறின. வெகு காலத்துக்கு முன் அவைகள் கீழே வந்தன. அவைகள் இப்பொழுதும் ஒவ்வொரு இலையிலும் ஒவ்வொரு புஷ்பத்திலும் இள அரசனைத் தேடிக்கொண்டிருக்கின்றன. ஏமாற்றமடைந்த அரசனின் ஆத்மாவும் இப்படி எங்கு அலைகிறதோ! இந்தப்பாசத்தில் கட்டுண்ட ஜீவன்கள் இப்படி எத்தனை ஜன்மங்கள்வரை அலையவேண்டியிருக்குமோ!

திடீரென்று ஒரு குயில் கூவிற்று. கவிஞன் விழித்துக்கொண்டான். சந்திரகிரணம் ஒன்று, ஒரு முல்லைப் புஷ்பத்துக்கு அப்பொழுதுதான் இந்தக் கதையைச் சொல்லி முடித்தது.

ஸுதாமயீ—II

'கிருஷ்ணதாஸன்'

[கதாதர் கல்கத்தாவில் உபாய காலக்ஷேபம் நடத்தி வருபவர். அவர் மனைவி வஸுமதி. அவர்களுக்கு ஸுதாமயீ என்ற ஒரு சிறுமியும் மதுஸூதனன் என்ற ஓர் ஆண் குழந்தையும் உண்டு. ஒருநாள் ஸுதாமயீக்கு நேர்ந்த தன்பத்திலிருந்து அவள் நிரஞ்சன் என்னும் பெயருடைய ஒரு மாணவனால் காப்பாற்றப்பட்டாள். அதுமுதல் இரு குடும்பத்தாருக்கும் பழக்க மேற்பட்டது. நிரஞ்சன் தந்தை நிர்மலேந்து பாரம்பரைச் செல்வர். அவர் மனைவி உமாசசி தனக்குப் பெண் குழந்தை இல்லாத குறையை மறக்கவெண்ணி ஸுதாமயீக்குத் தினமும் பாட்டுக் கற்றுக்கொடுத்து அவளை அன்புடன் பாராட்டி வந்தாள். ஸுதா அவளை 'அத்தை' என்பாள். இந்நிலையில் சிறுமி ஸுதாவும் நிரஞ்சனும் ஒருவரை ஒருவர் சகோதர பாவத்தில் நேசித்து வரலாயினர். இது முன் தொடர்ச்சியாகும்.]

2

(355-ஆம் பக்கத் தொடர்ச்சி)

இப்பொழுது ஸுதாவுக்கு வயது பதினைந்து. யௌவனத்தின் அடையாளங்கள் அவள் உடலில் தோன்றலாயின. மங்கைப் பருவத்திற்குரிய நிறைவும், லாவண்யமும், முகத்தில் ஓர் அபூர்வ களையும் பார்த்தவர் கண்களைக் கவரும்படி இருந்தன. முதலில் ஸுதாவுக்கும் நிரஞ்சனுக்கும் ஸஹோதர பாவமே ஏற்பட்டிருந்தது. ஆனால் இப்பொழுது நிரஞ்சன் மனதில் ஒரு மாறுதல் உண்டாயிற்று. ஸுதாவின் அழகைத் தன் கண்ணால் பருகுவதில் ஒரு தனி ஆநந்தம் தோன்றிற்று. அவள் இனிய மொழிகளையும் பாட்டுக்களையும் கேட்பதில் ஒரு தனி அவா விளைந்தது. சிறிது நேரம் கூட அவளைக் காணமல் அவனால் இருக்கமுடியவில்லை. ஆனால் நேரில் கண்டால், முன்னைப்போல் பேச்சு அவ்வளவு தாராளமாய் வருவதில்லை. என்றும் அறியாத ஒரு கூச்சம் ஏற்பட்டது. அவள் முகத்தை இமை கொட்டாமல் பார்த்துக்கொண்டிருப்பான். ஆனால் யாராவது வந்து விட்டாலோ, அவளே அவனைத் திரும்பிப் பார்த்துவிட்டாலோ, தன் முகத்தைத் திருப்பிக் கொண்டு விடுவான்; அல்லது தலையைக் கீழே குனித்துக் கொள்வான். அவள் இல்லாத வேளைகளில் அவன் நினைவெல்லாம் அவளையே நாடிச் செல்லும். வாசிப்பதற்குப் புஸ்தகத்தை எடுத்துக் கொண்டால், ஒவ்வொரு பக்கத்திலும் அவள் முகமே தோன்

றும். எழுதுவதற்குப் பேனுவை எடுத்தால், தன்னை அறியாமலே அவள் முகத்தையே வரையப் பார்ப்பான். முன்போல பந்து விளையாடுவதில் அவனுக்கு ஆத்திரம் கிடையாது. குழந்தை முதல் அவன் சாப்பிடும்பொழுது சமையலைப்பற்றிக் குற்றம் குறை கூறுவது அவன் வழக்கம்; ஆனால் இப்பொழுது எதைப்போட்டாலும் பேசாமல் சாப்பிட்டுப்போய்விடுவான். சில ஸமயங்களில் பாதி சாப்பிடும் பொழுதே சாப்பாடு முடிந்துவிட்டதாக நினைத்துக்கொண்டு எழுந்து விடுவான், அல்லது கலத்தின்முன், சாப்பிடாமலே, எதையோ யோசித்துக்கொண்டிருப்பான். யாராவது கூப்பிட்டால், அவன் காதில் விழாது. திரும்பவும் கூப்பிட்டால், தூக்கத்திலிருந்து விழித்துக்கொண்டவன்போல, "யார்? என்ன?" என்று கேட்பான். தன் தாயாரிடமும் முன்னைப்போல் அவ்வளவு தாராளமாய்ப் பேசுவதில்லை. முன்னைப்போல் சுதாதர் வீட்டுக்கு அடிக்கடி போவதில்லை. பல நாட்களிலும் காலேஜிலிருந்து வந்ததும், சிற்றுண்டி ஏதாவது சாப்பிட்டுவிட்டுத் தனியே மைதானுக்குப்போய் இரவு பத்து மணிவரை பித்துப்பிடித்தவன்போல் படுத்துக்கிடப்பான். பிறகு, போலீஸார் வந்து அவனைத் தட்டி எழுப்பி அனுப்பி விடுவார்கள். இவ்வாறு அவன் நாட்கள் சென்றன.

ஸுதாவுக்கு, தன் மனநிலை அவ்வளவு தெளிவாகத் தெரியவில்லை. நிரஞ்சனைக் காண்பதில் அதிக ஸந்தோஷமும், அவனுடன் உறவாடுவதில் பரமதிருப்தியும், அவன் இல்லாத பொழுது அவனைக் காணவேண்டும் என்ற அவாவின் மிகுதியும் அவள் அறிவாள். ஆனால் இவையெல்லாம் கேவலம் ஸஹோதர பாவம் இல்லை என்பதை அவள் உணரவில்லை. ஆனாலும் பருவமங்கைக்குரிய நாணம் அவள் செய்கைகளில் காணப்பட்டது. என்றுமே அவள் பயந்தவள், வெட்கப்பட்டவள். இப்பொழுது அவள் பயமும் வெட்கமும் அதிகரித்தன. அவ்வளவுதான். மேலும் அவளுக்குத் தன் மனநிலையைப்பற்றிக் கவலைகொள்வதற்கு அதிக அவகாசம் கிடையாது. தன் தாயாருக்கு உதவுவதிலும், தன் தம்பியைப் பார்த்துக்கொள்வதிலும், அத்தையிடம் பாட்டுப்படிப்பதிலும் அவளுக்கு வேலை சரியாயிருந்தது. இருந்தாலும் தன்னை அறியாமலே பலதடவை நிரஞ்சன் முகம் அவள் மனக்கண்முன் நிற்கும். அவன் அன்புமொழிகள் அவள் காதில் தொனிக்கும். அவன் பெயர் யாராவது கூறக்கேட்டால் அவளுக்கு முன்னறியாத ஒரு நாணமும் பதட்டமும் ஏற்படும்.

சிலநாளாக நிரஞ்சன் நடவடிக்கைகளை உமா கவனித்து வந்தாள். ஆனால் அதன் காரணம் அவளுக்கு விளங்கவில்லை.

முதலில் அவனுக்கு உடம்பு சரியாய் இல்லை என்று நினைத்தாள். அந்த எண்ணத்தில், தனக்குத் தெரிந்த மருந்துகளும் பத்யங்களும் அவனுக்குக் கொடுத்துப் பார்த்தாள். அதில் ஒன்றும் குணம் காணவில்லை. பிறகு தனக்கு ஒரு நாள் தேக அஸௌக்யம் ஏற்பட்டபொழுது, அதைக் காரணமாய்க்கூறி, டாக்டரை வரவழைத்து, தன்னை அவர் பார்த்தபிறகு, நிரஞ்சனையும் அவரிடம் காட்டினுள். அவரும் பார்த்தார். உடம்பில் ஒன்றும் கோளாறு இருப்பதாகத் தோன்றவில்லை. இருந்தாலும் ஒரு டானிக்கின் பெயரை எழுதிக்கொடுத்து அதைச் சாப்பிடச்சொன்னுர். அதையும் நிரஞ்சன் சாப்பிட்டான். ஆனல் மனோவியாதிக்கு மருந்தேது? குணம் ஒன்றும் காணவில்லை. அவன் இந்த வருஷம் பி. ஏ. பரீக்ஷைக்குப் போகவேண்டும். ஒருவேளை அதற்காகக் கவலைப்படுகிருனே என்று நினைத்தாள். ஆனல் புஸ்தகங்கள் படிப்பதில் அவன் கவனம் செலுத்துவதாகவும் தெரியவில்லை. பிறகொருநாள், "அப்பா, உனக்கு என்ன செய்கிறது?" என்று அவனையே நேரில் கேட்டுப் பார்த்தாள். அவனுக்குத் தன் மனநிலைமை இன்னதென்று தெரிந்தால்தானே அவனல் இந்தக் கேள்விக்குப் பதில் கூறமுடியும்? "எனக்கு ஒன்றுமில்லை" மான்று சொல்லிவிட்டான். உமாவுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. தன் ஒரே மகன் உடம்பு நாளுக்கு நாள் காரணம்தெரியாமல் இளைத்து வருவதைக்காண அவள் மனம் பொறுக்கவில்லை.

ஒருநாள் இரவில், தன் கணவனுடன் அவள் தனியாய் இருக்கும்பொழுது, அவள் கவலை நிறைந்த முகத்தைக் கண்டு நிர்மலேந்து, "உமா, உன் மனதில் கவலை குடிகொண்டிருப்பதுபோல் தோன்றுகிறது. என்ன விசேஷம்"? என்று கேட்டான். அதற்கவள், "நிரஞ்சனை நீங்கள் கவனித்தீர்களா? அவன் நாளுக்குநாள் இளைத்து வருகிருன். காரணம் என்ன என்று தெரியவில்லை" என்ருள். அதற்குச் சிரித்துக்கொண்டே நிர்மலேந்து, "இதற்குத்தான நீ இவ்வளவு கவலைப்படுகிருய்? நானும் கவனிக்காமல் இல்லை. ஆனல் கவலைப்படுவதற்கொன்றுமில்லை" என்ருன். அதைக் கேட்டு உமா, "நமக்கு இவன் ஒரே பிள்ளை. அவன் உடம்பு இளைத்துக்கொண்டே இருந்தால் கவலைப்படாமல் என்னமாய் இருப்பது? அதன்காரணம் என்ன? பரிஹாரம் என்ன? சொல்லுங்கள்" என்ருள். நிர்மலேந்து உமாவின் முகத்தைச் சிறிதுநேரம் புன்சிரிப்புடன் பார்த்தபடியே இருந்தான். பிறகு அவளை அணைத்துக்கொண்டு. "உமா, நீ நித்யகல்யாணி; என்றும் குழந்தைப் பருவம் மாருதவள். கல்யாணத்துக்குமுன் இருந்த மாதிரியே இப்பொழுதும் இருக்கிருய்; ராக த்வேஷங்கள், பாப

புண்யங்கள் நிறைந்த உலகத்தை நீ அறியாய். உன் பரிசுத்த மான மனது எப்பொழுதும் அவைகளின் அலைகளால் மோதப் படவில்லை. அதனுல்தான் எந்தத் தாயாரும் எளிதில் உணரக் கூடிய விஷயம் உனக்குக் கவலைக்கிடமாய் விட்டது. உன் மகன் சிறுகுழந்தை என்றே நீ நினைக்கிறுய். அவன் மனமும் குணமும் மாறிவருவதை நீ அறியவில்லை. அவன் இப்பொழுது வாலிபப்பரு வம் அடைந்திருக்கிறுன். காதலென்னும் நதியில் இறங்கியிருக் கிறுன். ஆசாபங்கம் என்ற பாறையில் மோதப்படாமல், வேசியின் உறவென்ற முதலையின் வாய்ப்படாமல், அவன் க்ஷேமமாய்க் கரை ஏறவேண்டும். நானும் உன்னை மணக்குமுன் இதையெல்லாம் அநு பவித்திருக்கிறேன். ஆகையால் அவைகளின் அடையாளங்களை அறிவேன்" என்று கூறினுன்.

இதைக்கேட்டதும், உமாவின் கண்கள் திறக்கப்பட்டன. நிரஞ்சன் உடம்பைப் பற்றிய கவலை நீங்கிவிட்டது. ஆனுல் அவன் மனநிலையைப்பற்றிய கவலை புதிதாய்க் குடிகொண்டது. அவ னிடம் தனக்கிருக்கும் அளவிலாத அன்பு அவளைச் சும்மாயிருக்க விடவில்லை. அவன் அந்தரங்க எண்ணங்களை அறியவேண்டும், பேசத் தெரியாத குழந்தைப்பருவத்தில் அவன் அழுகையின் காரணத்தைத் தெரிந்துகொண்டதைப்போல இப்பொழுதும் அவன் ஏக்கத்தின் காரணத்தை உணர்ந்து தன்னுல் கூடியவரை உதவ வேண்டும் என்ற ஆத்திரம் மிகுந்தது.

இப்படியிருக்கும் நாட்களில் ஒருநாள், சரத்சந்திர சட்டர்ஜீ யின் "தேவதாஸ்" என்ற சிறப்புற்ற நாவலைப் பேசும் படமாக்கிக் கார்ன்வாலிஸ் தெருவில், சித்ரா கொட்டகையில், காட்டுகிறுர்கள் என்றும், அதைக்காணக் கூட்டம்கூட்டமாக ஊரெல்லாம் திரண்டு போகிறுர்கள் என்றும் கேட்டு, உமா தானும் எப்படியாவது சில நாழிகை தன் கவலையை மறந்திருக்கலாம் என்றுநினைத்துத் தன் கணவனிடம் அதைப் பார்க்கவேண்டும் என்று சொன்னுள். அதற் கிசைந்து நிர்மலேந்து, முன்னதாகவே ஒரு பாக்ஸை ஏற்பாடு செய்து, ஓரிரவு உமா, நிரஞ்சன், ஸுதா, மூவரையும் கூட்டிக் கொண்டு சென்றுன். சித்ராவில், அதுவும் "தேவதாஸ்" காட்டப் படும் பொழுது, கூட்டத்துக்குக் கேட்பானேன்? எள்ளு போட் டால் கீழே விழாது. சரியாக ஒன்பதரை மணிக்கு ஆரம்பித்து "தேவதாஸ்" பேசும்படம் காட்டப்பட்டது.

தால்ஸோநாபூரில் ஜமீன்தார் நாராயண் முகர்ஜியின் இளைய பிள்ளை தேவதாஸும், அடுத்தவீட்டு ஏழை நீலகண்டசக்ரவர்த்தி யின் ஒரேபெண் பார்வதியும் குழந்தைப் பருவமுதல் சேர்ந்தே

படித்தும், விளையாடியும், சண்டைபோட்டும், நேசமாகியும் வளர்ந்து வந்தார்கள். காலக்கிரமத்தில் அவர்கள் அன்பு காதலாய் மாறிவிட்டது. இதை அறிந்து பார்வதியின் பாட்டி, தேவதாஸின் தாயார் ஹரிமதீ தேவியிடம், பார்வதியைத் தேவதாஸுக்குக் கல்யாணம் செய்து கொள்வதைப் பற்றிப் பிரஸ்தாபித்தாள். ஆனால் அதற்குத் தேவதாஸின் தாய்தந்தையர் இருவரும் இசையவில்லை. பிறகு, நடு இரவில் தனியாகப் பார்வதியே தேவதாஸிடம் சென்று தன் விருப்பத்தைத் தெரிவிக்கிறாள். ஆனால் (தேவதாஸே வேண்டிக்கொண்டும்) அவன் தந்தை இணங்கவில்லை. பிறகு பார்வதியை ஹாதிபோதா கிராமத்து ஜமீன்தார் புவன் சௌதுரீக்கு இளையாளாகக் கல்யாணம் செய்து கொடுத்தார்கள். தன் தலையெழுத்து இவ்வளவுதான் என்று நினைத்து, அவள் தன் புக்ககத்தில் தன் அன்பாலும், பொறுமையாலும், தானதர்மத்தாலும், தன் கணவன், மூத்தாளின் பெண், பிள்ளை, நாட்டுப்பெண், தாஸதாஸிகள், குடிகள், எல்லார் மனதையும் கவர்ந்து விட்டாள்.

ஆனால் தேவதாஸின் வாழ்வு பாழடைந்து விடுகிறது. பார்வதியை இழந்த வருத்தத்தை மறப்பதற்காகக் குடிக்கப் பழகிவிடுகிறான். கல்கத்தாவில் அவன் நண்பன் சுநிலால் அவனை ஒருநாள் சந்திரமுகி என்ற வேசையின் வீட்டுக்கு அழைத்துப்போய், அவர்களைத் தனியே விட்டுவிடுகிறான். ஆனால் சந்திரமுகியிடம் தேவதாஸுக்கு வெறுப்பே தோன்றுகிறது. "பணத்துக்காகத்தானே நீ என் உறவை நாடுகிறாய்?" என்று சொல்லி, தன் பணப்பையை அவள் மடியில் எறிந்துவிட்டுப் போய்விடுகிறான். எல்லாரும் தன் அழகில் மயங்கி அன்பு பாராட்ட, இவன் மாத்திரம் தன்னை வெறுப்பதைக் கண்டு, அவளுக்கு அவனிடம் மதிப்பும் பிரேமையும் ஏற்பட்டுவிடுகின்றது. அவனைத்திரும்ப ஒரு தடவை தன்னிடம் கூட்டிவரும்படி சுநிலாலை வேண்டிக்கொள்கிறாள். அவன் அதற்கிசைந்து தேவதாஸிடம் சொல்ல, தேவதாஸும் தனக்குச் சந்திரமுகியைச் சிறிதும் பிடிக்காவிட்டாலும், அவள் வீட்டில் குடிப்பதற்கு வசதியிருக்குமென்று நினைத்து அடிக்கடி போய்வருகிறான். இந்த விஷயங்களை அவள் குடும்பச்சேவகன் தர்மதாஸ் சொல்லக் கேட்டு, பார்வதிக்கு நிரம்பவருத்தம் ஏற்படுகிறது. சிலநாளைக்கெல்லாம் நாராயண் முகர்ஜி இறந்துவிடுகிறான். அதற்கு இருவரும் வந்திருந்தபொழுது, தேவதாஸிடம் குடிக்கக்கூடாதென்று பார்வதி மிகவும் மன்றாடுகிறாள். அதற்கவன், "உன்னை மறப்பதற்காகவே நான் குடித்துவருகிறேன். ஆகையால் உயிர் இருக்கும்வரை எனக்கு வேறு வழியில்லை" என்று கூற, அவள் தன்னால் தேவதாஸுக்கு ஒரு விதத்திலும் உதவமுடியவில்லை.

என்று வருத்தப்படுகிறாள். அதைக்கண்டு தேவதாஸ், "நான் நெடுநாள் வாழ்ந்திருக்க மாட்டேன். இறக்குமுன் உன்னிடம் கட்டாயம் வருவேன். அப்பொழுது நீ எனக்குக் கடைசி வேளை யில் உதவலாம்" என்று சொல்லிவிட்டுப் போய்விடுகிறான். பிற கொருநாள், குடிவெறியில் தான் சந்திரமுகியை வெறுப்பதற்கு அவள் வேசையாய் இருப்பதே காரணம் என்று அவன் கூறக் கேட்டு, சந்திரமுகி தன் வேசைத் தொழிலை விட்டுவிட்டு அவன் உதவியால் ஒரு சிறு கிராமத்தில் தனியாய் இருந்து ஏழைகளுக் காகப் பாடுபட்டு வருகிறாள். பிறகொருநாள் தேவதாஸ் மறுபடியும் அளவுமீறிக் குடிக்கிறான் என்றும், அவனைக் கவனிக்க ஒருவரும் இல்லை என்றும் கேள்விப்பட்டு, சந்திரமுகி திரும்ப கல்கத்தாவுக் குச்சென்று, வாடகைக்கு ஒரு வீட்டை அமர்த்தி, தேவதாஸைத் தேடாத இடமெல்லாம் தேடிக் கண்டுபிடித்து, கொடும் பிணி வாய்ப்பட்ட அவனை இரவும் பகலும் தூக்கம் விழித்துக் காத்து, வேளையில் மருந்து ஆஹாரம் முதலானவை கொடுத்துக் காப்பாற்று கிறாள். அவள் அளவிலாத அன்பையும், அலுப்பில்லாத ஸேவை யையும் கண்டு தேவதாஸுக்கு மனம் இளகி அவளிடம் பிரேமை ஏற்பட்டுவிடுகிறது. ஆனாலும், அவனால் பார்வதியை ஒருநாளும் மறக்கமுடியவில்லை. ஆகையால், "இந்த வாழ்வில் நாம் இருவரும் சேர்ந்திருக்கமுடியாது. ஆனால், இறந்தபிறகு பிரிந்தவர் கூடுவது வாஸ்தவமானால், அப்பொழுது நான் உன்னை ஒரு நிமிஷமும் பிரிய மாட்டேன்" என்று சந்திரமுகியிடம் சொல்லிவிட்டு, தேவதாஸ் தர்மதாஸுடன் ஊரூராய்த் திரிகிறான். பிறகு தன் முடிவுகாலம் வந்து விட்டதை அறிந்து, மிகவும் சிரமப்பட்டு ஹாதிபோத கிராமத்துக்கு நடு இரவில் வந்து சேர்கிறான். ஆனால் விடியுமுன், அவன், கவனிப்பார் ஒருவரும் இல்லாமல், அநாதையாய், இறந்து விடுகிறான். அவன் இறந்தபிறகுதான் அவன் தன்னை நாடிவந்த தையும், தன்னால் அவனுக்கு ஒருவித உதவியும் செய்யமுடியாமல் போனதையும் பார்வதி அறிந்து ஆறாத்துயரம் அடைகிறாள். இத்துடன் கதை முடிகிறது.

இந்தக் கதையை வங்கபாஷையில் பேசும்படமாக்கினதும், தேவதாஸாக நடித்ததும், குமார் பிரமதேச் படுயா. பார்வதியாக வும், சந்திரமுகியாகவும் நடித்தவர்கள், முறையே, யமுனா, சந்திரா வதி ஸாஹு என்ற சிறந்த நடிகர்கள். இவர்களும், இன்னும் மற்ற நடிகர்களும் தங்கள் நடிப்புத் திறமையால் பார்ப்பவர் மனதில் இது பேசும்படந் தானோ அல்லது கண்முன் நடக்கும் உண்மையான நிகழ்ச்சிகளோ என்ற பிரமையை உண்டாக்கிவிட் டார்கள். உமா இந்தப் பேசும்படத்தைக் கண் கொட்டாமல்

பார்த்துவந்தாள். தேவதாஸ், பார்வதி, இருவர் பால்யவிளையாட்டைப் பார்த்தபொழுது, அவளுக்கு நிரஞ்சன், ஸுதா தானே இவர்கள் என்று தோன்றிற்று. பிறகு அவர்கள் அன்பு அழிவறியாக் காதலாக மாறினதைக் கண்டதும், தன்னை அறியாமலே நிரஞ்சன், ஸுதா இருவரையும் திரும்பிப் பார்த்தாள். அப்பொழுது அவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்த பார்வையைக் கண்டாள். தன் மகனுடைய மனோவியாதியின் காரணத்தை அறிந்தாள். இவ்வளவு நாளாய் இதைத் தான் உணர்ந்துகொள்ள வில்லையே என்று வருந்தினாள். பிறகு பார்வதியின் தீராத்துயரத்தையும், தேவதாஸின் பாழடைந்த வாழ்வையும் கண்டு தன் அருமைக் குழந்தைகளுக்கும் இவ்வாறு நேர்ந்துவிடுமோ என்று பயந்தாள். தேவதாஸ் சந்திரமுகியிடம் காட்டிய கருணையும், சந்திரமுகியின் சாந்தமும், பொறுமையும், துன்பவாழ்வும், தன்னை நல்வழி எய்தும்படி திருத்திக்கொண்டு தேவதாஸையும் திருத்தமுயன்றதில் விளங்கிய அவள் மனோபலமும், உமாவின் மனதை முற்றும் கவர்ந்து விட்டன. தன்னால் முடிந்தவரை இந்தத் துன்பங்கள் ஒன்றும் தன் குழந்தைகளுக்கு ஏற்படக்கூடாது என்று தனக்குள் தீர்மானித்துக் கொண்டாள். தன் எண்ணத்தை நிறைவேற்றி வைக்கும்படி ஜகன்மாதாவான பரதேவதையை மநப்பூர்வமாய் வேண்டிக்கொண்டாள்.

மறுநாள் தனிமையில் நிரஞ்சனை நோக்கி உமா, “அப்பா! உன்னிடம் எனக்கு ஒரு வார்த்தை கேட்க வேண்டியிருக்கிறது. நான் உன்னிடம் வைத்திருக்கும் அன்பை நினைத்து, நீ உன் மனதில் உள்ளதை வெளிவிட்டுச் சொல்வாயா?” என்று கேட்டாள். அதற்கவன், “என் மனதில் உள்ளதை உன்னிடம் சொல்லாமல் நான் வேறு யாரிடம் சொல்வேன், அம்மா? குழந்தைப் பருவமுதல் நீ எனக்கு ஏதாவது இல்லையென்று சொன்னதுண்டா?” என்றான். அதன்மேல் உமா, “சில நாளாய் நான் உன்னைக் கவனித்துவருகிறேன். நீ நாளுக்குநாள் இளைத்துப் போகிறாய். என்னால் ஆனதெல்லாம் செய்துபார்த்தேன். குணப்படவில்லை. ஆகையால் இது உடல் வியாதி இல்லை, மனோவியாதியே என்று எனக்குத் தோன்றுகிறது. நீ எனக்கு ஒரே பிள்ளை. இவ்வாறு நீ மனம் நொந்து இருப்பதைப்பார்க்க என் பெற்ற வயிற்றை என்னவோ செய்கிறது. உன் மனக்கவலையை என்னிடம் சொல்லமாட்டாயா? என்னால் முடியுமானால் அதை இப்பொழுதே நீக்குவேன்” என்றாள். நிரஞ்சன், “அம்மா, நேற்றுவரை எனக்கே என் மனம் வேண்டுவது என்னவென்று தெரியாமல் இருந்தது. நேற்றுத்தான் தெரிந்தது. ஆனால் அதை வெளிவிட்டுச்சொல்ல வெட்கமாய்

இருக்கிறது. அப்பாவும் நீயும் என்ன நினைப்பீர்களோ என்று பயமாகவும் இருக்கிறது" என்றான். அதைக் கேட்டுச் சிரித்துக் கொண்டே உமா, "என்னிடம் சொல்ல வெட்க மென்ன? இருந்தாலும் நீயாகச் சொல்லவேண்டாம். நான் நினைத்திருப்பது சரி தானா என்று சொன்னால் போதும். பயப்படாதே. நான் ஒரு நாளும் உன் விருப்பத்துக்கு இடையூறு செய்யமாட்டேன்" என்று சொன்னாள். அதைக் கேட்டு நிரஞ்சன், "ஆகட்டும், அம்மா, நீ நினைத்திருப்பதைச் சொல். அது சரிதானா என்று சொல்கிறேன்" என்றான். பிறகு உமா தன் மகனைக் கிட்டே இழுத்து, அவன் முகத்தைச் சிறிது நேரம் உற்று நோக்கித் தணிந்த குரலில், "உனக்கு வயது இருபது ஆகிறது. கல்யாணம் செய்யவேண்டிய பிராயம் வந்துவிட்டது. நீ யாரைக் கல்யாணம் செய்துகொள்ள விரும்புகிறாய்? குழந்தை ஸுதாவைத்தானே?" என்றாள். அவனும், தலைகுனிந்தவாறே, தணிந்த குரலிலேயே, தன் நெஞ்சு பட படவென்று அடித்துக்கொள்ள, "ஆமாம், அம்மா, அவள் எனக்குக் கிடைக்காவிட்டால், என் வாழ்வே சூந்யமாய்விடும் போலிருக்கிறது" என்றான். அதைக் கேட்டு உமா ஸந்தோஷம் அடைந்து, அவனை அணைத்து முத்தமிட்டுக்கொண்டு, "கவலைப் படாதே, அப்பா. ஸுதாவை விட நல்ல பெண் கிடையாது. உன்னிடம் அவள் வைத்திருக்கும் பிரேமைக்கு அளவில்லை. இதுவரை அவளை நான் பெற்ற பெண்ணாகவே கருதிவந்தேன். அவள் எனக்கு நாட்டுப்பெண் ஆகவும் ஆய்விட்டால், என்னைவிடப் பாக்ய சாலி கிடையாது. நீங்கள் இருவரும் அந்யோந்யமாய் வாழ்வதை என் கண்ணால் பார்க்கவேண்டும்" என்றாள்.

அன்று பிற்பகலில் வழக்கம் போல் ஸுதா பாட்டுப்படிக்க வந்தாள். ஆனால் உமாவின் மனம் பாட்டுச் சொல்லிக்கொடுப்பதில் செல்லவில்லை. சிறிதுநேரம் மௌனமாய் இருந்தாள். அதைக்கண்டு ஸுதா, "என்ன, அத்தை, உங்களுக்கு உடம்பு சரியாய் இல்லையா? இன்று பேசாமல் இருக்கிறீர்களே!" என்றாள். அதற்கு உமா புன்சிரிப்புடன், "எனக்கு உடம்பு ஒன்றுமில்லை. உன்னைப் பற்றித்தான் நினைத்துக்கொண்டிருந்தேன். உனக்குக் கல்யாணத் துக்கு வயஸாய்விட்டது. ஆனால், உன் தாய்தந்தையர் அதைப் பற்றிக் கவலைப்படுவதாய்த் தெரியவில்லை" என்றாள். அதைக் கேட்டு ஸுதா, "அப்பா எப்பொழுதும் கவலைப்பட்டுக்கொண்டு தான் இருக்கிறார். ஆனால், கவலைப்பட்டுப் பயனென்ன? நாங்கள் ஏழை. அப்பாவுக்கு வரதக்ஷிணை கொடுக்கச் சக்தியில்லை. இந்த நாளில் படித்தபிள்ளைகள் ஒருவரும் வரதக்ஷிணை இல்லாமல் கல்யாணம் செய்துகொள்ள இசைவதில்லை, அவர்கள் படிப்பதே

கல்யாணச் சந்தையில் தங்கள் விலை மதிப்பை அதிகப்படுத்தத் தான் என்று தோன்றுகிறது. படிப்பினால் ஏற்படவேண்டிய நல்ல குணங்கள் ஒன்றும் அவர்களிடம் காணப்படுகிறதில்லை. அம்மாவுக்குப் படித்த பிள்ளைகளிடம் மதிப்பில்லை. 'அவர்கள் படித்து என்ன கண்டு விட்டார்கள்? படிக்கவைத்த செலவுக்குக் கூட அவர்களுக்கு வரும்படி வருவதில்லை. வேலையில்லாத் திண்டாட்டந்தான் அதிகம் ஆகிறது' என்கிறாள். ஆனால் அப்பாவுக்குப் படிப்பில் அதிக மோஹம்; 'என்றைக்காவது ஒருநாள் படித்தவர்கள் திருந்த வழியுண்டு; படிப்பில்லாவிட்டால் விமோசநமே கிடையாது' என்கிறார். ஆகையால் ஏதாவது அதிகம் வயதாகாத, படித்த, பிள்ளைக்கு இளையாளாகக் கொடுத்தால், வரதக்ஷிணை அதிகம் கொடுக்கவேண்டாம் என்று நினைக்கிறார்" என்றாள். அதற்கு உமா சிரித்துக்கொண்டே, "உன் அபிப்ராயம் என்ன?" என்றாள். அதற்கு ஸுதா, "எனக்கு இளையாளாக வாழ்க்கைப்பட இஷ்டமில்லை. அதைவிட, கல்யாணமே செய்துகொள்ளாமல், என்றைக்கும் அப்பா அம்மாவுடன், அவர்களுக்கு உதவியாய் இருப்பதே நல்லது என்று தோன்றுகிறது" என்று சிறிதும் தயங்காமல் சொன்னாள். அதைக்கேட்டு ஸுதாவை உமா கிட்டே இழுத்து மடியில் உட்காரவைத்துக்கொண்டு, "அதிருக்கட்டும், அம்மா, உனக்கு அத்தானைக் கல்யாணம் செய்துகொள்ள இஷ்டந் தானா?" என்றாள்.

இதைக் கேட்டதும், ஸுதாவின் நெஞ்சம் தாங்கமுடியாத துயரத்துடன் துடித்தது. "தேவதாஸ்" படத்தைக் கண்டது முதல், தன் மனம் நிரஞ்சனிடம் ஈடுபட்டிருக்கிறதென்று உணர்ந்தாள். ஆனால் தான் ஏழை. பார்வதியின் கதிதான் தனக்கும். இந்த ஜன்மத்தில் நிரஞ்சனைக் கணவனாக அடைய முடியாது. ஆகையால், அவனை முன்போலத் தன் தமையனாகவே கருதவேண்டும் என்று தீர்மானித்திருந்தாள். ஆனால், அத்தையின் கடைசி வார்த்தையைக் கேட்டதும் அந்தத் தீர்மானம் எல்லாம் காற்றாய்ப் பறந்து விட்டது. பார்வதியைப் போல் தானும் கஷ்டப்பட்டுத்தான் தீர வேண்டும் என்றும், நிரஞ்சனிடம் தனக்கு விளைந்த காதலை ஒரு நாளும் மறக்கமுடியாதென்றும் அறிந்தாள். அந்த எண்ணத்தால் ஏற்பட்ட வருத்தத்தை அவளால் அடக்கமுடியவில்லை. அவள் கண்களில் நீர் பெருகிவிட்டது. அத்தை மடியில் தன் தலையை வைத்துக்கொண்டு, விம்மிவிம்மி அழுதாள். உமாவுக்கு அதன் காரணம் விளங்கவில்லை. தன் கல்யாணத்தைப்பற்றி இதுவரை சிறிதும் பயமோ ஸங்கோசமோ இல்லாமல் பேசிவந்த ஸுதா திடீரென இப்பொழுது அழுவானேன்? அப்படி ஒன்றும் அவள் வருத்தப்

படும்படியாகத் தான் சொல்லிவிடவில்லையே! அதனால் அவளுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. ஸுதாவின் கண்ணைத் துடைத்துத் தன் மாரோடு சார்த்திக்கொண்டு, "அம்மா, அழாதே, நீ அழுவதைப் பார்க்க எனக்குப் பொறுக்கவில்லை. குற்றமாக எதாவது சொல்லிவிட்டேனா? அப்படிச் சொல்லியிருந்தால், நீ அதை மறந்துவிடு; நான் உன் அத்தை இல்லையா?" என்றெல்லாம் சொல்லித் தேற்றிப் பார்த்தாள். ஆனால் ஸுதாவின் விசிப்பு அடங்கவில்லை. அதைக்கண்டு உமாவுக்கும் அழுகை வந்துவிட்டது. அவளது சூடான கண்ணீர் தன் முகத்தில் விழுந்ததும், ஸுதா திடுக்கிட்டுத் தலையைத்தூக்கிப் பார்த்தாள். உமா அழுவதைக் கண்டு, "அத்தை, அழாதேயுங்கள். நான் அழுததற்கு நீங்கள் ஒன்றும் காரணமில்லை. அத்தானைக் கல்யாணம் செய்து கொள்ள எனக்கு இஷ்டமா என்று கேட்டீர்கள். அவ்வளவு பாக்யம் எனக்கேது? தங்கள் பிள்ளைக்கு ஆயிரம்பேர் அழகிலும், குணத்திலும், படிப்பிலும், பணத்திலும் சிறந்த பெண்களை வைத்துக் கொண்டு காத்திருப்பார்கள். நாங்கள் ஏழை. அவர்களுடன் எங்களால் போட்டி போட முடியுமா? நீங்கள் என்னை விளையாட்டாகத்தான் கேட்டிருப்பீர்கள். அதனால் என்னை அறியாமலே எனக்கு அழுகை வந்துவிட்டது" என்று ஸுதா சாந்தமாகவும், விநயமாகவும் சொன்னாள். அதைக் கேட்டு உமா, "ஸுதா, கேள். நான் விளையாட்டாகச் சொல்லவில்லை. நிரஞ்சன் உன்னையே நினைத்துக்கொண்டு ஏங்குகிறான். அவன் எனக்கு ஒரேபிள்ளை. அவன் வருத்தப்படுவதைக் காண என் மனம் ஸஹிக்காது. அவன் ஸுகமாய் வாழவேண்டும் என்பதுதான் என் அந்தரங்க ஆசை. எனக்கும் உன்னைவிட நல்லபெண் கிடைக்காது. எனக்குப் பணமும் பவிஷும் வேண்டாம்; குணமும் வணக்கமுந்தான் வேண்டும். என் ஒரேபிள்ளையின் ஸுகவாழ்வு உன் கையில்தான் இருக்கிறது. சொல்லு, நீ அவனைக் கல்யாணம் செய்துகொள்வாயா?" என்றாள். ஸுதா, தலைகுனிந்து, தணிந்த குரலில், "நான் உங்கள் குழந்தை. எனக்கு இவ்வளவு பாக்யம் ஏற்படும் என்று நான் நினைக்கவில்லை. பெண் ஜன்மம், கஷ்டப்படவேண்டிய ஜன்மந் தான் என்று நினைத்திருந்தேன். அப்பா, அம்மாவிடம் கலந்துகொண்டு நீங்கள் எப்படித் தீர்மானிக்கிறீர்களோ, அப்படியே செய்யுங்கள்" என்று சொல்லிவிட்டு உமாவின் காலில் விழுந்து அவள் பாதங்களைத் தன் கண்ணீரால் நனைத்தாள். உமா அவளைத் தூக்கி வாரியெடுத்து முத்தமிட்டுக்கொண்டு, "அம்மா, என்றைக்கும் என்னை உன் அத்தையாகவே நினைத்துக்கொள். மாமியார் என்று பயப்படாதே. எனக்கு நீ பெற்ற பெண்ணைவிட அதிகம்" என்றாள்.

அன்றிரவு உமா தன் கணவனிடம் நடந்தவற்றை எல்லாம் சொன்னாள். அவன் என்ன சொல்வானோ என்று பயந்து அவன் பதிலை எதிர்பார்த்திருந்தாள். சிறிதுநேரம் அவன் ஒன்றும் பேச வில்லை. பிறகு, "நான் நிரஞ்சனுக்கு வேறு ஏற்பாடு செய்யலாம் என்றிருந்தேன்; நல்ல இடத்தில் பார்த்து அவனுக்குக் கல்யாணம் செய்துவைத்தால், நாம் பிற்காலம் அவனைப்பற்றிக் கவலைப்பட வேண்டாம் என்றிருந்தேன். ஆனால் பிள்ளையும், பெண்ணும், தாயாருமாய்ச் சேர்ந்து உங்களுக்குள்ளேயே ஏற்பாடு செய்து கொண்டுவிட்டீர்கள். இனிமேல், நான் ஏதாவது சொன்னால், அனர்த்தந்தான் விளையும். என்னைக் கேட்பானேன்?" என்றான். அதைக்கேட்டு உமா வருத்தத்துடன், "நீங்கள் அப்படிச் சொல் லக்கூடாது. முழுமனதுடன் சம்மதிக்கவேண்டும். நானும் ஏழைப்பெண்ணாகத்தானே இருந்தேன். உங்கள் தகப்பனாரும் நீங்கள் இப்பொழுது நினைப்பதுபோல்தானே நினைத்திருந்தார். நீங்கள் அவர் வார்த்தையைக் கேட்டீர்களா? என்னைக் கல்யாணம் செய்துகொண்டீர்கள். அதனால் உங்களுக்கு என்ன குறைவு வந்து விட்டது? நமக்குப் பிற்காலம் நிரஞ்சன் வாழ்வைப்பற்றி நினைத்தீர்கள். அவன் தற்கால வாழ்வை நினைத்தீர்களா? நீங்க ளுந்தான் தேவதாஸ் படத்தைப் பார்த்தீர்கள். தேவதாஸின் தாய்தந்தையர்களுக்கு அவனிடம் பிரியம் இல்லாமலா பார்வதியை அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை? ஆனால் அவர்கள் நினைத்த தென்ன? அவர்கள் பிடிவாதத்தால் விளைந்ததென்ன? அதை யோசித்துப் பாருங்கள். நிரஞ்சன் பிற்கால வாழ்வைப்பற்றி ஏன் கவலைப்படுகிறீர்கள்? நமக்குப் பணமில்லையா? அவனுக்குப் படிப் பில்லையா? துர்க்காதேவிதான் ஓடிப்போய்விடுவாளா?" என்று சொல்லி முடித்தாள்.

அதைக் கேட்டு நிர்மலேந்து புன் சிரிப்புடன், "உமா, நீ வருத்தப்படாதே. உன்னைச் சோதிப்பதற்காகத்தான் அவ்வாறு சொன்னேன். நிரஞ்சனிடம் உன்னைப்போல் எனக்கும் வாத்ஸல் யம் இல்லையா? ஆனால் செய்வதை ஆழ்ந்த யோசனை யுடனேயே செய்யவேண்டும். உன்னை மணக்கும்பொழுது பணத்தையும் பதவி யையும் பார்த்தேனா? இப்பொழுது மாத்திரம் மாறிவிட்டேன் என்று நினைத்தாயா? நீதான் வெகு நாளாக உன்னால்தான் நான் என் தாய்தந்தையர் உறவை இழந்துவிட்டேன் என்று நினைத் தாய். நான் அதைப்பற்றிச் சிறிதும் கவலைப்படவில்லை; ஆனால் எனக்கு ஒரு ஸந்தேஹம் இருந்தது. நீ இப்பொழுது ஏதோ நிரஞ்சனிடமும் ஸுதாவிடமும் வைத்திருக்கும் அன்பால் அவர் களை ஒன்று சேர்த்துவிடவேண்டும் என்று ஆத்திரப்படுகிறாய்,

ஆனல், பொதுவாய், ஸ்திரீகள் 'சீர் சனத்துக்கு' ஆசைப்படுவார்கள். நாலுபேர் ஒப்பக்கூடிய சம்பந்தம் வேண்டும் என்பார்கள். உனக்கும் அந்த எண்ணங்கள் இப்பொழுது இல்லாவிட்டாலும் பின்னல் தோன்றலாம் என்ற ஸம்சயம் இருந்தது. பின்னல் கதாதர் நமக்கிசைந்த சம்பந்தியில்லை என்று தோன்றக்கூடாது. சீர்செய்தது போதாது என்று தோன்றக்கூடாது. கந்யாரத்நத்தை விடச் சிறந்த ரத்நம் கிடையாது என்ற நிறைவு புத்தி தோன்ற வேண்டும். இவற்றையெல்லாம் யோசித்துச்சொல்'' என்றான். தவித்துக்கொண்டிருந்த உமாவின் மனம் சாந்தி அடைந்தது. சிறிதும் தயக்கம் இல்லாமல், "யோசனை எல்லாம் செய்தாய் விட்டது. என் பிள்ளையின் வாழ்வைவிட எனக்கு ஒன்றும் பெரிதில்லை. நான் பணத்திலும் பதவியிலும் பிறக்கவில்லை. நாலுபேர் ஒப்ப நான் இதுவரை இருக்கவில்லை. நமக்கு இருக்கும் பணமே போதும், நமக்கும் நம் குழந்தைகளுக்கும். பிறர் பொருளுக்கு நாம் ஏன் ஆசைப்படவேண்டும்? பணமில்லாதவரே பணத்துக்கு ஆசைப்படவேண்டும். ஆகையால் என்னைப்பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டாம். உங்கள் ஸம்மதம் என்ன?'' என்றாள். நிர்மலேந்துவின் முகம் மலர்ந்தது. தன் அரிய மனைவியை அணைத்துக் கொண்டு, "எனக்கு நீ வாய்த்ததுபோல், நிரஞ்சனுக்கு ஸுதா வாய்த்தால் போதும். அவளை உன் குழந்தையாகவே பாவித்து நீயே பழக்கிவைத்திருக்கிறாய். உன்னைப்போலவே அவளும் குணவதியாகவும், பாக்யவதியாகவும், கிருஹலக்ஷ்மியாகவும் உன்னுடனேயே என்றும் இருக்கட்டும்'' என்றான்.

மறுநாள் இருவரும் கதாதர் வீட்டுக்குச் சென்றார்கள். அவர்களைக் கண்டதும் ஸுதாவுக்கு என்றும் இல்லாத வெட்கம் ஏற்பட்டது. தலைகுனிந்தவண்ணமே சென்றுவிட்டாள். கதாதரும், வஸுமதியும் அவர்களை அன்புடன் வரவேற்றார்கள். சிறிது நேரம் வேறு விஷயங்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள். பிறகு உமா, "வஸு, நான் உன்னிடம் ஒரு காரியமாக வந்திருக்கிறேன். நிரஞ்சனுக்குக் கல்யாணத்துக்கு வயதாய்விட்டது. ஸுதாதான் அவனுக்குத் தகுந்த பெண் என்பது என் எண்ணம். ஆகையால் அவளை உன்னிடம் கந்யாதாநமாகக் கேட்கிறேன். நீ என்ன சொல்கிறாய்?'' என்றாள். இதைக் கேட்டதும் வஸுமதிக்குக் கண்ணீர் வந்துவிட்டது. அவள் ஸுதாவின் நிலைமையைக் கவனிக்காமல் இருக்கவில்லை. ஸுதா தன் முழுமனதுடன் நிரஞ்சனையே நேசித்து வருகிறாள் என்று இவளுக்கு நன்றாய்த் தெரியும். ஆனல் 'நிரஞ்சன் பெரிய வீட்டுப் பிள்ளை, நம் ஸுதாவுக்கு அவ்வளவு பாக்யம் ஏது' என்று நிராசையாய் இருந்தாள். இப்பொழுது

உமா தானகவே ஸுதாவைக் கந்யாதாநமாகக் கேட்டதும், அவள் நெஞ்சு அளவில்லாத ஆனந்தத்தால் வெடித்துவிடும்போல் இருந்தது. அவள் உமாவைக் கட்டிக்கொண்டு, "நீங்கள் எனக்கு அக்கா. ஸுதா உங்கள் பெண். அவளைக் கந்யாதாநமாகக் கொடுக்க நான் யார்? உங்கள் பொருளை நீங்களே எடுத்துக் கொள்ளுங்கள். ஆனல் நீங்கள் ஒன்று யோசிக்க வேண்டும். நாங்கள் ஏழை; உங்களுக்குத் தகுந்தபடி எங்களால் சீர் செய்ய முடியாது. எங்களால் உங்களுக்கு நடுச்சபையில் அவமானம் ஏற்படக்கூடாது" என்ருள். அதற்கு உமா, "சீர் ஒன்றும் எனக்கு வேண்டாம், ஸுதாதான் வேண்டும்" என்ருள். வஸுமதியும், "ஆனல் உங்கள் தம்பியைக் கேளுங்கள்" என்று கதாதரைப் பார்த்துச் சிரித்துக்கொண்டே சொன்னள். கதாதர், பாவம், என்ன சொல்வான்! ஸுதாவின் கல்யாணத்தைப்பற்றித் தன் கவலைகள் எல்லாம் சூரியனைக் கண்ட பனிபோல் ஒரு நிமிஷத்தில் மறைந்து விட்டன. அவனுக்குப் பேச்சு ஒன்றும் வரவில்லை. "எல்லாம் உங்கள் ஆசீர்வாதம்" என்ருன். ஸுதாவுக்குக் கல்யாணம் என்று கேட்டதும், அவள் தம்பி மதுசூதனன் (இப்பொழுது அவனுக்கு ஐந்து வயது) அவள் கையைப் பிடித்துக் கொண்டு குதித்தான். ஹரிதாஸியும் தான் உயிருடன் இருக்கும் போதே ஸுதா நல்ல இடம் சேர்ந்ததைப் பற்றிச் சொல்லமுடியாத ஸந்தோஷம் அடைந்தாள். நண்பர்களே! இது வெறும் கற்பனை, இப்படி எங்கும் நடக்காது என்று உங்களுக்குத் தோன்றலாம், ஆனல் கண்ணன் கருணையை யாரால்அளவிட முடியும்!

(முற்றும்)



சின்னி எலி, மின்னி எலி

பி. ஆர். இராஜ சூடாமணி

கதை கதையாம் காரணமாம்
காரணத்தில் ஒரு தோரணமாம்,
தோரணத்தில் ஒரு பூஞ்சோலை.

சிங்காரச்சோலையிலே சித்திரச் சிறுமனையாம். அந்தச் சிறுமனையிலே சின்னி என்று ஓர் எலியாம், மின்னி என்று ஓர் எலியாம்.

சின்னி எலி காடு வெட்டிக் கரம்பு வெட்டிக் கம்பு விதைத்ததாம். மின்னி எலியும் காடுவெட்டிக் கரம்பு வெட்டிக் கம்பு விதைத்ததாம். சின்னியும் மின்னியும் கம்புப்பயிர் வளர்த்தன. கம்பங் கொல்லை விளைந்தது. சின்னி எலி அரிவாளோடு கம்பு அறுக்கப் போயிற்று. மின்னி எலியும் அரிவாளோடு கம்பு அறுக்கப் போயிற்று. சின்னி எலியும் மின்னி எலியும் கம்பு அறுத்தன.

சின்னி எலி கம்பை அரைத்து அடை அடையாய்த் தட்டிற்று. மின்னி எலியும் கம்பை அரைத்து அடை அடையாய்த் தட்டிற்று.

சின்னி எலி வைக்கோல் வைத்து வேடுகட்டித் தட்டின அடையைச் சுட்டது. மின்னி எலியும் தட்டின அடையை வைக்கோல் வைத்து வேடு

கட்டிச் சுட்டது. சுடும் போது, ஆவிபட்டு மின்னி உடல் கொப்பளித்துப் போயிற்று. மின்னி சொல்ல முடியாத வலியினால் கஷ்டப்பட்டது. அதனால் பேசவும் முடியவில்லை.

மின்னி எலி படும் பாட்டைச் சின்னி எலி கண்டது; கண்டு, விம்மி விம்மி, 'கீச்! கீச்! காச்! மூச்!' என்று கத்திக் கத்தி அழுதது.

இதைக் கண்ட பாயும் படுக்கையும், "சின்னி! சின்னி! ஏன் அழுகிறாய்?" என்று கேட்டன. அதற்குச் சின்னி,

"மின்னி எலி படும் பாடு
சொல்ல முடியாதே.
அடை சுட்டு ஆவிபட்டு
அவஸ்தைப் படுகிறாளே,
கீச்! கீச்! காச்! மூச்!"

என்று கத்திக் கத்தி அழுததாம். அதைக்கேட்ட உடனே "பார்க்கப் பொறுக்க மாட்டேன்" என்று சொல்லிப் பாய் படுக்கை எல்லாம் சுருண்டு உருண்டு வருத்தப்பட்டன.

பாயும் படுக்கையும் சுருண்டு உருளுவதைக் கண்ட கதவு,

"பாயே, பாயே, ஏன் சுருண்டுருண்டாய்
படுக்கையே, படுக்கையே,
ஏன் சுருண்டுருண்டாய்!"

என்று கேட்டதாம். அதற்குப் பாயும் படுக்கையும்,

"மின்னி எலி படும் பாடு
சொல்ல முடியாதே.
அடை சுட்டு ஆவிபட்டு

அவஸ்தைப் படுகிறாளே.
அதைக் கண்டு சின்னி எலி
விம்மி விம்மிப் புலம்பி
அழுவதன் அலங்கோலம்
பார்க்க முடியாதே.

பார்க்கமுடியாமல் நாங்கள் சுருண்டு உருண்டோம்" என்றதாம்.

அதைக் கேட்ட கதவு, "காணக் கலங்கினேனே" என்று சொல்லித் தன்னைச் சாத்திக் கொண்டது.

அதைக்கண்ட ஜன்னல், "சகிக்க முடியாத செய்தியம்மா" என்று சொல்லித் தன்னை மூடிக்கொண்டதாம்.

அதைக் கண்ட தோட்டம், "சொல்லித் தொலையாது துக்கம்" என்று சொல்லிச் சித்திரச் சிறுமனையைச் சூழ அங்கும் இங்கும் வட்டமிட்டதாம்.

அதைக் கண்ட ஆலமரம், "அடக்க முடியாத துயரம்" என்று சொல்லி அப்படியே அசையாமல் நின்றதாம்.

அதைக் கண்ட பசுவும், "பார்க்கப் பரிதாபம்" என்று சொல்லிப் பசும்புல் மேயாமல் நின்றதாம்.

அதைக் கண்ட ஆச்சியார், "அம்மம்மா! ஆரிடம் சொல்வேன்" என்று சொல்லி நாச்சியார் வீட்டுக்குக் கொண்டு போன பாலை எல்லாம் கீழே சிந்தி விட்டாள்.

அதைக்கண்ட நாச்சியார், "நான் என்ன செய்வேனோ" என்று மூச்சும் இன்றிப் பேச்சும் இன்றி விழுந்தாளாம்.

நாச்சியார் விழுந்ததை நாகன் வீட்டுக் கழுதை கண்டதாம். அது பல்லை இளித்து, வாயைத் திறந்து,

“மின்னி எலி படும்பாடு
சொல்லமுடியாது.

அடைசுட்டு ஆவிபட்டு
அவஸ்தைப் படுகிறாளே.

அதைக் கண்டு சின்னி எலி
விம்மி விம்மிப் புலம்பி
அழுவதன் அலங்கோலம்
பார்க்க முடியாது.

பார்க்க முடியாது என்று
பாய் படுக்கை சுருண்டனவே.

காணக் கலக்கம் என்று
கதவுதன்னைச் சாத்தியது.

சகிக்க முடியாது என்று
ஜன்னல் தன்னை மூடியது.

சொல்லித் தொலையாது துக்கம்
என்றழுது சோலை சுற்றிச்
சூழ்ந்ததே சிறு மனையை.

அடங்காத் துயரத்தால்
அசையவில்லை ஆலமரம்.

பார்க்கப் பரிதாபம் என்று
பசுவும்புல் மேய வில்லை.

ஆரிடம் அம்மா! சொல்வேன்
என ஆச்சியும் பால் சிந்தினளாம்.

நான் என்ன செய்வேன் என்று
நாச்சியும்கீழ் விழுந்தனளாம்.

அறிவு கெட்ட மூடர்களே!
ஆவிபட்ட மின்னிக்கு
ஆறுதலும் தேறுதலும்
ஏதொன்றும் சொல்லாமல்

“அழுதழுது இருப்பதனுல்
ஆனபலன் என்ன கண்டீர்?

என்று, “வாள்! வாள்! ஏங்! ஏங்! வாள்! வாள்!” என்று கத்திற்று.

கழுதை கத்தின சத்தம் கேட்டு நாச்சியார் விழித்துக்கொண்டாள். நாச்சியார் எழுந்து ஆவிபட்ட மின்னிக்கு மருந்து செய்து கொண்டுவந்து போட்டாள். கழுதை கத்தின சத்தம் கேட்டு ஆச்சியார் பசுவின் பாலைக் கறந்து மின்னிக்குக் கொடுத்தாள். கழுதை கத்தின சத்தம் கேட்டுப் பசுவும் வால் மயிரால் மின்னிக்குச் சாமரம் வீசினது. கழுதை கத்தின சத்தம் கேட்டு ஆலமரம் அசைந்து அசைந்து காற்று வீசிற்று. கழுதை கத்தின சத்தம் கேட்டுத் தோட்டம், சுற்றிச் சூழ்ந்து திரியாமல், மின்னிக்குப் பூவாலே மெத்தை இட்டது. கழுதை கத்தின சத்தம் கேட்டு ஜன்னல் கதவு திறந்தது. கழுதை கத்தின சத்தம் கேட்டுக் கதவும் திறந்து கொண்டது. கழுதை கத்தின சத்தம் கேட்டுப் பாயும் படுக்கையும் விரிந்துகொண்டன. கழுதை கத்தின சத்தம் கேட்டுச் சின்னி எலி, சிறுமனையில் மின்னி எலிக்கு ஆறுதலும் தேறுதலும் சொல்லிற்று. மின்னி எலி சுகம் அடைந்தது. பின்பு, சின்னி எலியும், மின்னி எலியும் அடையைப் பிட்டுப் பிட்டுத் தின்றனவாம்.

கதை முடிந்தது. கத்தரிக்காய் காய்த்தது.

ஜலதோஷம்

சிலருக்கு இலகுவில் ஜலதோஷம் காண்கின்றது; மற்றும் சிலருக்கு ஜலதோஷம் காண்பதே அரிதாக இருக்கிறது. இந்த வித்தியாசத்துக்குக் காரணம் யாதென்பதை எவரும் இது வரையிலும் கண்டுபிடிக்கவில்லை. அவரவர்களின் பரம்பரையின் சம்பந்தம் ஒரு காரணமாகலாம். உணவு, சாதாரண ஆரோக்யம், ஓய்வு, பழக்கவழக்கங்கள் முதலியனவும் பிறவும் காரணமாக இருக்கலாம். பல இடங்களிலிருந்து வந்த புள்ளி விவரங்களை நோக்கும்போது சாதாரணமாக ஜலதோஷம் வருஷத்தில் மூன்று முறை மும்முரமாக வேலை செய்கிறதென்று தெரிகிறது. அக்டோபர்—நவம்பர் இடையில் மழைக்கால ஜலதோஷமும், ஜனவரி—பிப்ரவரி மத்தியில் பனிக் கால ஜலதோஷமும், எப்ரல்—மே மாதங்களின் நடுவில் கோடைக்கால ஜல தோஷமும் மேற்கூறிய மூன்றும். இவை மூன்றும் நமக்கு ஏற்பட்ட காலத் தில் தொற்று வியாதியாக வியாபிப்பதேன் என்று இன்னும் சரிவர விளங்க வில்லை. ஒருகால் இக்காலங்களில் ஜலதோஷத்துக்குக் காரணமான கிருமி கள் சுறு சுறுப்பாக வேலை செய்தல் கூடும்; இல்லையேல் மனிதர்களிடம் ஜல தோஷத்தைத் தடுக்கும் சக்தி இக்காலங்களில் சராசரி விகிதத்திலும் குறைந் திருக்கலாம். இது தொற்று நோயா யிருக்கிறபடியால் ஜலதோஷங் கண்ட வர்களுடன் நெருங்கிப் பழகுதல் கூடாது. சரீரத்தை அதிகக் குளிர்ச்சியாக் கிக் கொள்ளாமலும் தன் சக்தியை மீறின உடலுழைப்பை மேற்கொள்ளா மலும் இருத்தலாலும், மீன் எண்ணெயை (Cod liver oil) உட்கொண்டு வருவதாலும் குளிர்கால மழைக்கால ஜலதோஷங்களைத் தடுத்தல்கூடும்.

—அமெரிக்கன் மெடிஸின்.

குழந்தைகளுக்குத் தேன்

"சிசுக்களுக்குத் தேனைக் கொடுப்பது தவறு என்ற எண்ணம் சில ரிடம் தோன்றியிருப்பது வருந்தத் தக்க விஷயமாகும்; கார்போஹைட்ரேட், வைடமின்—பி (B) முதலியவை சம்பந்தப்பட்ட உணவுப் பொருள்களைத் தேன் சுலபமாக ஜீரணிக்கச் செய்யும். தவிர, தேனினிடம் உள்ள இரும்புச் சத்து (Iron Phosphate) குழந்தைகளுக்கு அத்தியாவசியமானதாகும். ஜீரண சக்தியை ஒரே நிலையில் கொண்டு போவதில் தேன் சிறந்த பொரு ளாகும். ஸ்விட்ஜர்லாண்ட் தேசத்தில் பாலுடன் ஓரளவில் தேனையும் கலந்து கொடுக்கப்பட்ட குழந்தைகள் அதிக கனமுள்ளனவாக வளர்ந்து புஷ்டியுடன் இருந்துவந்ததை நான் பார்த்திருக்கிறேன்' என்று ஜே. கோம்பி என்பவர் கூறுகிறார்.

—மெடிகல் வோர்ல்ட்.

சிறந்த தோற்றமுடையவர்கள்

ரஷ்யாவில் ஸ்டெப்பீஸ் புல்தரையிலும் சைபீரியாவிலும் வசிக்கும் குடியானவர்களே உலகிலுள்ள மற்றைய மக்களைவிட மனமகிழ்ச்சியிலும் உடல் தோற்றத்திலும் மேம்பட்டவர்களாகக் காணப்படுகிறார்கள். அதற்குக் காரணம் அவர்கள் உட்கொள்ளும் இயற்கையான எளிய ஆகாரமேதான். காய்கறிகள், கோதுமை, ஓட்ஸ், பார்லி முதலியவைகளே அவர்களின் உணவுப்பொருள்களாம். நல்ல பழக்க வழக்கங்களையும் உடையவர்களாக இருக்கிறார்கள். அடுத்தபடியாக ஜுலூஸ் என்பவர்களும் சீக்கர்களும் சரீரபுஷ்டியில் பேர்போனவர்கள். இங்கும் அவர்களின் சாதாரண உணவும் பழக்கவழக்கங்களுமே காரணமாகும். வெள்ளையர்கள் தங்கள் பழக்கங்களைப் புகுத்தாதமுன்பு, காபிர்களும் (Kaffirs) திடகாத்திரமுள்ளவர்களாகவும் கஷ்டங்களைச் சகிக்கும் சக்தி வாய்ந்தவர்களாகவும் இருந்தனர். அக்காலம் இப்பொழுது பழங்கதை ஆய்விட்டது என்றாலும், இன்னும் நவீன நாகரிகம் பரவாத கிராமங்களில் உள்ள காபிர் பெண்கள் இக்காலத்திலும் ஆகாரமில்லாமலே சர்வசாதாரணமாக நீண்ட தூரம் பெரிய சுமைகளைச் சுமந்துசெல்லும் சக்தியைப் பெற்றிருக்கிறார்கள். காரணம் அவர்களின் எளிய உணவு முறையேதான். [எளிய உணவு என்பது வறிய உணவு அன்று.]

—ஹெல்த்.

பாலை எளிதில் ஜீரணிக்க

சில பசுக்களின் பால் எளிதில் குழந்தைகளுக்கு ஜீரணமாகும். ஆனால் சில பசுக்களின் பால் வயிற்றில் போனதும் அங்கே தங்கித் தயிராகத் தோய்ந்து, ஜீரணமாகாமல், தொந்தரவைத் தருகிறது. பால் தயிராக மாறாமல் இலகுவில் ஜீரணமாக பென்ஸல்வேனியா ஸர்வகலாசாலையைச் சார்ந்த லெஸ்லி ஏ. சேம்பர்ஸ் என்பவர் ஒரு நூதன முறையைக் கண்டுபிடித்திருக்கிறார். அதாவது, மின்சார சக்தி மூலம் பாலில் பலத்த ஓசையை எழுப்ப வேண்டும். (திரவபதார்த்தத்தில் இந்த மாதிரி ஓசை எழுப்பும் முறை நீர்முழுகிக் கப்பல்களுக்குத் தந்தி அனுப்பும் வகையில் கையாளப்பட்டு வருகிறது.) அந்த ஓசையைப் பெற்ற பால் இலகுவில் ஜீரணமாகக்கூடிய தன்மையை அடைகிறது.

—ஸயன்ஸ் சர்விஸ்.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
21184
சென்னை-600 008

கலைமகள்

உயரிய கலிகோ பயிண்ட் செய்த அழகிய தொகுதிகள்

பல அரிய விஷயங்கள் கொண்டவை

அழகிய சித்திரப் படங்கள் நிறைந்தவை

1-ம்	தொகுதி	712	பக்கங்கள்
2-ம்	தொகுதி	704	பக்கங்கள்
3-ம்	தொகுதி	664	பக்கங்கள்
4-ம்	தொகுதி	680	பக்கங்கள்
5-ம்	தொகுதி	690	பக்கங்கள்
6-ம்	தொகுதி	634	பக்கங்கள்
7-ம்	தொகுதி	668	பக்கங்கள்
8-ம்	தொகுதி	684	பக்கங்கள்

ஒவ்வொரு தொகுதியின் விலை ரூ. 2-6-0

(தபால் அல்லது ரயில் பார்சல் செலவு தனி)

'கலைமகள்' 9-ம் தொகுதி

ஆரம்பம் தை மீ (January 1936)

கலைமகள், வருட சந்தா (தபால் செலவுடன்)

இந்தியா, பர்மா, ஸிலோன் ரூ. 4-0-0

பினங், சிங்கப்பூர், நேடால் ரூ. 6-0-0

தனிச் சஞ்சிகை அணா 6 — 36 சதம்

:: மானேஜர், கலைமகள், மயிலாப்பூர், சென்னை ::

Regd. No. M. 2748] [Vol. IX, No. 5

அசோகா
சுகந்த பாக்குத்தூள்

போலவே வேஷந்தரித்து அநேக போலி பாக்குத்தூள்கள் கிளம்பி விட்டன. இந்த 'ராவண' சந்நியாசிகளைக் கண்டு ஏமாந்து விடாதீர்கள்! உண்மை அசோகா பாக்குத்தூள் பாக்கெட்டின் மேல் ரிஜிஸ்டர் நெ. 1506. என்றிருக்கும். இதைப் பார்த்து வாங்குங்கள். அசோகா பாக்குத்தூளின் கீர்த்திக்குக் காரணம் அதன் உண்மை உயர்வு.

REGD. NO.
1506

தயாரிப்பவர்:—
M. K. கிருஷ்ண செட்டி,
கோயமுத்தூர்

ஏஜண்டுகள்: கனகய்ய செட்டி & கோ.,
105. நைனியப்ப நாய்க்கன் தெரு,
பி. டி. மதராஸ்

மயிலாப்பூர், மெட்ராஸ் லா ஜர்னல் அச்சுக்கூடத்தில் அச்சிடப்பட்டு, ரா. நாராயண ஐயர், பி.ஏ., பி.எல்., அவர்களால் பதிப்பித்துப் பிரசுரம் செய்யப்பட்டது.